
Not for sale

நவம்பர் - டிசம்பர் 2009

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



## நன்றியுரைத்தல்

நெஞ்சு நிறைந்த துதிகள் • ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக நன்றியுரைத்தல்


துதியின் பலி • துதி மற்றும் மகிமையின் கருவிகள் • நன்றியுணர்வு கொண்ட மனநிலை

சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் நன்றியுரைத்தல் • துதியின் கீதம்

புதிய வருடத்திற்கான சிந்தனைகள்

நன்றியுரைத்தல்

# ஆதியிலே



நன்றியுரைத்தல் ஒரு அமெரிக்க விடுமுறையாகும். ஒரு தேசமாக நாம் அனுபவிக்கும் மகத்தான பரிசை இது அடையாளப்படுத்துகிறது. மேலும் அனைவரின் நன்றியறிதல்களை பொதுவாக இது வெளிப்படுத்துகிறது. இப்படிப்பட்ட ஒரு ஏற்ற வாய்ப்பை, கிறிஸ்துவர்கள் தாங்கள் பெற்ற அளவற்ற ஆசீர்வாதங்களுக்காக பரலோக பிதாவுக்கு நன்றிகளை ஏறெடுப்பதற்கு பயன்படுத்துகிறார்கள். இந்தப் பிரதியில் நாம் பெற்ற அநேக ஆசீர்வாதங்களுக்கு எவ்விதங்களில் தேவனுக்கு துதிகளை ஏறெடுப்பது என்று பல கோணங்களில் எடுத்துக்காட்டப்படுகிறது. நாம் செலுத்தும் நன்றிகள், நாம் தேவனை ஆராதிப்பதின் பெரும் பகுதியை கொண்டிருப்பதையும் இது பிரதிபலிக்கிறது.

கடுமையான சூழ்நிலைகளிலும் புதிய தேசத்தின் ஆசீர்வாதங்களை கொண்டாடுவதே - முதலில் நாம் ஏறெடுக்கும் நன்றிகள் என்று *முழு இருதயத்தோடு துதிப்பது* என்ற கட்டுரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் இக்கட்டான சூழ்நிலைகளிலும் நாம் ஏற்ற ஆவியோடு தேவனுக்கு ஏறெடுக்கும் நன்றிகளை சரியாக செலுத்துகிறோமா என்று நம்மை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையில் நாம் களிக்கூறும் விசேஷித்த நன்மைகளுக்காக நாம் தேவனை புகழவேண்டிய காரியங்களைக் குறித்து *ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக ஏறெடுக்கப்படும் நன்றிகள்* என்ற தலைப்பில் விவரிக்கப்பட்டுள்ளது. *துதியின் பலி* என்ற கட்டுரையில் லோகாஸாக இருந்து, மனுஷனாக அபிஷேகம் பெற்ற நம்முடைய இரட்சகரின் ஜீவன் துல்லியமாக வெளிப்படுத்துகிறது. இயேசு தன்னுடைய தனிமையிலும், பாடுகளிலும் தேவனை துதிக்கக்கூடிய நோக்கத்தை தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டு, தேவனுடைய மகிமையை பிரதிபலித்தார் என்பதும் தெளிவாக காட்டப்பட்டுள்ளது.

இசைக் கருவிகள் வாசிக்கப்பட்டு தேவனுக்கு மகிமை சேர்த்த பல வசனங்களையும், நம்முடைய சொந்த வாழ்க்கையிலும் சிறப்பாக அவைகளை அப்பியாசப்படுத்துவதற்கும் *இசை கருவிகளினால் தேவனை மகிமைப்படுத்தி துதிப்பது* என்ற கட்டுரையில் ஆராயப்படுகிறது.

இயேசு எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுத்தார் என்பதை அவர் நடப்பித்த அநேக அற்புதங்கள் மற்றும் அவர் சொன்ன உவமைகளை ஆதாரமாக கொண்டு *நன்றியுணர்வு கொண்ட மனநிலை* என்ற கட்டுரையில் மிக தெளிவாக எடுத்துக்காட்டப்படுகிறது.

நம்முடைய கடுமையான சோதனைகளிலும், நம்முடைய ஆழமான உணர்வுகளை வெளிப்படுத்த அநேக கீர்த்தனைகளை பயன்படுத்தலாம் என்று *சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் நன்றியுரைத்தல்* என்ற தலைப்பில்கட்டிக்காட்டப்படுகிறது. இதில் சில கீர்த்தனைகளும் கொடுக்கப்பட்டுள்ளது.

*துதியின் கீதம்* என்ற தலைப்பில் 145ம் சங்கீதம் வசன வாரியாக ஆராயப்பட்டு, இந்த பூமியின் மேல் தேவன் ஒருவரே சகலத்திலும் சகலமாக இருப்பவர் என்றும், சகல தீமைகளை முடிவுக்கு கொண்டுவந்த பின், முழு மனுக்குலத்தையும் நித்திய ஜீவனுக்குள் வரவேற்க போகிறார் என்றும் இந்த பாடம் நிரூபிக்கிறது.

தேவனுடைய ஜனங்கள் பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தி, துதிப்பதற்கு தாங்கள் பெற்ற தாலந்துகளை, முழுமையாக பயன்படுத்துவதற்கு *புதிய வருடத்திற்கான சிந்தனைகள்* என்ற தலைப்பில் அனைவரும் அழைக்கப்பட்டு, இந்த புது வருடத்தில், தங்களை புதுப்பித்துக் கொண்டு, செயலாற்ற ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

தேவனுடைய திட்டங்களை கற்றுக்கொண்டு, அவர் நமக்கு செய்த நன்மைகளுக்காக ஞானமாக ஏற்ற துதிகளை செலுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்று ஒவ்வொரு கட்டுரையும் நமக்கு வலியுறுத்துகிறது. நம்முடைய சகலவிதமான துன்பங்களிலும் விசுவாசத்தை தக்கவைத்துக்கொள்ளவும், எல்லா நேரங்களிலும் மனத் தாழ்மையோடு இருக்க இது பயன்படுகிறது. மீனின் வயிற்றிலிருந்து யோனா கதறியதைபோல் நாமும் தேவனை நோக்கி - "நானோவெனில் துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன், நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன், இரட்சிப்பு கர்த்தருடையது" என்போமாக. (யோனா 2:9,10)

நவம்பர்/டிசம்பர்


| | |
|---|---|
| ஆதியிலே (நன்றியுரைத்தல்) .................... | 19 |
| நெஞ்சு நிறைந்த துதிகள்.................... | 20 |
| நம்முடைய அனைத்து அனுபவங்களையும் நம்முடைய உயர்ந்த பட்ச நலனை நோக்கி தேவன் வழிநடத்துவதினால், அவர் நம்மை எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பதை எதிர்பார்க்கிறார். | |
| ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக நன்றியுரைத்தல் .......... | 24 |
| தேவனை அறிவதும், இயேசுவை பிரிந்து பேசுகிறவராக பெற்றிருப்பதும், நம்மை ஆதரிக்க ஒரு ஆவிக்குரிய குடும்பத்தை பெற்றிருப்பதும் ஒரு ஆசீர்வாதமே. | |
| துதியின் பலி ..... | 28 |
| தேவனுக்கு ஏறெடுக்கப்படும் உயர்ந்தபட்ச துதி, தத்தம் செய்தலே என்று இயேசு நமக்கு காண்பித்திருக்கிறார். | |
| துதி மற்றும் மகிமையின் கருவிகள்............... | 32 |
| ஆராதனைகளில் இசைக்கருவிகளை பயன்படுத்துவதை இருநூற்றுக்கும் மேற்பட்ட வசனங்கள் ஊக்குவிக்கின்றன. | |
| நன்றியுணர்வு கொண்ட மனநிலை.................. | 36 |
| உண்மையான நன்றியுணர்வு தூய்மையான உள்ளத்தின் அறிகுறியாகும். அது மனித வெளிபாடுகளில் மிக முக்கியமானதொன்றாகும். | |
| சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் நன்றியுரைத்தல்.......................................... | 41 |
| சங்கீதங்களை பாடுதல் ஒருவருக்கொருவர் பரிசுத்தப்படுத்திகொள்வதற்கும், நொறுங்குண்ட ஆவியை ஆறுதல் படுத்தவும் பயன்படுத்தவேண்டும். | |
| துதியின் கீதம்............................................ | 44 |
| சங்கீதம் 145 குறித்த வசன வாரியான ஆராய்ச்சி | |
| புதிய வருடத்திற்கான சிந்தைனைகள்..... | 49 |
| கர்த்தருடைய ஊழியத்தில் நம்முடைய தாலந்துகளை நாம் எப்படி பயன்படுத்துகிறோம் என்று இந்த வருடத்தின் முடிவில் சற்று நின்று சிந்திப்போம். | |
| தீர்க்கதரிசனத்தில் இன்று .. | 53 |

# நெஞ்சுருக்கும் துதிகள்



"கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன், உம்முடைய அதிசயங்களை யெல்லாம் விவரிப்பேன்." - சங்கீதம் 9:1

Tim Thomassen

அமெரிக்கவாசிகள், தாங்கள் பெற்ற இருப்பிடங்களுக்காகவும், உடைக்காகவும், நல்ல அறுவடைக்காகவும், அளவற்ற நன்மைகளுக்காகவும் விடுமுறைதோரும் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுத்தார்கள். அக்காலத்தில் உள்ளவர்களைக் காட்டிலும் இன்று நாம் அதிகமான நன்மைகளை அனுபவித்துக் கொண்டிருந்தாலும், அவர்கள் பெற்ற நன்மைகளுக்காக நம்மைக் காட்டிலும் தேவனுக்கு அதிக நன்றியுள்ளவர்களாக இருந்தார்கள்.

தேவனுடைய ஆசீர்வாதங்களை ஒப்புக்காக எடுத்துக்கொள்ளும் அநேகர் இன்றைக்கும் நம்மத்தியில் உள்ளனர். இது புதுமையான காரியமல்ல. இயேசு குணப்படுத்தின பத்து குஷ்டரோகிகளை பற்றி வேதாகமம் ப்திவு செய்திருக்கிறது. (லூக்கா 17:11-19) இவர்கள் அனைவரும் மரணத்திற்கு ஏதுவான வியாதிப்பட்டிருந்தார்கள் அனைவரும் அவருடைய இரக்கத்திற்காக மன்றாடினார்கள். அனைவரும் சொஸ்தமாக்கப்பட்டார்கள். ஆனால் ஒரே ஒரு சமாரியன் மட்டும் இயேசுவுக்கு நன்றி சொல்ல திரும்பி வந்தார். நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம் என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். அந்த ஒன்பது பேரினுடைய குணநலன்கள் நிச்சயமாக நமக்குள் இருக்கலாகாது.

## நன்றிகளை ஏறெடுக்கும் விதங்கள்

"உப்பில்லா பண்டம் குப்பையிலே" என்று உப்பை பற்றிய ஒரு சிறியவன் விவரித்தான். அதுபோல, நன்றியுள்ள உணர்வுகள் இல்லாவிட்டால் நம்முடைய வாழ்க்கையும் பிரயோஜனமற்றதாகிவிடும். உண்மையான நன்றியுணர்வுள்ள ஆவியை பெற்றவர்கள்,பாதகமான சூழ்நிலைகளிலும், இக்கட்டான சோதனைகளிலும், தான் பெற்ற அனைத்து நன்மைகளுக்காகவும் தேவனை துதிப்பார்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்க, வருடத்தில் ஒவ்வொரு நாட்களிலும், தேவனுக்கு நன்றிகளை ஏறெடுப்பதை நம்முடைய சிறந்த குணலட்சனங்களாக இருக்கவும், அதுவே நம்முடைய வாழ்க்கையின் பெரும்பகுதியாக இருக்கவும் நாம் முயற்சிக்கவேண்டும். நாம் நித்தம் நித்தம் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு தொடர்ந்து தேவனுக்கு நன்றிகளை செலுத்த வேண்டும் என்ற உணர்வு நம்முடைய இருதயத்திலும், சிந்தையிலும் பதிந்திருக்கவேண்டும்.

"என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே." (சங்கீ103:2) இங்கு, "ஸ்தோத்தரி" என்ற வார்த்தை நன்றிகளை ஏறெடுத்து, தேவனை துதிப்பதை பொருள்ப்படுத்துகிறதாக இருக்கிறது. மேலும், அவரை மகிமைப்படுத்தும்படி மனத்தாழ்மையோடு முழங்கால் படியிட்டு தேவனை துதிப்பதையும் இது பொருள்ப்படுத்துகிறது. உண்மையில் நாம் முழுங்காலிட்டு பிதாவாகிய யேகோவா தேவனை ஸ்தோத்திரிக்க கடமைப்பட்டிருக்கிறோம். ஏனெனில், அவர் ஒருவர் மட்டுமே நம்முடைய எல்லா தேவைகளையும் பூர்த்திச் செய்யும், தெய்வீக ஊற்றாயிருக்கிறவர். சகலத்தையும் அவர் கைகளில் ஒப்புக்கொடுத்து அவர் மேல் முழு விசுவாசம் வைப்பவர்களுக்கு அவர்களின் தேவைக்கு அதிகமாகவே தேவைகளை பூர்த்திச் செய்ய வல்லவராகவும் இருக்கிறார்.

கடந்த காலங்களில் உள்ள தேவபிள்ளைகளை போல நம்முடைய நிலைமை இருப்பதற்கு வாய்ப்பில்லை. இருப்பினும், விசுவாசத்தின் பரிட்சையின் போதும், நம்முடைய இருதயத்தின் உண்மையான குணங்கள் வெளிப்படும்போதும், நாம் இவைகளை எதிர்நோக்குவது மிகவும் கடினமாக இருக்கிறது. ஆகவே எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும், சோதனைகள் நம்மை அமுத்தினாலும், நம்மை பிதாவாகிய தேவனுடைய கரங்களில் ஒப்புவித்து, அவர் நம்மை திருத்தி, புது சிருஷ்டிகளாக மாற்றுவதற்கு, நாம் அவரை நம்பி, விசுவாசித்து, நன்றி செலுத்தி மகிழ்ச்சியோடு எல்லா காரியங்களையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒருபோதும் இப்படிப்பட்ட சூழ்நிலைகளை தள்ளிவிடவோ, தவிர்க்கவோ கூடாது.

## புரிந்துகொண்டு மகிழும் உள்ளம்

"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள், அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது." (1தெசலோ 5:18) நாம் பெற்ற உடல் நலனுக்காகவும், நன்மைகளுக்காகவும் மட்டும் அல்ல, நமக்காக தேவன் வைத்திருக்கும் அவருடைய சித்தத்திற்காகவும் நாம் அவரை துதிக்கவேண்டும். நம்முடைய இக்கட்டான சூழ்நிலையில், தேவன் காட்டும் வழி இதுவே, என்று நாம் எப்படி உணர்ந்துகொள்வது ?

அலெக்சாந்தர் வைட்டு என்ற பிரசங்கியார்

தன்னுடைய பொதுஜெபக்கூட்டங்களை தேவனுக்கு நன்றி செலுத்தி துவங்குவது வழக்கமாக இருந்தது. கடுமையான மழை நேரத்தில் இந்த பிரசங்கியார் எவ்வாறாக தேவனுக்கு நன்றிகளை ஏறெடுக்கபோகிறார் என்று அந்த கூட்டத்திற்கு வந்த சிலர் யோசித்தார்கள். அப்பொழுது அவர் - "கர்த்தாவே, எப்பொழுதும் இப்படிப்பட்ட சீதோஷனங்கள் இருப்பதில்லை என்பதற்காக உம்மை நாங்கள் துதிக்கிறோம்" என்று ஜெபிக்க துவங்கினார். பாராட்டக்கூடிய இருதயங்கள் மந்தமான நாளையும் பளிச்சிடச்செய்யும், நீண்ட இரவுகளையும் சுருக்கிவிடும். நம்முடைய வாழ்க்கையை மட்டும் அல்ல, நம்மை சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கையும் மகிழ்விக்கும். மேலும் இது நம்முடைய ஆண்டவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுக்கக்கூடியதாகவும் இருக்கிறது.

முழு இருதயத்தோடு தேவனை துதித்து, மனப்பூர்வமாக அவருக்கு நன்றிகளை ஏறெடுக்கும் ஒருவர், தேவன் தரக்கூடியவைகளை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ள மனப்பக்குவமுள்ளவராக இருப்பார். அவர் பெற்றவைகளை தனக்கெதிராக அல்ல தனக்கான வேலைகளைச் செய்ய அவைகளை பயன்படுத்துகிறார். இப்படிப்பட்டவர்கள் அப்போஸ்தலர் பவுலுடன் சேர்ந்து -"என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை, ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு." (பிலி 4:11-13) என்று இவ்வசனங்களை கூறலாம்.

## தேவன் நமக்கு எல்லாவற்றையும் கொடுப்பார்

ஒவ்வொரு நாளிலும், உள்ள மணிநேரங்களில் நம்முடைய வெளிச்சம் அதிகதிகமாக பிரகாசிக்க நாம் செயல்படவேண்டும். நம்முடைய இருதயம் பரலோக பிதாவை துதித்து நன்றி செலுத்தக்கூடிய நிலையில் தொடர்ந்து இருக்குமேயானால் நிச்சயமாக இந்த காரியத்தை எளிதில் நிறைவேற்றலாம். "பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆனந்தசத்தத்தோடேகூடி அவர் சந்நிதிமுன் வாருங்கள். கர்த்தரே தேவனென்று அறியுங்கள், நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார், நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம். அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள். கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது." (சங்100:1-5) என்று சங்கீதக்காரன் குறிப்பிடுகிறார்.

"கர்த்தரே தேவனென்று அறியுங்கள், நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார், நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்." (சங் 100:3) தேவனே நம்மை உண்டாக்கினவர் என்று சங்கீதக்காரன் கூறுகிறார். நம்முடைய ஒவ்வொரு நடையிலும், அவருடைய கரம் நம்மைக் காத்து வழிநடத்துகிறது. ஆகவே நாம் அவர் மேல் நம்பிக்கை வைத்து, கடந்த காலத்தில் அவர் செய்த நன்மைகளுக்காகவும், இனி அவர் செய்யப்போகிற நன்மைகளுக்காகவும் நாம் அவரைத் துதித்து மகிமைப்படுத்துவோம்.

"அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்தரியுங்கள்." (சங் 100:4) ஆசாரிய வகுப்பாருக்கு இந்த வசனம் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. இவர்கள் தேவ பணிக்காக தங்களுடைய வாழ்க்கையை மனப்பூர்வமாகவும், சந்தோஷமாகவும் அர்ப்பணிப்பதற்கு, தேவன் அவர்களுக்கு பாராட்டின இரக்கங்களுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும் அவர்கள் தங்கள் நன்றிகளை ஏறெடுக்கிறார்கள்.

நான் அங்கும் இங்கும் செல்கையில், நான் எப்படி தேவனுக்கு நன்றிகளை ஏறெடுப்பது ? பரலோகபிதா என்னிடத்தில் எதை எதிர்பார்க்கிறார் ? என்ற கேள்வியை ஒருவர் கேட்கலாம். இப்படிப்பட்ட கேள்விகள் கேட்கப்பட்டு, அதற்கான பதிலும் சொல்லப்பட்டிருக்கிறது. "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்?" (சங் 116:12) மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால், நான் பெற்ற நன்மைகளுக்கு நான் என்னத்தை செலுத்துவேன் ? "இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன். கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது. கர்த்தாவே, நான் உமது அடியேன், நான் உமது அடியாளின் புத்திரனும், உமது ஊழியக்காரனுமாயிருக்கிறேன், என் கட்டுகளை அவிழ்த்துவிட்டீர். நான் உனக்கு ஸ்தோத்திரபலியைச் செலுத்தி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த

பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும், கர்த்தருடைய ஆலயத்தின் பிராகாரங்களிலும், எருசலேமே உன் நடுவிலும் நிறைவேற்றுவேன். அல்லேலூயா." (சங் 116:13-19) என்று பதில் அளிக்கப்படுகிறது.

தேவனுடைய ஜனங்களின் இருதயங்கள் எவ்வாறாக இருக்கவேண்டும் என்று இந்த சங்கீதம் எவ்வளவு அழகாக சித்தரிக்கிறது. நம்முடைய இந்த பூமிக்குரிய வாழ்க்கையில் தேவனுக்கு பிரியமானதை செய்ய, அநேக கட்டளைகள் கொடுக்கப்பட்டு, நம்மை ஊக்குவிக்கிறது. கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்? அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளாதவைகள் ஏதும் உண்டோ ? நாம் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நாம் என்னத்தை செலுத்தினோம். இந்த கேள்விக்கான பதில் - ஒன்றுமில்லை என்பதே.

## தத்தம் செய்தல், நன்றியறிதல்களை வெளிப்படுத்துவது

"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா ? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." (1கொரி 6:19,20) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கேட்கிறார் ?

மேலும் - "வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு, இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது, அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு, அவர்மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்." (1கொரிந்தியர் 8:5,6) என்று பதில் அளிக்கிறார்.

சகலமும் தேவனுடையவைகள் என்பதை ஒரு அருமையான பழைய ஏற்பாட்டின் சம்பவம் எடுத்துக்காட்டுகிறது. "இன்னும் என் தேவனுடைய ஆலயத்தின்மேல் நான் வைத்திருக்கிற வாஞ்சையினால், பரிசுத்த ஆலயத்துக்காக நான் சவதரித்த அனைத்தையும் தவிர, எனக்குச் சொந்தமான பொன்னையும் வெள்ளியையும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று கொடுக்கிறேன். அறைகளின் சுவர்களை மூடுவதற்காகவும், பொன்வேலைக்குப் பொன்னும், வெள்ளிவேலைக்கு வெள்ளியும் உண்டாயிருக்கிறதற்காகவும், கம்மாளர் செய்யும் வேலை அனைத்திற்காகவும், ஓப்பீரின் தங்கமாகிய மூவாயிரம் தாலந்து தங்கத்தையும், சுத்த வெள்ளியாகிய ஏழாயிரம் தாலந்து வெள்ளியையும் கொடுக்கிறேன். இப்போதும் உங்களில் இன்றைய தினம் கர்த்தருக்குத் தன் கைக்காணிக்கைகளைச் செலுத்த மனப்பூர்வமானவர்கள் யார் என்றான்." (1நாளா 29:3-5) அதற்கு தாவீது -"இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம் ? என் ஜனங்கள் எம்மாத்திரம் ? எல்லாம் உம்மால் உண்டானது, உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்." (1நாளா 29:14) என்று பதில் அளிக்கிறார்.

அர்ப்பணிப்பை பற்றி தாவீது மிக அருமையான காரியத்தை நமக்கு சித்தரிக்கிறார். நாம் தேவனிடத்திலிருந்து பெற்றதை அவருடைய பணிக்காக திரும்ப அவரிடமே செலுத்துகிறோம் என்பதை மிக தெளிவாக எடுத்துரைக்கிறார். நமக்கு சொந்தம் என்று சொல்லிகொள்ள எதுவும் இல்லை. நமக்குள்ள யாவும் பிதாவாகிய தேவன் நமக்கு கொடுத்தவைகள். அவர் நமக்கு கொடுக்காத காரியம் ஒன்றுமில்லை. சகலத்தையும் நாம் அவரிடமிருந்து பெற்றிருக்கிறோம். இப்பொழுது நாம் தேவனுக்கு எதை கொடுக்கவேண்டும் என்ற இக்கட்டான கேள்வி நமக்கு எழுகிறது. அனைத்தையும் நமக்காக செலவழித்து கொள்ளலாமா ? அல்லது மேலும் அவைகளை நாடித்தேடுகிறோமா ? அல்லது "நாங்கள் பெற்ற அனைத்தும் உம்முடையவைகள்" என்று தாவீது பக்தன் கூறினதைபோல் நாமும் கூறலாமா ?

தன்னுடைய ஒரே பேரான குமாரனை நமக்காக பலிசெலுத்தி, நம்மை கிரையத்திற்கு கொண்ட அவருடைய அன்பின் பரிசை நாம் ஏற்றுக்கொண்டு, அவரை புரிந்துகொண்டு "இரட்சிப்பின் பாத்திரத்தை ஏந்தி" (சங் 116:13), மகிழ வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். ஆகவே, உண்மையாக நன்றியுள்ளவர்கள், தங்களுடைய இரட்சகராம் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவருடைய சத்தத்திற்கு கீழ்படிந்து அவர்களுடைய நன்றிகளை வெளிப்படுத்துவார்கள்.

நம்முடைய பாத்திரத்தை எடுத்து கர்த்தருக்கு முன் உயர்த்துவோம். நம்முடைய முழு இருதயத்திலும், வாழ்கையிலும் நம்மால் முடிந்த வரைக்கும் தேவ பணிகளை செய்திடுவோம். இப்படியாக, நம்முடைய நன்றிகளை ஏறெடுக்கவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். மேலும், அவரிடம் பெற்றுக்கொண்டவைகளுக்கு திருப்பி செலுத்தும் கடன்கள் இவைகளே. இதுவே நாம் செலுத்தும் நன்றியுள்ளபலியாகும்.

13ம் வசனம் -"அவருடைய நாமத்தை தொழுதுகொள்ளுவேன். " என்று முடிவு பெறுகிறது. அவரை அழைக்கும்போதெல்லாம், அவர் நமக்கு பதில் அளிப்பார், என்று அவரை முழுமையாக நம்பலாம்

என்று இந்தச் சொற்றொடர் பொருள் தருகிறது: "தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள் இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்." (யாக்கோபு 4:8) என்று யாக்கோபு கூறுகிறார்.

அதிக விலை கொடுத்து நம்மை மீட்டவர், நமக்குள் இரட்சிப்பு நிறைவேறி நம்மை பூரணப்படுத்தவும் அவர் வல்லவராகவும் இருக்கிறார். நாம் அவர் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை இழந்து விடக்கூடாது. மாறாக, அவருடைய வார்த்தைகளை கடைப்பிடித்து, அவர் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களின் மேல் விசுவாசம் வைத்து, எல்லாவற்றிலேயும் தேவனுக்கு நன்றி செலுத்தக் கடவோம்.( எபிரெயர் 10:23, பிலி 1:6, 4:6)

இந்த வெளிச்சத்தில், சங்கீதக்காரனோடு சேர்ந்து "ஓ கர்த்தாவே, நாம் உமது அடிமையாக இருக்க முழுமையாக அர்ப்பணிக்கிறேன். நான் உம்முடைய ஊழியக்காரன் என்று உறுதியளிக்கிறேன். உம்முடைய பணிக்காக வாழ்ந்து, மரிப்பேன். ஆம், நான் உமக்கு மட்டுமே அடிமை. பொய்யான தேவர்களையும், மனிதர்கள் உண்டுப்பண்ணின தெய்வங்களையும், உலக சந்தோஷங்களையும், சமுதாயத்தில் அந்தஸ்துள்ள வாழ்க்கையும் இன்னும் பல காரியங்களில் இந்த உலக மக்கள் சேவித்தாலும், நான் என் கர்த்தரின் நாமத்தையே நோக்கி கூப்பிடுவேன்" என்று நம்முடைய குரலையும் உயர்த்தவேண்டும்.

அந்த அமெரிக்கவாசிகளை போல நாமும் தேவனுக்கு நன்றி செலுத்த அநேக காரியங்கள் உண்டு. நாம் பெற்ற வீடுகளுக்காகவும், உடைகளுக்காகவும், அளவற்ற ஆசீர்வாதங்களுக்காகவும் நாம் நன்றி செலுத்தலாம். எல்லாவற்றிற்கும் மேலாக நாம் பெற்ற ஆவிக்குரிய வீட்டிற்காகவும், உடைக்காகவும், அளவற்ற ஆசீர்வாதங்களுக்காகவும் நாம் நன்றிசெலுத்த கடமைப்பட்டிருக்கிறோம்.

நம்முடைய ஆவிக்குரிய வீடு என்பது நம்முடைய பரலோக தேவனின் பாதுகாப்பு. நாம் அவருடைய அரவணைப்பையும், பராமரிப்பையும், அன்பையும், வாக்குத்தத்தங்களையும் பெற்றிருக்கிறோம். எப்படிப்பட்ட வீட்டில் நாம் குடியிருந்தாலும், அவர் நமக்கு அடைக்கலமாக இருக்ககூடிய ஆவிக்குரிய பாதுகாப்பிற்கு ஒப்பிட முடியாது.


உலக பிரகாரமாக உடைகள் உடுத்துவது போல நாம் உடுத்துவிக்கப்படவில்லை. நாம் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை உடையாக பெற்றிருக்கிறோம். அந்த வஸ்திரம், நம்முடைய அபூரணத்தையும், பெலவீனங்களையும் மறைத்து தேவனுக்கு முன்பாக நம்மை நீதிமானை போல் காட்சியளிக்கச் செய்கிறது. இந்த வஸ்திரத்தை பெற்றுக்கொண்ட நாம் முடிவு பரியந்தம் அவருடைய நீதியின் மேல் விசுவாசமாக இருந்தோமானால், பசும் பொன்னை அடையாளப்படுத்தும் ஆவிக்குரிய அழியா சுபாவத்தை நாம் பெற்றுகொள்வோம். கிறிஸ்துவின் மணவாட்டியைக் குறித்து சங்கீதக்காரன் தீர்க்கதரிசனமாக பேசுகையில் - "ராஜகுமாரத்தி உள்ளாகப் பூரணமகிமையுள்ளவள், அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது. சித்திரத்தையலாடை தரித்தவளாய், ராஜாவினிடத்தில் அழைத்துக் கொண்டுவரப்படுவாள்..." (சங்கீதம் 45:13,14)

அறுவடையின் போது உச்சிதமான கோதுமை மணிகளாக இருப்பதற்கான வாய்ப்பை பெற்றிருக்கிறோம். முதற் பலன்களாக உயிர்த்தெழுவதற்கும், கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக மாறுவதற்கான வாய்ப்பை இன்று நாம் பெற்றுள்ளோம். (யாக் 1:18) நம்முடைய பாத்திரத்தில் பானம் செய்து, நாம் வாக்களித்த பொருத்தனைகளை முழுமையாக நிறைவேற்றுவோமானால், அந்த இராஜ்யத்தில் நல்ல கோதுமை மணிகளை அறுவடை செய்யும் பொறுப்புகளையும் நாம் பெறுவோம்.

முழு உள்ளத்தோடு தேவனை துதிக்க இதுவும் ஒரு காரணமாக அமைகிறது. இருப்பினும், இயேசுவின் மேல் விசுவாசம் வைக்காமல் இவைகளில் எதையும் நம்மால் செய்ய இயலாது. நம்முடைய ஆண்டவராம் இயேசு வெற்றிகரமாக தன்னை ஈடுபலியாக செலுத்தாமல் இருந்திருந்தால் நிச்சயமாக முழு மனுக்குலத்திற்கும் எந்த விதமான எதிர்காலமும் இருந்திருக்காது.

பரலோகப் பிதா நியமித்த சகல காரியங்களை நம்முடைய ஆண்டவராம் இயேசு, செய்து முடித்தார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் உறுதியளிக்கிறார். ஆகவே பிதாவாகிய தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து; நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து, பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." (1கொரி 15:20-23)

நாம் தேவனிடத்திலிருந்து பெற்ற நன்மைகளை ஒருபோதும் மறவாமல், அவருக்கு அன்றாட நன்றிகளை ஏறெடுப்பதற்கும் தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக, நம்முடைய இருதயம் அவரை துதிக்கும் துதிகளால் நிறைந்து அவருடைய அன்பில் மூழ்கக்கடவது.



# ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக நன்றியுரைத்தல்

"எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானதுபோல, மனுஷர் கைகளால் பணிவிடைகொள்ளுகிறதுமில்லை." - அப்போஸ்தலர் 17:25

Jerry Moore

சகல ஜனங்களுக்கும், மற்ற உயிரினங்களுக்கும் தேவன் தாமே ஜீவனையும், உயிர்மூச்சையும் கொடுக்கிறார் என்பதை அப்போஸ்தலர் 17:25 ம் வசனம் உறுதிப்படுத்துகிறது. உணவு, உடை மற்றும் குடியிருப்பு போன்ற தற்காலிகமான ஆசீர்வாதங்களை தேவன் நமக்கு தருகிறார் - "இவைகளையெல்லம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள், இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்." (மத் 6:32)

இந்தச் சரீரத்தில் உயிர்வாழ, தற்காலிகமாக ஆசீர்வாதங்களையும் தருகிறார். "இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள், அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்." (மத் 5:45)

சிலருக்கு அவர் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் கொடுக்கிறார் - "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம், அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்." (எபே 1:3).

"நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். "(1கொரி 2:12) "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான், அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும், அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். "(1கொரி 2:14)

தேவன் ஒரு மிக பெரிய சத்தியத்தை பேதுருவுக்கு வெளிப்படுத்தியதால் அவர் ஒரு அற்புதமான ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டார் - "சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக - நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி - யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான், மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்." (மத்16:16,17) என்றார்.

நாம் தேவனிடத்திலும், தேவன் நம்மிடத்திலும் விசேஷித்த தொடர்பை ஏற்படுத்துவதற்காக - நம்முடைய பரம பிதா நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை தருகிறார். "வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும், வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்." (1கொரி 6:18)என்று அவர் கூறுகிறார். தேவனுடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறார் என்று யோவான் நமக்கு கூறுகிறார். (1யோவான் 3:2) "இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரயேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது - பயப்படாதே, உன்னை மீட்டுக்கொண்டேன், உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன், நீஎன்னுடையவன். நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன், நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை, நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய், அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது." (ஏசாயா 43: 1,2) என்று தேவன் இஸ்ரயேலர்களை தன்னுடைய பிள்ளைகளாக எண்ணிப் பேசினார். இஸ்ரயேல் ஜனங்களுக்கு தேவையான சகலத்தையும் பிதாவாகிய தேவன் கொடுத்தது போல நம்முடைய சகலவிதமான ஆவிக்குரிய தேவைகளையும் தேவன் நமக்குக் கொடுக்கிறார். இவையனைத்திற்காகவும் நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

## "அறியப்படாத தேவனை" அறிந்துகொள்வதற்காக நாம் பெற்ற ஆசீர்வாதம்

நாம் தேவனை அறியும் அறிவைப் பெற்றிருக்கிற ஆசீர்வாதமே நாம் பெற்றிருக்கும் முதலாவது ஆவிக்குரிய ஆசீர்வாதமாகும். ஏனெனில்,

அனைவருக்காகவும் இது கொடுக்கப்பட்ட ஆசீர்வாதம் இல்லை - "எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபோது, அறியப்படாததேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்." (அப் 17:23) நம்முடைய பரலோக தந்தை தன்னையும், தன்னுடைய அற்புதமான திட்டங்களையும் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் - "நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார், அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்." (1கொரி 2:10) "அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக - பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை. உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள். அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." ( மத் 13 :11,16, 17) என்று இயேசு சொன்னார்.

நாம் தேவனைப் பற்றி அநேக காரியங்கள் அறிந்து கொள்ளும் சிலாக்கியத்தை பெற்றிருக்கிறோம். தேவன் தனக்கென்று ஒரு குடும்பத்தை ஏற்படுத்திகொள்ள விரும்புகிறார் என்பதை நாம் அறிவோம். "அவர்களைவிட்டுவிடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள், குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்றார்." (அப் 15 :14) "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன், உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடதத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." (11கொரி 9:7) என்றும் நாம் அறிந்திருக்கிறோம்.

தேவனுடைய பார்வையில் - "அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது." (1பேதுரு 3:4) மிக விலையேறப்பெற்றது என்று நாம் அறிவோம். தேவன் தன்னுடைய குமாரனோடும் மற்ற பிள்ளைகளோடு வைத்திருக்கும் நட்பை குறித்து அவர் மகிழ்ச்சியாக இருக்கிறார் என்று நாம் அறிவோம். (மத் 3: 17) ,( நீதி 8:30,31) தேவன் தன்னுடைய ஆவியை அனைவர் மேலும் பொழிந்து புது உடன்படிக்கையின் மூலம் அனைவருக்கும் தன்னைப் பற்றி போதிக்க வேண்டும் என்பதே அவருடைய திட்டமாக இருக்கிறது என்று அறிந்திருக்கிறோம். (யோவேல் 2:28, எரேமியா 31:33,34) முக்கியமாக தேவன் தன்னுடையவர்களை ஆசீர்வதிப்பார் என்றும் நாம் அறிந்திருக்கிறோம் - "நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார், அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே." (எரேமி 29:11) "என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டகசாலையிலே கொண்டு வாருங்கள், அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். " (மல் 3:10) தேவன் எவைகளை பகைப்பார் என்றும் நாம் அறிந்திருக்கிறோம். (நீதி 6:16- 19)

தேவனை அறிந்துக்கொள்வதற்காக நாம் பெற்றிருக்கும் அற்புதமான ஆசீர்வாதத்திற்காக நம்முடைய நன்றியை எவ்வாறு காட்டுகிறோம்? நாம் அவருடைய பெயரை காப்பற்றக்கூடியவர்களாகவும், அவருடைய திட்டங்களை வெளியரங்கமாக பேசக்கூடிய தேவனுடைய பிரதிநிதிகளாக இருக்கவேண்டும். அவரை அறிகிற அறிவை பெறும் ஆசீர்வாதங்களுக்காக நாம் நித்தம் களிக்கூறவேண்டும். "மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார் ,இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரே 9:24)

## நமக்காக பரிந்து பேசும் - இயேசு

இயேசு நமக்காக பரிந்து பேசுகிறவராக இருப்பதே அடுத்து, நாம் பெற்றிருக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதமாகும். "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன், ஒருவன் பாவஞ்செய்வானானால்

நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்." (1யோவான் 2:1)

இதன் தாத்பரியத்தை அறிய மோசேவின் ஜீவியத்தை எடுத்துக் கொள்ளலாம். நம்மோடு தேவன் ஒரு விசேஷித்த நட்பை வைத்திருப்பது போல தேவன் மோசேவோடு விசேஷித்த தொடர்பு கொண்டிருந்தார். இஸ்ரயேலை இரட்சிக்க மிக பெரிய இரட்சகராக மோசே இருக்கவேண்டும் என்பதற்காக அவருடைய திட்டத்திற்கு எதிரான சகல தடைகளையும் தன்னுடைய வல்லமையினால் உடைத்தெறிந்தார். நாமும் இப்படிப்பட்ட பயிற்சியை பெற்றுக்கொண்டிருக்கிறோம். மோசேயின் குணலட்சனங்களை விருத்திச் செய்ய தேவன் வனாந்திர அனுபவங்களை கொடுத்தார், அதேபோல் நம்மிடத்திலும் பல அனுபவங்களை அனுமதித்திருக்கிறார். இனி வரப்போகிற அற்புதமான காரியங்களை தேவன் மோசேவுக்கு காண்பித்தார், அதே போல வேத வசனங்கள் மூலமாக நமக்கும் காண்பிக்கிறார் - "அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி - மோசே,மோசே என்று கூப்பிட்டார். அவன் - இதோ, அடியேன் என்றான்." (யாத் 3:4) "உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன், நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார்." (உபா18:18) அப்படியிருந்தும் மோசே மேரிபாவில் தடுமாறினார். அவருக்காக பரிந்து பேச ஒருவரும் இருக்க வில்லை. மோசே வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானானுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட வில்லை.

"பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம்போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம்." (யாக் 3:3) என்று யாக்கோபு எழுதினர். "மேலும், நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது, நானோ பாவத்துக்குக் கீழாகவிற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக் கிறேன். நிர்ப்பந்தமான மனுஷன் நான், இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார் ? " (ரோம 7:14,24) என்று பவுல் குறிப்பிடுகிறார். ஆகவே நாம் ஒவ்வொரு முறை விழும்பொழுதும் நமக்காக பரிந்து பேசுகிறவர் ஒருவர் இருக்கிறார். நம்முடைய பலவீனங்களுக்காக தேவனுக்கு முன்பாக பரிந்து பேசுவதற்கு ஆண்டவராம் இயேசு இருக்கிறார். "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்." (எபி 4:16) என்ற வாக்குறுதியை நாம் பெற்றிருக்கிறோம். இப்படிப்பட்ட இரக்கம் கிருபை நிறைந்த தேவனுடைய அற்புதமான ஆசீர்வாதங்களுக்காக நம்முடைய நன்றிகளை ஏறெடுக்கவேண்டும். அதேபோல் வாய்ப்புகள் கிடைக்கும் போதெல்லாம் நம்மை சுற்றியிருப்போரிடத்திலும் நாம் இரக்கம் காண்பிக்கவேண்டும். "ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். " (எபே 4:32)

## சகோதரரோடு நம் ஐக்கியம்

அடுத்து நமக்குள் இருக்கும் ஐக்கியமே மூன்றாவது ஆவிக்குரிய ஆசீர்வாதமாகும். இந்த ஆசீர்வாதத்தை நாம் எப்படிப்பட்ட கோணத்தில் காணவேண்டும் என்பதை பவுல் கூறுகிறார் - "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக் கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு, அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார்." (1கொரி 12:18,25) நாம் ஒவ்வொருவரும் வாழக்கூடிய இடங்கள், நாம் சந்திக்கும் சந்திப்புகள் அனைத்தும் தற்செயலானது அல்ல. (யோவான் 17:6, 20, 21) இந்த குறுகிய வாசல் வழியாக பயணிக்கையில் நாம் அநேக இடையூறுகளை சந்திக்கிறோம் என்பதை தேவன் முன் அறிந்து நாம் ஒருவரை ஒருவர் தாங்கி, ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்துவதற்காக நம்மை அவர் ஒன்று சேர்த்திருக்கிறார். (கலா 6:2)

"மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து, சபைக் கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம், நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்." (எபி 10 :24,25) நம்முடைய பரலோக தந்தை அவருடைய பிள்ளைகள் ஒருமித்து வாசம் செய்வதில் அவர் மிகவும் மகிழ்ச்சியடைகிறார் - "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமானது ?" (சங் 133:1) "ஆனபடியால்

சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம். .. " (ரோமர் 14:19) என்றும் அப்போஸ்தலர் பவுல் மூலமாக தேவன் நம்மை எச்சரிக்கிறார். மேலும் "சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள், கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள். அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள், ஆவியிலே அனலாயிருங்கள், கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள். நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள். உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள். பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள், அந்நியரை உபசரிக்க நாடுங்கள்" (ரோம12:10-13) இப்படியாக நாம் இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். "சந்தோஷமாக இருப்பவர்களுடன் சந்தோஷமாகவும் துக்கமாக இருப்போர்களுடன் துக்கிக்கவும்" தேவன் விரும்புகிறார். (வசனம் 15)

"ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்." (கொலோ 3:13) இப்படிசெய்வதின் மூலம் அவர் நமக்கு தந்த ஆசீர்வாதங்களுக்கான நன்றிகளை தெரிவிக்கலாம். "ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக." பிலி 2:3,4) மேலும், நமக்குள் -கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே இருக்கக்கடவது. -( பிலி 2:5)

## அளவற்ற ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்

பரலோக தந்தையைப் பற்றி நாம் அறிந்துக்கொண்டு, இயேசு என்னும் மத்தியஸ்தரை நாம் பெற்றுக்கொண்டு, ஒரு ஆவிக்குரிய குடும்பத்தில் ஐக்கியப்பட்டிருக்கக்கூடிய சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நாம் பார்க்கும் பொழுது, நாம் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை தெளிவாக அறிந்துள்ளோம். நாம் எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று, பேதுரு தெளிவாகக் கூறுகிறார் - "மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதரசிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து..." (1பேதுரு 3:8) "தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்." (1பேதுரு 2:9) "ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்." (எபி 12:28)

சகல ஆசீர்வாதங்களின் ஊற்றும் காரணராகிய பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிப்போம்.


### உன் புதிய வருடத்திற்காக

கம்பீரமும் ஆச்சரியமான [illegible]
பழைய வருடம் ஒரு முடிவிற்கு வருகிறது
அது ஒவ்வொரு நாளுக்குமுரிய சந்தோஷங்கள் மற்றும்
ஆசீர்வாதங்கள்
சோதனைகள் மற்றும் வேதனைகள்
பதிவுசெய்துள்ளது
உங்களுக்குள் [illegible]
கிரியைகள்
அவருடைய தெய்வீக வல்லமை [illegible]
அது பிதாவினுடைய ஆச்சரியமான திட்டத்தை
நோக்கி
உங்களுக்குள் சில வளர்ச்சியைக் கொண்டு
வந்துள்ளதா ?
விசுவாசம் உறுதியும், நம்பிக்கை பிரகாசமுமாக
கடந்த வருடத்தை காட்டிலும் இருக்கிறதா ?
தேவனுடைய அங்கீகாரத்திற்கான வாஞ்சை
[illegible]
[illegible]
[illegible]
இருந்தாலும் மறுபடியும் புதிய வருடத்தின்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
பின்பு சமாதானமான [illegible]
[illegible]

*Songs of the Nightingale,p.118*

தேவனை மகிழ்விப்பதும், மகிமைப்படுத்துதலும்

# துதியின் பலி



"ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்." - எபிரேயர் 13 :15

**Erwin Kalinski**

பொதுவாக பலியையும், துதியையும் இணைப்பது எதிர்பாராததொன்று. இருப்பினும், எவ்வளவுப் பிரச்சனைகள் வந்தாலும் இயேசுவின் மீதும், சகோதரர்கள் மீதும் நாம் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துவதற்கும், நம்முடைய வார்த்தைகளும், ஜீவியமும், இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்க பயிலும் பொழுது, பலியையும், துதியையும் சேர்த்திணைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

"ஏனென்றால், எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாகப் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டுவரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளையத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும். அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுப்பட்டார். ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளையத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப்போகக்கடவோம்...." (எபிரெயர் 13:11-13) இந்த வசனம் சபை மற்றும் பாவ நிவாரண பலியையும் இணைத்துக் காட்டுகிறது. இயேசுவின் பலியின் மூலமே நம்முடைய பலி ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எப்படியிருந்தாலும் நாம் பலிசெலுத்தும் போது இயேசுவின் நோக்கத்தை நாம் வெளிப்படுத்தலாம் - "உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது, உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது." ( சங் 69:9)

சபை ஏறெடுக்கும் துதியின் பலியை புரிந்துக்கொள்வதற்காக ஒரு திறவு கோலை, எபி 13:15 ம் வசனம் காட்டுகிறது. இந்த பூமியில் நம்முடைய ஜீவியத்தை, அந்நியரும், பரதேசிகளுமாக வாழ்ந்து, தேவனுக்கு பணிசெய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம் - "தலையான நகரம் நமக்கு இங்கே இல்லை, வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்." (எபி 13:14)

## பரலோகத்திற்கு பயணிக்கும் சபை

"இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்." (எபி 11:13), "பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி...." (1பேது 2:11) நாம் இந்த உலகத்தில் பரதேசிகளாக வாழ்கிறோம். பழைய ஏற்பாட்டு விசுவாசிகளைபோல நாமும் வருங்கால இராஜ்யத்திற்கு தேவனுடைய பிரதிநிதிகளாக இருக்கிறோம். ஆகவே இப்போது நம்மை படிதேசிகளாக கருதவேண்டும். நாம் இந்த உலகத்தை விட்டு பிரிந்து வாழ்கிறோம். நம்முடைய இலக்கு, சிந்தைகள் அனைத்தும் கிறிஸ்துவின் இராஜ்யத்திற்குரியதாக இருக்கிறது.

"ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்." (எபி 13:15) தேவன் தாம் படைத்தவைகளை பகிர்ந்துக்கொடுக்க பரலோக வாசிகளையும், பூலோகவாசிகளையும் சிருஷ்டித்த நோக்கத்தின் மூலம் அவருடைய அன்பை வெளிப்படுத்தினார் என்பதை கருத்தில் கொண்டவர்களாக நாம் இப்படிப்பட்ட துதியை செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இவைகளை அவர் செய்ய வேண்டிய அவசியம் இல்லாதிருந்தும், படைத்த மனுக்குலத்தில் மேல் வைத்த அன்பினால் இவைகளை செய்ய மிக வாஞ்சையுள்ளவராக இருக்கிறார்.

தேவனுடைய அன்பு, அவருடைய சிருஷ்டிப்பில் வெளிப்படுகிறது.

தேவன் தன்னுடைய அண்டசராசரத்தை பகிர்ந்துகொடுக்க ஏன் விரும்புகிறார்? கீழ்ப்படியாமை என்னும் பாவம், இந்த பூமிக்குரிய ஜீவிகள் இவரை விட்டுப் பிரிந்து, அவரை மதியாமலும், அவருடைய நாமத்தை அசட்டை செய்வார்கள் என்று முன் அறிந்தும் அவர் ஏன் இதை விரும்ப வேண்டும்? தேவனை நேசிக்கிறோம் என்று சொல்லக்கூடிய சிலர் தேவனைப் பற்றிய தவறான கருத்தை (நரகம், நித்திய ஆக்கினை) போதித்துக் கொண்டிருக்கிறார்கள். அல்லது அவருக்கு ஒப்பாக சொரூபங்களை உண்டாக்கி தேவனுடைய நாமத்தை அவமதிக்கிறார்கள். தேவன் மனுஜனை சிருஷ்டிக்கும் போதே அவன் பாவத்தில் விழுவான் என்று முன் அறிந்து தன்னுடைய ஒரே பேறான குமாரனை "உலக தோற்றத்திற்கு முன்னே..." (வெளி

13:8) மனுக்குலத்தை இரட்சிக்க ஆயத்தம்பண்ணினார்.

இப்படிப்பட்ட தேவ அன்பின் வெளிப்பாட்டை நாம் கருத்தில் கொள்ளும் பொழுது யோவான் - "கர்த்தாவே, தேவரீர், மகிமையையும், கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர், நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்று...." (வெளி4:11) அறிக்கையிட்டதன் காரணத்தை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

தேவன் தன்னுடைய சிருஷ்டிப்பின் வேலைகளை வார்த்தையாகிய "லோகாஸ்" மூலம் துவங்கினார். இந்த லோகாஸ் மனித சரீரத்தில் வாழ்ந்த காலத்திற்கு முன் இருந்த தேவனுடைய ஒரே பேரான குமாரனானவர். தேவனுடைய சகல சிருஷ்டிப்பிற்கு முன் இவர் படைக்கப்பட்டார் என்பதை நீதிமொழிகள் தெளிவாக எடுத்துரைக்கிறது - "கர்த்தர் தமது கிரியைகளுக்குமுன் பூர்வமுதல் என்னைத் தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார். பூமி உண்டாகுமுன்னும், ஆதிமுதற்கொண்டும் அநாதியாய் நான் அபிஷேகம் பண்ணப்பட்டேன்..." (நீதி 8:22-23) அவர் துவக்கத்திலிருந்து தன்னுடைய சிருஷ்டிகருக்கு கீழ்படிந்திருந்தார் என்று வசனங்கள் குறிப்பிடுகிறது - "நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன், நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து, எப்பொழுதும் அவர் சமூகத்தில் களிக்கூர்ந்தேன்." (நீதி 8 :30) பில்லியன் கணக்கான வருடங்களுக்கு முன் இப்படிப்பட்ட ஒரு நெருக்கமான உறவு இவர்கள் மத்தியில் இருந்ததை நினைக்கையில் மிக ஆச்சரியமாக இருக்கிறது. தேவன் தன்னுடைய ஒரே பேரான குமாரன் தன்னையே ஈடுபலியாக ஒப்புக்கொடுப்பார் என்பதை தேவன் அறிந்துகொண்டதின் அடிப்படையில் தான் "அவர் உன் தலையை நசுக்குவார்" என்று ஏவாளிடம் சொன்ன வாக்குத்தத்தம் துவங்கி "பூமியில் உள்ள முழு குடும்பமும் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்று ஆபிராகாமிடம் சொன்ன வாக்குத்தத்தம் வரைக்கும் சார்ந்திருக்கிறது. இதுவே பிதாவும், குமாரனும் ஆதிகாலத்திலிருந்து கொண்ட நெருக்கமான உறவுக்கு சாட்சி பகிர்கிறது.

## தேவன், லோகாஸோடு கொண்டிருந்த உறவு

ஆதியில் அவர்களுக்குள் இருந்த நெருக்கம், இயேசு மாம்சத்தில் பிறந்த பின்னும் தொடர்ந்தது - "ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார், இதோ, ஒருகன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுயேல் என்று பேரிடுவாள்." (ஏசா 7:14) இம்மானுயேல் என்பதற்கு - "தேவன் நம்மோடு இருக்கிறார்" என்பது பொருள் (மத் 1:23)

"நீரே என்னைக் கர்ப்பத்திலிருந்து எடுத்தவர், என் தாயின் முலைப்பாலை நான் உண்கையில் என்னை உம்முடையபேரில் நம்பிக்கையாயிருக்கப்பண்ணினீர். கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன், நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்." (சங் 22:9,10) இந்த வரிகளை வாசித்த இயேசு - அவர் தேவனுடைய குமாரன் என்று தன்னை அடையாளம் கண்டு கொண்டவராக, தன்னுடைய பரலோக பிதாவின் மேல் வைத்த அன்பையும், பக்தியையும் வெளிப்படையாக காட்ட கடமைப்படிருப்பதை அவர் புரிந்திருக்கவேண்டும்.

இயேசுவின் பிறப்புக்குபின் மரியாள் மற்றும் யோசேப்புக்கு அநேக பிள்ளைகள் பிறந்தார்கள் என்று வசனங்கள் குறிப்பிடுகிறது. யாக்கோபு, யூதாஸ், சிமியோன், மற்றும் யோசே இயேசுவின் தாய் மரியாளுக்கும் அவள் கணவர் யோசேப்புக்கு பிறந்தவர்கள் ஆவார்கள். (மாற் 6: 1-3) பெண்களின் பெயர்கள் சொல்லப்படாமல் போனாலும், பன்மையில் சொல்லப்பட்டிருப்பதால், ஒருவருக்கும் அதிகமான சகோதரிகள் இருந்திருக்க வேண்டும். "அவரை குறித்து இடறலடைந்தார்கள்" என்று வசனம் குறிப்பிடுகிறது. ஏன் இவர்கள் இவ்வாறாக இடறவேண்டும் ?

ஒரு வேளை அவர்களின் தாய் மரியாள் மூலம் அந்த குடும்பத்தினர்கள், இயேசுவின் விசேஷ விதமான பிறப்பை குறித்து அறிந்திருந்தாலும், அவரை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியா என்று ஏற்றுக்கொள்ள தயங்கியிருக்கலாம். இந்தக் காரியத்தை குறித்து சங்கீதத்தில் வாசித்தறியலாம் - "என் சகோதரருக்கு வேற்று மனுஷனும், என் தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன்" (சங் 69:8) இயேசுவின் விச்சித்திரமான பிறப்பின் நிமித்தம் அவருடைய சகோதர சகோதரிகள் அவரை தனிமைப்படுத்தியிருக்கலாம். ஆனால், அவர் தேவனுடைய பணியை நிறைவேற்ற வந்தவராக இருந்தார்.

இயேசு தன்னுடைய சுவிசேஷ வேலைகளை துவங்கும் போது, இந்த ஒரு பிரச்சனையும் அவரை பின் தொடர்ந்தது. இயேசுவுக்கும், பரிசேயர் சதுசேயர்களுக்கும் இடையில், நடந்த காரசாரமான சம்பாஷனைகளை சற்று கவனியுங்கள் - "அதற்கு அவர்கள் - ஆபிரகாமே எங்கள் பிதா என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி - நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே. தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொல்லத் தேடுகிறீர்கள், ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே. நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைகளைச் செய்கிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள் - நாங்கள் வேசித்தனத்தினால்

பிறந்தவர்களல்ல, ஒரே பிதா எங்களுக்குண்டு, அவர் தேவன் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி - தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள். ஏனெனில் நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன், நான் சுயமாய் வரவில்லை, அவரே என்னை அனுப்பினார். என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள் ? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா ? நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள், உங்கள் பிதாவினுடையஇச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள், அவன் ஆதிமுதற் கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான், சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை, அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்." (யோவான் 8 :39 - 44)

அவருடைய குடும்ப வாழ்க்கையிலும், சுவிசேஷ ஊழியத்திலும், அநேக உபத்திரவங்களின் மத்தியில் இயேசு தேவனை தொடர்ந்து மகிமைப்படுத்தினார். அவருடைய ஜீவியம் உண்மையில் ஒரு துதியின் பலியாக இருந்தது.

## இயேசுவின் தனிமை

ஜனக்கூட்டத்தின் மத்தியிலிருந்தாலும், தனிமையாக இருப்பதைபோல ஒரு உணர்வை அநேகர் பெற்றிருக்கிறார்கள். இயேசு தன்னுடைய முழு ஜீவியத்தையும் விசேஷமாக, அவர் ஊழியம் செய்த 3 1/2 வருடங்களும் இப்படிப்பட்ட ஒரு தனிமையில் வாழ்ந்தார் என்பதை சற்று கற்பனை செய்து பாருங்கள். இந்த மனுக்குலத்தை அவர் பார்க்கும் போது, அவர்களின் பாவநிலையையும், அதன் விளைவுகளால் அவர் பெற்ற உணர்வுகளையும் அவரோடிருந்த பன்னிரெண்டு சீஷர்களை தவிர, இந்த பூமியில் இயேசுவை புரிந்துக்கொள்ளக்கூடியவர்கள் ஒருவருமில்லை.

இயேசுவின் சீஷர்களாலும் இயேசுவை முழுமையாக புரிந்துகொள்ள முடியவில்லை. இவர்கள் பூமிக்குரிய இராஜ்யத்தில் தங்களுடைய மகிமையை மட்டுமே சிந்தையில் வைத்திருந்தார்கள். மேசியாவின் இராஜ்யத்தில் மேன்மையான இடத்தில் தன்னுடைய இரண்டு குமாரர்களும் அமர வேண்டும் என்று ஒரு தாய் விரும்பினாள். இயேசுவின் அற்புதங்களை சாத்தானின் கிரியைகள் என்று மதத் தலைவர்கள் சாதித்தார்கள்.இவ்விதமான ஜனங்கள் மத்தியில் இயேசு வாழ்ந்தார். இப்படிப்பட்ட பாதகமான சூழ்நிலையிலும், பிதாவாகிய தேவன் மேல் அவர் வைத்திருந்த அன்பை வெளிப்படுத்தி, தொடர்ந்து அவருக்கு நன்றி செலுத்தினார். அவருடைய ஒவ்வொரு வார்த்தைகளும் கிரியைகளும், கேள்விகளுக்கான பதில்களும், சுயநலமற்ற அன்பு நிறைந்ததாக இருந்தது. இப்படியாக அவருடைய பலியின் துதி நறுமணமாக வெளிப்படுத்தப்பட்டது.

இயேசுவின் சீஷனாகிய பிலிப்பு, புரிந்துக்கொள்ளுதலில் சற்றுக் குறைவுள்ளவராக இருந்தார் என்பதை - "பிதாவை எங்களுக்கு காண்பியும்" என்று கேள்வியின் மூலம் வெளிப்படுத்தியபோது - "... பிலிப்புவே, இவ்வளவுகாலம் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா ? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான், அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய் ?" (யோவ 14:9) என்று இயேசு பதிலளித்தார். இப்படிப்பட்ட சூழ்நிலைகளை பார்க்கும்பொழுது, இயேசு ஒரு பரிபூரணமான மனுஷனாக இந்த உலகத்தில் வாழ்ந்தது எவ்வளவு கடினமான காரியம் என்பதை நாம் உணரலாம். இயேசு செய்த ஒவ்வொரு வேலைகளிலும், தேவனை துல்லியமாக பிரதிப்லித்தார் என்பதை உணர ஒருவரும் இல்லை. ஆனால், அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுவின் தனித்தன்மையுள்ள இந்த திறமையை, எவ்வளவு நுணுக்கமாக புரிந்துகொண்டார் என்பதை எபி2: 11-13ம் வசனத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார் - "எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப் படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள், இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல், உம்முடையநாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும் நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும் இதோ, நானும் தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்றும் சொல்லியிருக்கிறார்."

தன்னுடைய ஜீவனை துதியின் பலியாக ஒப்புக்கொடுப்பதற்கு குறுகிய காலமே உள்ளது என்றும், அது தன்னுடைய சிலுவையில் முடிவடையும் என்றும் இயேசு தன்னுடைய ஊழியகாலத்தின் துவக்கத்திலேயே அறிந்திருந்தார். அவருடைய நெருங்கிய நண்பர் லாசரு மரித்தபோது, இயேசு தன்னுடைய பலியைப் பற்றியும், அதனால் தேவன் மகிமைப்படபோகிற விதத்தைப் பற்றியும் அங்கு பேசினார் -"இயேசு அதைக் கேட்டபொழுது - இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது. தேவனுடையகுமாரனும் அதினால் மகிமைப்படுவார் என்றார்." (யோவான் 11:4) லாசருவை எழுப்பின பின்பும், இயேசு மீண்டுமாக அதே காரியத்தை நினைப்பூட்டினார் - "இயேசு அவளை நோக்கி - நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்." (யோவான் 11:40)

"தேவனுடைய மகிமையை" தீர்க்கதரிசியாகிய எசேக்கியேல், வானவில்லோடு ஒப்பிடுகிறார் - "மழைபெய்யும் நாளில் மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே

சுற்றிலுமுள்ள அந்தப் பிரகாசம் காணப்பட்டது, இதுவே கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருந்தது. அதை நான் கண்டபோது முகங்குப்புற விழுந்தேன், அப்பொழுது பேசுகிற ஒருவருடைய சத்தத்தைக் கேட்டேன்." (எசேக்கி1:28)

## சீஷர்கள் மேல் இயேசு கொண்டுள்ள அன்பு

"பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார். " (யோவான் 13:1) இது இயேசு தன்னுடைய சீஷர்கள் மேல் வைத்த உணர்ச்சிப்பூர்வமான அன்பின் வெளிப்பாடாகும்." அவர்களிடம் உச்சக்கட்ட அன்பைக்காட்டினார்" என்று சில மொழிபெயர்ப்பாளர்கள் சொல்லுகிறார்கள்.

அந்த பதினொரு சீஷர்களும் இயேசுவின் குடும்பத்தில் வளரக்கூடிய புது சிருஷ்டிகளானார்கள். தேவன் தன்னுடைய ஒரே பேரான குமாரனை கொடுத்து இந்த பூமியில் உள்ளவர்கள் மேல் உள்ள அன்பை வெளிப்படுத்தினார் என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது -"தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரை தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்..." (யோவான் 3:16) "தந்தருளி" என்ற வார்த்தை ஒரு செயல் முறையை குறிக்கக்கூடியதாக இருக்கிறது. அன்பு என்று சொல்லிக்கொண்டு நாம் அமர்ந்திருக்க முடியாது. அவர்களுக்குள் இருக்கும் செயல்களை வெளியரங்கமாக வெளிப்படுத்தவேண்டும்.

இப்படியாக வெளிப்படுத்தப்பட்ட இயேசுவின் அன்பைக் குறித்து, யோவான் தெளிவாக குறிப்பிடுகிறார் - "அவர் தம்முடையஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். "(1யோவான் 3:16)

இத்தகைய அன்பைக் குறித்து பவுல் மற்றொரு கோணத்தில் பேசுகிறார் - "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." (ரோமர் 5:8) இயேசுவின் அன்பின் வெளிப்பாட்டில் இதுவே உச்சக்கட்டமானதாக இருந்தது. இப்படியாக, இயேசு தன்னுடைய ஜீவனையே பலியாக அர்ப்பணித்து, தன்னால் முடிந்த வரையில் அன்பை வெளிப்படுத்தி, துதியில் பலியை செலுத்தினார். நாமும் இயேசுவைப்போல முடிந்தவரையில், எல்லா சூழ்நிலைகளிலும், அன்பை வெளிப்படுத்தி, மரணப்பரியந்தம் பலிசெலுத்தவேண்டும். இதுவே நம்முடைய துதியின் பலியாக இருக்கிறது.

"என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவு ள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது." (யாக்கோபு 1:2-4) கிறிஸ்துவுக்குள்ளான ஒரு வாழ்க்கையில், இக்கட்டான சூழ்நிலைகளை சகிக்க யாக்கோபு நமக்கு சில அறிவுரைகளை கூறுகிறார். "எல்லாவற்றிலும், சந்தோஷப்படுங்கள்" என்று அவர் கூறுகிறார். நம்முடைய பாடுகளும், மனப்பூர்வமான பலிகளாக இருக்கவேண்டும். இதுவே நாம் தேவன் மேல் வைத்திருக்கும் அன்பிற்கு ஏற்ற சாட்சியாகும்.

பலியின் மத்தியில், தேவனை துதிக்கக்கூடிய சிந்தையைப் பற்றி தாவீது விவரிக்கிறார் - "கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை." (சங் 16:8) தன்னுடைய ஒவ்வொரு சந்தோஷத்திலும், துக்கத்திலும், இயேசு தன்னுடைய பரம பிதாவை எப்பொழுதும் தனக்கு முன்வைத்திருந்தார். நாமும் இதை கடைபிடிக்கவேண்டும்.

"பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவன் மகிமைப்படுத்தக்கடவன்." (1பேது 4:12,13,16) துதியின் பலியைப் பற்றிய ஒரு தெளிவான விளக்கம் 16ம் வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்துவின் பாடுகளுக்கு பங்காளிகளாகும் வாய்ப்புகளை நாம் பெற்றிருப்பதற்காக தேவனை நோக்கி கெம்பீரமாக துதிகளை ஏறெடுப்போம். தேவன் அங்கீகரிக்கக்கூடிய பலியை செலுத்தி, நாம் அவர் மேல் வைத்த அன்பையும், இயேசுவின் மேல் வைத்த அன்பையும், சகோதரர்கள் மேல் வைத்த அன்பையும் நிரூபிப்போம் - "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து.." (எபேசி 5:19,20)

இயேசு காட்டின அன்பின் அளவுகோலை வைத்துக்கொண்டு, நம்மை நாமே தொடர்ந்து சோதித்து பார்க்கையில், நமக்கு நேரிடும் சோதனைகளில் வரும் பாடுகளை மகிழ்ச்சியோடு சகித்து, சுகந்த வாசனையான ஒரு துதியின் பலியை நாம் பரலோக பிதாவுக்கு ஏறெடுப்போம்.

# துதியின் மற்றும் மகிமையின் கருவிகள்



Daniel kaleta

"முன்னதாகப் பாடுகிறவர்களும், பின்னாக வீணைகளை வாசிக்கிறவர்களும், சுற்றிலும் தம்புரு வாசிக்கிற கன்னிகைகளும் நடந்தார்கள். இஸ்ரயேலின் ஊற்றிலிருந்து தோன்றினவர்களே, சபைகளின் நடுவே ஆண்டவராகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்." - சங்கீதம் 68:25, 26

தேவன் மனிதனை சிருஷ்டித்த நோக்கத்தையும், காரணத்தையும் துல்லியமாக நாம் இந்நாள் வரைக்கும் அறிந்து கொள்ளவில்லை. அவருடைய நாமத்தினால் அழைக்கப்பட்டவர்களும் - காலப் போக்கில் அனைத்து மனுஜரும் - தங்களுடைய சிருஷ்டிகரை மகிமைப்படுத்துவதற்கான கருவிகளாக மாற்றப்படுவதற்காக சிருஷ்டிக்கப்பட்டார்கள் என்று நாம் அறிந்திருக்கிறோம். "நான் வடக்கே நோக்கி - கொடு என்றும், தெற்கே நோக்கி - வைத்திராதே என்றும் சொல்லி தூரத்திலிருந்து என் குமாரரையும், பூமியின் கடையாந்தரத்திலிருந்து என் குமாரத்திகளையும், நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டுவா என்பேன். " (ஏசா 43:6,7)

மனுக்குலத்திற்கான மிகப் பெரிதான கற்பனையை மோசே குறிப்பிட்டிருக்கிறார் -"இஸ்ரயேலே, கேள் - நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்பு கூறுவாயாக." (உபா 6:4,5) அன்பை ஒருபோதும் அடக்கிவைக்க முடியாது, அது வெளிப்பட பல வழிகளில் முயற்சிக்கும். நம்முடைய முழு இருதயத்தோடு தேவனில் அன்பு கூற விரும்புகிறோம். நம்முடைய வாழ்விலும், நடத்தையிலும் நம்முடைய முழு ஆத்துமாவோடு, நாம் தேவன் மேல் வைத்த அன்பை செயலாற்ற விரும்புகிறோம். மேலும் நம்முடைய முழு பெலத்தாலும், மற்றவர்கள் காணும்படியாக நாம் செய்யும் வேலைகளினாலும், நாம் தேவனை முழுமையாக நேசிக்க விரும்புகிறோம்.

நம்முடைய உணர்ச்சிப்பூர்வமான காரியங்களை தேவனிடம் வெளிப்படுத்துவதற்கு அருமையான கருவியாக பயன்படக்கூடியது - நம்முடைய குரல். ஆகவே தேவன் நம்முடைய பேசும் திறனை பல தொனிகளில் வெளிப்படுத்தி மற்றவர்களுக்கு புரியும்படி பேசுவதற்கு ஏற்றவாறு அதற்குரிய அவயவயங்களை வடிவமைத்திருக்கிறார். காலப்போக்கில், இந்த ஒரு திறமை மற்றவர்களிடம் தொடர்பு கொள்வதற்கு மட்டும் இல்லாமல், நம்முடைய குரலை துல்லியமாக கட்டுப்படுத்தி விதவிதமான சுரத்தில் பாடவும், பேசவும் திறமையை தந்திருக்கிறார். அதாவது நம்முடைய குரல் பாடுவதற்காகவே வடிவமைக்கப்பட்டிருக்கிறது என்று பொருள்படுகிறது. மற்றவர்களோடு தொடர்பு கொள்வதற்காக பயன்படும் பேச்சுக்களும், தாளம் தவறாத ஒருங்கிணைக்கப்பட்ட சத்தமே பாட்டாக பாடப்படுகிறது.

இவ்வாறாக, மனிதனின் ஆக்கல் திறன், மனுஜியின் குரல்வளத்தை தவிர, சத்தங்களை தொனி வேறுபல வழிகளும் உண்டு என்று கண்டுபிடித்தது. ஒரு பொருளோடு மற்றொரு பொருள் மோதும் பொழுது, அந்த பொருளின் தரம் மற்றும் அந்த பொருளோடு மோதின வேகத்தின் அடிப்படையிலும் வெவ்வேறு விதமான சத்தங்கள் வெளிப்படும். கட்டையின் மேல் இருக்கமாக இழுத்து கட்டப்பட்ட கம்பியை, விரல்களின் ஒருங்கிணைக்கப்பட்ட அசைவினால் அதிர்விக்கும் துடித்தல் ஏற்படுகிறது. சிறிய குழாயில்,

காற்றை ஊதுவதின் மூலம் அல்லது துளை இசை கருவியின் வாய்க்கட்டையின் மூலம் இன்னும் பலவிதமான சத்தம் வெளிப்படுகிறது. வளரக்கூடிய குழந்தையின் வளர்ச்சியையும், அந்த குழந்தைக்கு தொனிகள் மேல் இருக்கக்கூடிய ஆர்வத்தையும் நாம் பார்க்கும்போது, இந்த இசைக்கான கருவிகள் ஆதிக்காலத்திலிருந்து எவ்வளவுவேகமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

சில அசைவுகள் மூலம் சில காரியங்கள் வெளிப்படுத்தப்படுகிறது. குழந்தைகளில் சினுங்குதல்களின் மூலமும், அவைகளின் அசைவுகள் மூலமும், அவர்களின் மனநிலையையும், சிந்தைகளையும் வெளிப்படுத்துவதை நாம் காணலாம். சில நேரங்களில் குழந்தைகள் ஏதோ காரியத்தை சொல்லும் போதும், அல்லது கவிதை பாடும் போதும், சீராக ராகம் அல்லது சரீரங்களை அசைப்பது வழக்கமாகவும் இருக்கும்.

பாடிக்கொண்டு வேலை செய்பவர்கள், அந்த பாட்டுக்கு இசைவாக தங்களுடைய சரீரங்களை அசைப்பார்கள். சில நேரங்களில் இதற்கு எதிரிடையாகவும் நடப்பதுண்டு. ஏனெனில், சில உலகப்பிரகாரமான காரியங்களை சீராக செய்வதற்கு நாம் இசை அல்லது பாடல்களை பயன்படுத்துகிறோம். அணிவகுத்து செல்லும்பொழுது, நாம் பாடும் பாடல்கள் அல்லது இசைக்கப்படும் பாடல்கள் நம்முடைய நடைகளை ஒருங்கிணைத்து சீராக செயலாற்ற பயன்படுத்தப்படுகிறது.

68ம் சங்கீதத்திற்கு கொடுக்கப்பட்ட தலைப்பில், ஆலயத்தை நோக்கி செல்லக்கூடிய, மகிழ்ச்சியான ஒரு விடுமுறை ஊர்வலம் பலவிதமான கலைத்திறன்களோடு, தேவனை துதித்து, பாடிக்கொண்டுபோவதை அந்த எழுத்தாளன் சித்தரித்திருக்கிறார். பாடல் குழுவினர் அந்த ஊர்வலத்திற்கு முன் சென்றார்கள். அந்த பாடல்களுக்கு இசை வாசிப்பவர்கள், ஊர்வலத்திற்கு பின் சென்றார்கள். இதற்கு இடையில் உள்ள ஜனக்கூட்டம், வாசிக்கப்பட்ட இசைக்கு பொருந்தக்கூடிய நடனங்களை ஆடி சென்றார்கள். இப்படிப்பட்ட ஒரு அணிவகுப்பை பார்க்கும் பொழுது, அங்கு பாடப்பட்ட பாடல்களின் கருத்துக்களை ஒருவர் புரிந்துக்கொண்டிருக்கமுடியும். கேட்போரின் காதுகள் இனிமையான இசையையும், அதற்கேற்றவாறு வாசிக்கப்படும் இசை கருவிகளையும் கேட்டு பரவசமடைந்து, கண்கள் ஜொலித்து, உணர்ச்சிப்பூர்வமாக தேவனை மகிமைப்படுத்தக்கூடிய காரியம் வெளிப்படுத்தப்பட்டது.

அன்பை வெளிப்படுத்த அற்புதமான வழிகள் - 1. பாடல்கள் பாடுவதின் மூலம் உங்கள் முழு உள்ளத்தோடு தேவனை மகிமைப்படுத்தலாம். 2. நடனத்தின் மூலம் -உங்கள் முழு ஆத்துமாவோடு தேவனை மகிமைப்படுத்தலாம். 3. இசைக் கருவிகளை வாசிப்பதின் மூலம் - உங்கள் முழு பெலத்தோடு தேவனை மகிமைப்படுத்தலாம். காண்பது மற்றும் கேட்பதற்குண்டான உணர்வுகள், வல்லமையோடு ஒருமித்து செயல்படும்போது, தேவனை மகிமைப்படுத்தும் காரியங்கள் பூரணப்படுகிறது. இவைகள் ஒரே நேரத்தில், இருதயத்தின் சிந்தையையும், உணர்ச்சிகளையும் தூண்டிவிடும். இவைகள் பாடக்கூடிய பாடல்களின் வார்த்தைகளை புரிந்துகொள்ளவும், வாசிக்கப்படும் இசை கருவிகளின் இசையினால் தூண்டப்பட்டு, தேவனை முழு சிந்தையோடு துதிக்க செய்கிறது. இதோடு பாடல்களோடு ஆடப்படும் நடனங்களை காணும்போது, அறிவு மற்றும் உணர்ச்சிப்பூர்வமான செய்திகளும் வெளிப்படுத்தப்படுகிறது.

இந்த மனித நிலையின் வெளிப்பாட்டை - இருதயம், ஆத்துமா மற்றும் பெலன் என்று மூன்று வழிகளில் வேதாகமம் விவரித்திருப்பது போல வேதாகம காலத்தில் பயன்படுத்தப்பட்ட கருவிகளையும் மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம். முதல் பிரிவு கம்பிகள் கொண்ட இசை கருவிகளாகும். இதற்கு எடுத்துக்காட்டாக - தாவீதின் யாழ். இது "கினோர்" என்ற எபிரேய பதத்திலிருந்து எடுக்கப்பட்ட வார்த்தையாகும். இந்த எபிரேய வார்த்தை முதலில் வயலினை குறிப்பிட்டது. இது இருதயத்தின் கருவி என அழைக்கப்பட்டது ஏனெனில், இந்த ஒரு கருவியானது, மனித குரலின் மூலம் வெளிப்பாட்டிற்குமுன் இருதயத்தின் நிலையை வெளிப்படுத்தக்கூடிய தாக இருந்தது. இரண்டாவது பிரிவு தட்டுவதால் இசை எழுப்பும் முரசு போல இசை கருவியாகும் (இதன் எபிரேய சொல்ல - டோப் ) தேவனை துதிப்பதற்காக முதல் முதலில் பயன்படுத்தப்பட்ட இசை கருவி இந்த முரசு என்று வேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (யாத் 15 :20) விதவிதமாக சத்தங்களை தொனிக்க மெலிதான தோல், உலோக தகடுகள் அல்லது மரக்கட்டைகள் பயன்படுத்தப்பட்டது. ஆகவே இப்படிப்பட்ட கருவிகளை இயற்கையாகவே நம்முடைய சீரத்தோடு ஒப்பிடலாம். இத்தகை கருவிகளால் நாம் தேவனை துதிப்பது, நம்முடைய முழு ஆத்துமாவோடு அவரை நேசிப்பதாகும். மூன்றாவதாக காற்றை பயன்படுத்தி இசை ஒலிக்கும் கருவிகளாகும். இதில் மிருகங்களின் கொம்புகள் அதிகமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. அதற்கு பின் வெள்ளியினால் பூரிகைகள் செய்யப்பட்டது. அதிகமான சத்தம் தொனித்ததால், வெகு தொலைவில் உள்ளவர்களுக்கு செய்தி அனுப்ப இந்த கருவிகள் பயன்படுத்தப்பட்டது. சரீரத்தில் பெலன் உள்ள அளவிற்கு இந்த கருவிகளின் சத்தம் அதிகரிக்கும். மேய்ப்பர்கள், புல்லாங்குழல் மற்றும் ஊது கோல்கள் போன்ற கருவிகள் வெகு இனிமையாக வாசித்தார்கள். பொதுவாக பாடல்கள், நடனம் மற்றும் இசைக் கருவிகள் மனித உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் இயற்கையான வழிகளாகும். தேவனை நேசிப்பவர்கள் இவைகளை பயன்படுத்தி சகோதர ஐக்கியத்தில் தேவனை மகிமைப்படுத்துவது ஆச்சரியமில்லை. தேவனுடைய ஜனங்கள் ஒருமித்துக் கூடுகையில் இவ்வாறாக பாடல்கள் மற்றும் இசை கருவிகள் மூலம் தேவனை

மகிமைப்படுத்துவதை, ஆராதனையில் ஒரு அர்த்தமுள்ள பகுதியாகும். இசை கருவிகள் பொதுவாக மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடியதாக இருக்கும் பட்சத்தில், அவர் அவர் தங்களுக்கு வாசிக்க தெரிந்த இசை கருவிகளை பயன்படுத்தி தேவனை துதிப்பது இயல்பானதல்லவா ? இருப்பினும், ஆராதனையின் போது, சில இசை கருவிகளை வாசிக்கவும், நடனங்கள் ஆடுவதும், சபைகளை வேறு விதமாக நடத்திவிடுமோ என்ற அச்சத்தினால் இவைகள் அனுமதிக்கப்படுவதில்லை என்று நாம் நன்கு அறிந்திருக்கிறோம்.

## "காயீனுடைய " இசை கருவிகளின் தோற்றம்

தேவனற்ற, பொழுது போக்கான காரியங்களினாலும், உலகத்தில் களியாட்டங்களுக்கும் அதிகமாக இசை கருவிகள் பயன்படுத்தப்பட்டதினால் சபைகளிலும் மற்றும் ஆராதனையிலும், இவைகளை நாம் அதிகமாக ஊக்குவிப்பதில்லை. அதேபோல் நாட்டியத்தை பொருத்த வரையில், விக்கிரகங்களுக்கு முன் ஆடப்பட்டு வந்ததை வசனங்கள் பதிவு செய்திருப்பதால், தேவப் பிள்ளைகள் இதை ஏற்றுக்கொள்ளுவதில்லை.

இசைக் கருவியை பயன்படுத்துவது தவறு, என்ற கருத்து ஆதியாகமத்தில் துவங்கியது. ஆதாமினுடைய முதல் இரண்டு குமாரர்கள் வயல் வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். ஆபேல் மந்தை மேய்க்கிறவனாகவும், காயீன் நிலத்தை பயிரிடுகிறவனானான். இயற்கையாக, காயீனின் வழிவந்தவர்கள் நிலங்களின் காரியங்களோடு அதிகமான தொடர்பு கொண்டிருந்தார்கள். அநேக பட்டணங்களை கட்டினார்கள், அதில் முதல் பட்டணத்தை கட்டினவர் காயீன் (ஆதி 4:17) மேலும், இசை கருவிகளையும், கை வேலைகளையும், மனுக்குலத்தின் நாகரீகத்திற்கு அறிமுகப்படுத்தினார்கள். காயீனின் வழி வந்த யூபால், கின்னரக்காரர், நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பனானார். (ஆதி 4:21)

மேலும் சில ஊது கருவிகளையும், புல்லாங்குழலையும் கண்டுபிடித்திருக்கவேண்டும். ஆனால், யூபாலின் தந்தை லாமேக்கு மிகுந்த கனத்திற்குரியவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எகிப்திலிருந்து இஸ்ரயேல் ஜனங்கள் பிரயாணமாக செல்கையில் மீரியாம் தம்புருவாசித்து நடனமாடி தேவனை துதித்துப் பாடினாள். அவளோடுக்கூடி அநேக பெண்கள் ஆடி பாடினார்கள். ஒருவேளை குழல்களையும் வாசித்திருப்பார்கள். அதற்கு பின் மோசே சீனாய் மலையிலிருந்து இறங்கும் போது அனைவரும் நடனமாடுவதை அவர் கண்டார். (எபி- மெக்கொடொல், யாத் 37:19) அப்பொழுது மோசே மிகுந்த கோபமடைந்து அவர் கையிலிருந்த பத்து பிரமாணங்கள் எழுதப்பட்ட கற்பலகைகளை உடைத்து போட்டார்.

சீனாய் மலையில் பரிசுத்தமான எக்காள சத்தம் கேட்கப்பட்டது. (யாத் 19:16-19) மேலும் சபையாரை கூடிவரச்செய்யவும், அவர்களில் ஆயிரவருக்கு தலைவர்களை ஆசரிப்புக் கூடாரத்திற்கு அழைக்கவும், பலிகளை செலுத்தவும், போஜனங்களை பரிமாறவும் இந்த வெள்ளி பூரிகைகள் பயன்படுத்தப்பட்டது. (எண் 10:2-10) அதற்கு பின் தாவீதின் நாட்களில் ஆலயத்தில் தேவனை ஆராதிப்பதற்கு மீண்டுமாக இந்த இசை கருவிகள் பயன்படுத்தப்பட்டது. (1நாளா 16:46) தாவீதின் கட்டளையின் பேரில் 4000 லேவியர்கள் தேவனை துதித்தார்கள். (1நாளா 23:5) சீயோன் மலைக்கு ஆசரிப்பு பெட்டியை கொண்டுவரும் போது, அநேக இசைக் கருவிகள் வாசிக்கப்பட, தாவீது குதித்து நடனமாடி வந்தார். (11 சாமு 6:14-16, 1நாளா 15:28,29) அந்நேரத்தில் சவுலின் குமாரத்தி மீகாள் இதை கண்டு அவள் மனதில் தாவீதை அவமதித்தாள். இதை தவறு என்று தாவீது சுட்டிக்காட்டினார். "அதற்குத் தாவீது மீகாளைப் பார்த்து - உன் தகப்பனைப் பார்க்கிலும் அவருடைய எல்லா வீட்டாரைப் பார்க்கிலும், என்னை இஸ்ரயேலாகிய கர்த்தருடைய ஜனத்தின்மேல் தலைவனாகக் கட்டளையிடும்படிக்குத் தெரிந்து கொண்ட கர்த்தருடைய சமூகத்திற்கு தலைவனாகக் கட்டளையிடும்படிக்குத் தெரிந்துகொண்ட கர்த்தருடைய சமூகத்திற்கு முன்பாக ஆடிப்பாடினேன். இதைப்பார்க்கிலும் இன்னும் நான் நீசனும் என் பார்வைக்கு அற்பனுமாவேன்...." (11 சாமு 6:21,22)

ரோமர்கள் ஆலயத்தை அழித்த பின், யூதர்கள் துக்கம் கொண்டாடி தேவனிடத்தில் முறையிடுவதற்கு கீத வாத்தியங்களை வாசித்தார்கள். இந்நாள் வரைக்கும் பழங்கால யூதர்கள் ஓய்வு நாள் தோறும் இசைக் கருவிகளை வாசிப்பதுண்டு. யூதன் அல்லாதவர்கள் கீத வாத்தியங்களை வாசிப்பதை சட்டத்தை மீறி நடப்பதாக எண்ணி, ஓய்வு நாட்களில் யூதர்கள்

அவர்களை அனுமதிப்பதில்லை. திருமண விழாக்களின் போது மட்டுமே இவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவர்கள் ஜெபக்கூட்டத்தில் பாடல்களோடு ஆர்கன் வாசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

முதல் கிறிஸ்துவ சபைகளில், இசை கருவிகள் பயன்படுத்துவதற்கு எந்த விதமான தடைகள் விதிக்கப்படாமல் இருந்தாலும், கிட்டத்தட்ட ஆயிர வருடங்களாக அவர்கள் எந்த விதமான இசை வாத்தியங்களையும் பயன்படுத்துவதில்லை. மேலும், அவர்கள் பாடல்கள் மட்டும் பாடினார்கள். மத்தியக் காலப்பகுதிக்கு பின் இனிமையான பாடல்களோடு மெல்லிய இசை கருவியான ஆர்கன் வாசிக்கப்பட்டது. 16ம் நூற்றாண்டு வரைக்கும் சட்டப்பூர்வமாக ஆர்கன் வாசிக்க அனுமதிக்கப்படவில்லை. அதற்கு பின் மற்ற இசை கருவிகள் அனுமதிக்கப்பட்டது. ரோம கத்தோலிக்க சபையில் எந்த விதமான கருவிகளை வாசிப்பதற்கும், ஆயரிடம் அனுமதி வாங்க வேண்டியிருந்தது. சில கருவிகள் இந்நாள் வரைக்குமே வாசிப்பதற்கு அனுமதி பெறவில்லை.

பல வருடங்களுக்கு முன் போலாந்தின் ஐக்கிய மாநாட்டில் வாலிபர் கூட்டம் தேவனை ஆராதிக்கும் வேளையில், அவரைத் துதிக்க முரசுகளை பயன்படுத்திய போது தேவ மாணவ ஐக்கியத்தில், இந்த உணர்வுகள் அனைத்தும் கலந்திருப்பது தெரிந்தது. அதற்கு பின் பாடல்களோடு இசை கருவிகளை வாசிப்பது இன்று போலாந்து வேத மாணவர்கள் மத்தியில் பழக்கமாகிவிட்டது. இருப்பினும், தனியாக இசை கருவிகள் வாசிக்கப்படுவது இன்றும் அறிதாகவே உள்ளது. அதுபோல, இந்நாள்வரை ஆராதனையின் போது நடனமாட எங்கும் அனுமதிக்கப்படுவதில்லை.

இசை கருவிகள் மற்றும் அதை வாசிப்பது அல்லது நடனம் முற்றிலும் தீமையானதா? நிச்சயமாக இல்லை. இசை கருவிகளை பயன்படுத்தி, நடனமாடி தேவனை துதித்து மகிமை படுத்தினார்கள் என்று ஏறக்குறைய 200 வசனப் பகுதிகள் வேதத்தில் உள்ளது. சில இசை கருவிகளின் ஒலிகள் ஆன்மீகத்தோடு தொடர்புடையதாக இல்லாமல் போனாலும், கேட்பதற்கு இரம்மியமாக இருப்பதினால், அவைகளை தேவனுக்கு விரோதமானவைகள் என்று கூறமுடியாது. அந்தக் கருவிகளை வாசிக்கப்படும் விதங்களின் அடிப்படையில், அதன் அர்த்தங்களும் தவறாகிவிடுகிறது.


ஒலி அதரிசனமானது. இசைக் கலைஞர் தன்னுடைய உணர்ச்சிப் பொங்க, வாத்தியத்தின் ஒரு கம்பியை தட்டும்போது உயிரில்லாத அந்த வாத்தியத்திலிருந்து உயிரோட்டமுள்ள இசை தோன்றுகிறது. பூரிகை வாசிப்பவர் தன்னுடைய முழு சக்தியை பயன்படுத்தி, அந்த வாத்தியத்திற்குள் காற்றை ஊதி அதன் அலைகளினால் வெகு தூரத்திலும், அதன் சத்தத்தை கேட்கப்பண்ணுகிறார். சில நேரங்களில், அனைத்து சத்தங்களும், ஒரே கருவியில் இணைக்கப்பட்டு, புது கருவிகள் உருவாக்கப்படுகிறது. அதன் மூலமாக இசை அமைக்கப்படும்பொழுது கேட்போரின் காதுகள் நிரம்புகிறது அல்லது அவர்களை மகிழ்ச்சிக்குள் ஆழ்த்துகிறது. மனிதர்களின் உணர்ச்சிகளை தூண்டக்கூடிய இவ்வளவு அழகான இசை தேவனுடைய பணிக்காக ஏன் பயன்படுத்தப்படக்கூடாது ? இக்காரியங்கள் நடனத்திற்கும் பொருந்தக்கூடியதே.

இதேபோல, தேவன் நமக்குள் தந்திருக்கும் கருவிகளான - நம்முடைய இருதயம், ஆத்துமா, பெலன் அனைத்தையும் பயன்படுத்தி, நாம் தேவன் மேல் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்தி, தேவனை மகிமைப்படுத்தலாம். ஒவ்வொரு மனுஷனும், தான் பெற்றிருக்கும் இருதயமாகிய இசை கருவியால், தேவனை துதித்து பாடி அவருக்குள் மகிழ்ந்து, தேவனுடைய அன்பில் மூழ்குவோம்.

"அல்லேலூயா, தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள், அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப்பார்த்து அவரைத் துதியுங்கள். அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள், மாட்சிமை பொருந்திய அவருடைய மகத்துவத்திற்காக அவரைத் துதியுங்கள். எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள், வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள். தம்புரோடும் நடனத்தோடும் அவரைத் துதியுங்கள், யாழோடும் தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள். ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள், பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள். சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. அல்லேலூயா." - சங்கீதம் 150: 3-6

ஆவிக்குரிய பெருமைக்கான தடுப்பு மருந்து

# நன்றியுணர்வு கொண்ட மனநிலை



"அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப் போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து - பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன், ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள்நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார்." - யோவான் 11:41,42

Todd Alexander

இயேசுவின் இந்த பூமிக்குரிய ஊழியத்தில் - லாசரை உயிரோடு எழுப்பின - அந்த மிக வல்லமையான அற்புதத்தின் போது, அதை காண வந்த அனைவரும் அவர் பிதாவினிடம் ஜெபிக்கும் பொழுது அவர் ஏறெடுத்த நன்றியறிதலின் வார்த்தைகளை கேட்பார்கள் என்று நிச்சயத்திருந்தார். அநேகர் விசுவாசிப்பதற்கு, இந்த ஒரு அற்புதம் போதுமானதாக இருந்தது. இருப்பினும், தன்னுடைய ஜெபத்தைக் கேட்டு பதில் அளித்ததற்காக இயேசு தன்னுடைய பிதாவினிடத்தில் ஏறெடுத்த நன்றிகள், அவர் பிதாவினிடத்தில் வைத்திருந்த அந்த நன்றியுணர்வை செயல் முறைப்படுத்தியது.

"ஏதோ ஒன்றை உண்மை என்று ஏற்றுக்கொள்வதை" - நம்பிக்கை என்று வெப்ஸ்ட்டர் கூறுகிறார். அந்த காரியம் நிச்சயம் என்ற உணர்வை நமக்குள் ஏற்படுத்துகிறது. இயேசுவின் சீஷர்களுக்கு அவர் மேல் தனிப்பட்ட முறையில் அதிக நம்பிக்கை இருந்தது. அதோடு அவர்களின் அறிவும், உயிர்த்தெழுதலின் இந்த சாட்சி உறுதிப்படுத்திய பின், அவர்களின் கிரியைகள் அதிக வல்லமையோடு செயல்பட்டிருக்கும். அவர்களுடைய சிந்தையை இயேசு அறிந்திருந்ததினால், சீஷர்கள் விசுவாசம் உறுதிப்படுத்தப்படுவதற்கு இயேசு இப்படிப்பட்ட காணக்கூடிய அற்புதங்களை நடப்பித்தார். அதே நேரத்தில் திகைத்து, குழப்பமடைந்திருந்த பரிசேயர்களுடைய நிலையையும் அவர் அறிந்திருந்தார். ஆனால் இயேசுவின் நன்றியுள்ள உணர்வுகள் பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்ட போது, சீஷர்களுக்கு தேவனுடைய வல்லமையின் மேல் உள்ள நம்பிக்கையை அதிகரித்ததோடு, சீஷர்களின் ஆவிக்குரிய நலனுக்காக கொடுக்கப்படும் தடுப்பு மருந்துக்கு, உதவியாக இருக்கும் ஒரு ஆதாரமாக விளங்கியது.

பரிசுத்தமான இருதயத்தின் பிரதிபலிப்பு - உண்மையான நன்றியுள்ள உணர்வுகளின் வெளிப்பாடாக இருக்கிறது. ஆகவே இது உத்தம மனிதர்களின் உண்மையான வெளிப்பாடாக உள்ளது. நன்றியுள்ள உணர்வுள்ள செயல் படுத்தப்பட வேண்டும். இது மனித சிந்தையை பெலப்படுத்தி, முழுமையடையச் செய்யும். இப்படிப்பட்ட, உணர்வுகளும், இயேசுவே மேசியாவாக வந்தார் என்ற உறுதியான நம்பிக்கையும் பிரிந்திருந்த அவருடைய சரீரத்தை ஒன்றிணைத்தது. அதேபோல், தூதர்கள் நிலைமையிலே லோகாஸாக இருந்த இயேசு இந்த நன்றியுள்ள உணர்வுகளோடு கலந்து அன்பினால் தன்னைத்தான் ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க முன் வந்தார். ஒருவேளை இப்படிப்பட்ட உணர்வுகள், லூசிபேரின் இருதயத்தில் இருந்திருக்குமேயானால், நிச்சயமாக, அவனுடைய வீழ்ச்சியை தடுத்திருக்கும் கொடிய விஷமாக எண்ணப்படும் ஆவிக்குரிய பெருமைக்கு எதிராக கொடுக்கப்படும் தடுப்பு மருந்து - இந்த நன்றியுள்ள உணர்வாகும். இந்த உணர்வானது நித்திய ஜீவன் மேல் நோக்கமாக இருக்கும் ஒவ்வொருவரையும் புது சிருஷ்டியை மையமாகவே கொண்டு வழிநடத்தும்.

இயேசு தன்னுடைய ஊழியத்தில் அநேக முறைகள் இந்த நன்றியுணர்வை தேவனிடம் வெளிப்படுத்தினார். இந்த நன்றியுணர்வுள்ள ஆவியைப் பற்றி நியாயப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (உபா 6:1-9). ஆனால் இந்த நோக்கத்திற்காக இயேசு தேவனிடத்தில் இப்படிப்பட்ட உணர்வுகளை பிரதிபலிக்கவில்லை, மேலும், இவைகளை மைய்யப்படுத்தி சீஷர்களுக்கும் இதை போதிக்கவில்லை. இயேசு தேவன் பேரில் வைத்திருந்த அளவற்ற அன்பின் நிமித்தமாகவே இந்த விசேஷித்த குணம் வெளிப்படுத்தப்பட்டது.

## அப்பமும் மீன்களும்

"இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார், சீஷர்கள் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள், அப்படியே மீன்களையும் அவர் எடுத்து அவர்களுக்கு வேண்டியமட்டும் கொடுத்தார்...."( யோவான் 6:11)

இந்த அற்புதத்திற்கு பின் இயேசு தேவனுக்கு நன்றிகளை ஏறெடுத்தார். தேவனே சர்வத்திற்கும் சர்வமாகவும், சகல ஆசீர்வாதங்களுக்கு ஊற்றும் காரணராகவும் இருப்பவர் என்று இயேசு உறுதிப்படுத்தினார். ஆனால் வெகு சீக்கிரத்தில் இயேசு அவர்களைவிட்டு எடுத்துக்கொண்ட பின், சீஷர்களின் ஆவிக்குரிய பெருமையை அழித்து, பரிசுத்தமான சிந்தையை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதற்கு இந்த நன்றியுணர்வு ஒரு முக்கியமான கருவியாக பயன்படுத்தப்பட்டது. தேவன் பேரில் காட்டப்படும் இந்த நன்றியுணர்வுகள் சீஷர்களின் ஆவிக்குரிய

வளர்ச்சிக்கு மிக முக்கியமான ஒரு கனமாக இருக்கிறது. இயேசுவால் பிரதிபலிக்கப்பட்ட இந்த உணர்வுகள், நன்றிகளை ஏறெடுப்பதிலும், ஜெபத்திலும், தேவனோடு தொடர்பு கொண்டு, அவரோடு ஐக்கியப்படுவதற்கு உதவியாக இருக்கிறது.

"அந்த வேளையில் இயேசு ஆவியிலே களிகூர்ந்து - பிதாவே வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே, இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன், ஆம், பிதாவே, இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது...." (லூக்க 10:21)

இயேசு சீஷர்களின் அழைப்பை, தேவனுடைய சித்தத்தோடு வளரும் அறிவோடு இணைத்தார். இயேசு கற்பித்த ஜெபத்தின் மூலம், தேவன் மேல் சீஷர்கள் கொண்டிருந்த ஆழமான உறவின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டினார். சீஷர்கள் அந்நாள் மட்டும் கற்றறிந்திருந்த ஜீவனுக்கு தேவையான வல்லமையுள்ள ஆவிக்குரிய சத்தியங்களை, இந்த நன்றியுள்ள ஜெபங்கள் வெகு சீக்கிரத்தில் அநேக வழிகளில் வல்லமையாக செயலாற்றியது.

* "என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே." (சங் 103:2)
* "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள், அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்." (நீதி 3:6)
* "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக." (யாத் 20:12)
* "நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி..." (சங்கீ 50:14)

## கர்த்தரின் ஜெபம்

"நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது - பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.." (மத் 6:9) - "நன்றி" என்ற வார்த்தையை சொல்லாமலும் இந்த நன்றியுள்ள உணர்வுகள் வெளிப்படுத்தப்படலாம் என்று இயேசு இந்த ஜெபத்தின் மூலம் எடுத்துக்காட்டினார். ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும், தேவனே சகலத்திற்கும் சகலமாயிருக்கிறார். தங்களுடைய ஆவிக்குரிய, வாழ்க்கை சக்கரத்தின் மையமாக இருக்கிறார், என்பதையும் அடையாளம் கண்டுகொள்வதற்காக, இப்படி ஜெபிக்க கற்று கொடுத்தார். இயேசு மாம்சத்திலிருந்த போது, இதை சந்தேகத்திற்கு இடமில்லாமல் உணர்ந்தார். விழுந்து போன மனுக்குலத்தின் அதிருப்தியை அவர் எதிர்த்து மேற்கொண்டார். இந்த நன்றியுணர்வு எல்லாவற்றிலும் திருப்தியடைய கற்றுக் கொடுக்கும்.

எடுத்துக்காட்டு - பிதாவாகிய தேவன் பவுலின் வாழ்க்கையை திசை திருப்பிய போது, பவுல் தேவன் மேல் வைத்திருந்த அந்த நன்றியுணர்வினால், அடுத்து, அவர் எப்படி வழிநடத்தப்படப்போகிறார் என்பதை அறியாதிருந்தும் பக்தி வைராக்கியத்தோடும், தைரியத்தோடும் தன்னுடைய ஊழியப்பயணத்தை துவங்கினார். தேவனுடைய வழிநடத்துதலினால் யோவானின் இருதயத்தில் நன்றியுணர்வுகளும் நம்பிக்கையும் இருந்ததினால், வெளிப்படுத்தின விசேஷத்தின் வார்த்தைகளை பெறுவதற்கு அவருடைய சிந்தை ஏற்றதாக இருந்தது. இருவருமே, தேவனுடைய வழிநடத்துதலுக்காக தொடர்ந்து தேவனை மகிமைப்படுத்தி, நன்றியோடு துதித்து போற்றினதினால் அவர்களுக்கு முன் வைக்கப்பட்ட வாய்ப்புகளை கைப்பற்ற ஆயத்தமாக இருந்தார்கள்.

## நினைவுகூருதல்

"பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து - நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்..." ( மத்தே 26:27) அங்கு கூடி வந்தவர்களுக்கு, அந்த சாய்ங்கால வேளை நெஞ்சில் நின்ற ஒரு வேதனையான நினைவுகூருதலாக இருந்திருக்க வேண்டும். அவருடைய மரணத்தை நினைவுகூறும் போது, அடுத்த நாள் அவர் சிந்தக்கூடிய இரத்தத்தினால் தேவன் செய்ய இருக்கும் காரியங்களை அவர் குறிப்பிட்டு பேசினார். அவருடைய சீஷர்கள் தங்களுடைய சோதனைகள் மற்றும் சந்தோஷங்களும் சவாலாயிருக்கும் என்று இயேசு முன் அறிந்திருந்தார். தேவைப்படும் போது ஒருவரை ஒருவர் தேற்றி அவர் மேல் வைத்த நம்பிக்கையில் உறுதிப்படும்படி இயேசு அவர்களுக்கு தேவையான அனுபவங்களை கொடுத்தார். அன்று இரவில், இயேசு தன்னுடைய ஊழியத்தில் சந்தித்த அந்த மிக பெரிய சோதனை, சீஷர்களுக்கு கடைசி எடுத்துக்காட்டாக இருந்தது - அவருடைய அமைதி, தேவன் மேல் உள்ள நம்பிக்கை "எல்லாவற்றையும் பானம் பண்ணுங்கள்" என்று சொல்லி, அந்த சீஷர்கள் மேல் வைத்த நம்பிக்கை மற்றும் அவருடைய தனிப்பட்ட உறுதிமொழி ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் அசையச்செய்தது. தன்னுடைய மிகப் பெரிய சோதனையிலும், மிகுந்த துக்கத்தோடு அந்த பாத்திரத்தை எடுத்து பாணம் பண்ணும் முன் தேவனுக்கு அவருடைய நன்றிகளை ஏறெடுத்தார்.

அந்த மேல் வீட்டில் தங்களுடைய ஆண்டவரோடு தனித்திருந்த போது, தங்களுடைய ஊழியத்தை செயல்படுத்துவதற்கு அவர்களுடைய இருதயத்தில் பக்திவைராக்கியம் கொழுந்துவிட்டு எரிந்தது. ஆனால் இவையனைத்தும்

நன்றியறிதலோடு துவங்கியது. சுத்திகரிக்கப்பட்ட நீதியுள்ள வாழ்க்கையின் வல்லமை, இப்படிப்பட்ட "சிங்கக்கெபிக்குள்" நடக்கும் தைரியம், தன்னுடைய சரீரத்தையும் இரத்தத்தையும் முழு விருப்பத்தோடு பலி செலுத்தும் மனது மற்றும் எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுக்கும் குணங்கள், இவ்வனைத்திற்கும் இயேசு இந்த மாதிரியின் மூலம் கற்றுக்கொடுத்தார். இயேசுவின் அற்புதமான அந்த நோக்கங்கள், அன்று அவரோடு இருந்தவர்களையும், நம்மையும் அதிகதிகமாக ஊக்குவிக்கிறது.

## கெத்சமனே தோட்டம்

"நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன், அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர் அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன், உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன், அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே." (யோவான் 17:6,9)

அந்த இரவு பௌர்ணமியாக இருந்தது. சீஷர்கள் சோர்ந்திருந்தார்கள். தங்களுடைய ஆண்டவரோடு அந்தத் தோட்டத்திற்கு நடந்து போகும் போது, அவருடைய கடைசி வார்த்தைகளுக்கு செவிகொடுத்தார்கள். இயேசு தன்னுடைய முழு இருதயத்தோடு பிதாவிற்கு நன்றிகளை ஏறெடுப்பதோடு, சீஷர்களின் பாதுகாப்பிற்காகவும் அவர்களுக்காகவும் ஜெபிப்பதை கேட்டார்கள். யோவான் அருகிலிருந்து இவைகளை கேட்டதினால், அதன் பொருளை அவர் பிரதிபலித்தார். (யோவான் 6:44)

இது யோவானின் இருதயத்தை அன்பினாலும், நன்றியுணர்வாலும் முழுமையாக நிரப்பியிருக்கவேண்டும். மேலும், இயேசு தேவனுடைய குமாரனும், எதிர்ப்பார்க்கப்பட்ட மேசியா என்ற அசையா நம்பிக்கையையும் பெற்றார். இப்பொழுது இயேசுவின் நல்லுணர்வுகள், சீஷர்களின் இருதயத்தில் அச்சடிக்கப்பட்டது. இந்த கோணத்தில் பார்க்கும் போது இயேசு தான் செய்ய வந்த ஊழியத்தை அருமையாக நிறைவேற்றினார்.

இயேசு அழகான துதியின் வார்த்தைகளால், நன்றிகள் மற்றும் சகல விண்ணப்பங்களை ஏறெடுக்குமுன் அவரும், அவருடைய சீஷர்களும் பாடின கடைசி பாட்டு நிச்சயமாக சீஷர்களின் சிந்தையில் நீங்கா இன்ப நினைவுகளாக பதிந்திருக்கவேண்டும். சங் 113:118 ம் அதிகாரங்களில் காணப்படுகிறது. சில எடுத்துக்காட்டுகளை காணலாம் -

* "இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக்கடவது." (சங் 113:2)
* "பூமியே, நீ ஆண்டவருக்கு முன்பாகவும், யாக்கோபுடைய தேவனுக்கு முன்பாகவும் அதிரு" (சங் 114:7)
* "ஆரோன் குடும்பத்தாரே, கர்த்தரை நம்புங்கள் அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்." (சங் 115:10)
* "கர்த்தர் என் சத்தத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டதினால், அவரில் அன்புகூருகிறேன்." (சங் 116:1)
* "கர்த்தர் என் பெலனும், என் கீதமுமானவர், அவர் எனக்கு இரட்சிப்புமானார்." (சங்118 :14)

மறுநாளில், இயேசு மனப்பூர்வமாக சிலுவையில் தன்னை பலியாக ஒப்புக்கொடுத்து, மிகுந்த வல்லமையான அவருடைய அன்பு, விசுவாசம், கனிவு, பொறுமை, நம்பிக்கை மற்றும் பக்தி வைராக்கியத்தின் உச்சக்கட்டத்தை வெளிப்படுத்தினார். சாமுயேல், ஒரு கல்லை எடுத்து -" மிஸ்பாவுக்கும் சேனுக்கும் நடுவாக நிறுத்தி, இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார் என்று சொல்லி, அதற்கு எபெனேசர் என்று ..."(1 சாமு 7:12) பேரிட்டது போல, "கல்வாரி சிலுவை" சீஷர்களுக்கு நீங்கா நினைவு சின்னமானது.

சீஷர்கள் மிகவும் பயந்து நடுங்கினார்கள். சுயமாக எந்த முடிவுகளையும் எடுக்கும் நேரம் அவர்களுக்கு வந்தது. அவர்கள் ஆண்டவரின் அடிச்சுவடுகளை பின்பற்றுபவர்களா ? இந்த "சிங்க கெபியில்" தாங்களும் நுழைய தைரியம் இருந்ததா ? தேவன் சகலத்தையும் கொடுப்பார் என்ற நம்பிக்கையில், அடுத்து வரும் சீஷர்களுக்கு போதிக்க ஆயத்தப்பட்டார்களா ? ஆம் பரலோகபிதாவினிடத்தில் இவர்கள் அனைவரும் நன்றியுள்ளவர்களாக இருந்ததினால் இவையனைத்தையும் அவர்கள் செய்தார்கள்.

## கலியாண வஸ்திரம்

"விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு - சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான் அதற்கு அவன் பேசாமலிருந்தான்." (மத் 22:11,12)

சுவிசேஷ யுக அறுவடையின் இறுதியான ஒரு பரிட்சையை குறித்து இந்த உவமை போதிக்கிறது. இவர்களில் சிலர் பெற்ற கலியாண வஸ்திரத்திற்கு நன்றியுள்ளவர்களாக இருக்கவில்லை. விருந்து சாலைக்குள் நுழைந்த இயேசு கலியான வஸ்திரம் அணிந்திராத ஒருவரை கண்டு அவரை "சிநேகிதனே" என்றழைத்தார். யோவான் 15:15ம் வசனத்தின்படி இயேசு

இவருக்கு அறுவடையின் சத்தியங்களை கற்றுக்கொடுத்திருக்க வேண்டும். வேத அறிவை காட்டிலும், இன்னும் அதிகமான வல்லமையை, இந்த வஸ்திரம் அடையாளப்படுத்தவேண்டும். அதாவது நீதிமானாக்கப்பட்ட நிலைமைக்காக இயேசுவின் இரத்தத்தின் மேல் உள்ள விசுவாசமும் அதற்கான நன்றியுணர்வுகளையும் இது குறிப்பிடுகிறதாக இருக்கிறது.

வஸ்திரமில்லாத மனுஷன் எதையும் பேச முடியவில்லை. அவன் சாக்கு போக்கு சொல்ல இடமில்லை. ஏனெனில் ஆண்டவர் மிக சரியாக அவனை நியாயந்தீர்த்துவிட்டார் என்று அவன் அறிந்திருந்தான். அவனை கட்டி காரிருளில் போடும்படி கட்டளையிட்டார். இயேசுவின் இரத்தத்தை ஒப்புக்காக நாம் ஏற்றுக்கொள்ளும் அபாயத்திற்குள் பிரவேசியாதபடி நாம் நம்மை காத்துக்கொள்வதற்கு இந்த பாடத்திலிருந்து நாம் பெறும் எச்சரிப்பாகும்.

நமக்குள் இருக்கும் பெருமை, நம்மை தவறான வழியில் நடத்துவதை, சரியான மனநிலையில் உள்ள இயேசு நம்மை காத்து இரட்சிக்கிறார். நம்மை வழிநடத்த, தேவன் இயேசுவை நமக்கு தந்ததினால், நமக்குள் மேன்மையான, நன்றியுள்ள இருதயத்தோடு தேவனிடத்தில் இருந்தோமென்றால், நம்முடைய சிந்தை சரியான நிலையில் காத்துகொள்ளப்படும்.

## கெட்ட குமாரன்

"அதற்கு அவன் - உம்முடைய சகோதரன் வந்தார், அவர் மறுபடியும் சுகத்துடனே உம்முடையதகப்பனிடத்தில் வந்து சேர்ந்தபடியினாலே அவருக்காகக் கொழுத்த கன்றை அடிப்பித்தார் என்றான். அப்பொழுது அவன் கோபமடைந்து, உள்ளே போக மனதில்லாதிருந்தான். தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான். அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாக - இதோ, இத்தனை வருஷகாலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து, ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும், என் சிநேகிதரோட நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையாவது கொடுக்கவில்லை." (லூக்கா 15:27-29)

தன்னுடைய தந்தையிடம் பெற்ற ஆசீர்வாதங்கள் மற்றும் இரக்கங்களுக்கு அந்த மூத்த குமாரன் நன்றியுள்ளவராக இருக்கவில்லை என்பது அவரின் கோபத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. ஆனால் அவருடைய இளைய குமாரன், மனம் வருந்தி தன்னுடைய தந்தையிடம் வந்ததை கண்ட மூத்த குமாரன் நன்றியுள்ள இருதயத்தோடு சந்தோஷப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அவன் கோபமும், பொறாமையும் அவனுடைய உள்ளான குணத்தை வெளிப்படுத்தியது. மூத்த குமாரன் தங்களை தாங்களே நீதிமான்களாக எண்ணுகிற பரிசேயர்களையும், இளைய குமாரன் பொது ஜனங்களையும், பாவிகளையும் அடையாளப்படுத்துகிறார்கள். இந்த பாவிகளும் ஆயக்காரர்களும் துவக்கத்தில் பிதாவினுடைய இரக்கத்தை அசட்டை செய்தபின், அநேக பாடுகள் மற்றும் துன்பங்கள் மத்தியில் தங்களுடைய தவறுகளை உணர்ந்து, இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தவர்களாக, நன்றியுள்ள மனதோடு மீண்டும் பிதாவினிடம் ஒப்புரவாகுபவர்களாக இருக்கிறார்கள். நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டிய பரிசேயர்கள் கடின குணமுள்ளவர்களாக இருந்ததை ஆண்டவராம் இயேசு இந்த உவமையில் சுட்டி காட்டினார்.

## ஐசுவரியவானும் லாசருவும்

"அதற்கு ஆபிரகாம் - மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அனுபவித்தான், அதை நினைத்துக்கொள், இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய்..... அதற்கு அவன் - அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள் என்று சொன்னான் என்றார். " (லூக்க 16:25,31)

முழுமையாக தேவனுடைய திட்டங்களை அறியாமல், ஒரு முடிவுக்கு வந்த பரிசேயர்களின் கடினமான உள்ளம் தாங்கள் பரலோக பிதாவின் மேல் வைக்கவேண்டிய நன்றியுணர்வுகளை உறுதியாக கட்டுப்படுத்தியது. இந்த ஒரு குணத்தை மையப்படுத்தி, இயேசு ஐசுவரியவானைப் பற்றிய உவமையில் ஒரு பாடத்தை கற்று கொடுத்திருக்கிறார். யூத பிரமாணங்களில், மோசே மற்றும் தீர்க்கதரிசிகள், மேசியாவின் வருகையை மையப்படுத்தப்பட்ட அநேக தீர்க்கதரிசனங்களை உரைத்தார்கள். ஆனால் இந்த பரிசேயர்களுக்கு இருக்கவேண்டிய நன்றியுணர்வுகள் குறைவுபட்டதால், அவர்களின் புரிந்துகொள்ளுதலின் கண்கள் மூடப்பட்டிருந்தது.

யூத யுகத்தின் முடிவில் இயேசு தனக்கு சொந்தமானவர்களிடம் வந்தார். அவர்களோ தங்களுடைய ஆவிக்குரிய பெருமையினால் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை (யோவான்1:11) யூத யுகத்தின் முடிவில் யூதர்களுக்கு இது ஒரு மிகப்பெரிய அபாயமாக இருந்தது, அதே போல் சுவிசேஷ யுகத்தின் முடிவிலும் இப்படிப்பட்ட ஒரு அபாயத்திலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள நாம் எச்சரிக்கப்படுகிறோம். (11பேதுரு 3:3,4) தேவனுடைய சகல ஜனங்களும், மிக கவனத்தோடு ஜெபத்தில் தரித்திருந்து, சுத்திகரிக்கப்பட்ட, மனத்தாழ்மையுள்ள இருதயத்தோடு, நன்றியுள்ள உணர்வோடு தேவனுக்காக காத்திருக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

## பரிசேயன் மற்றும் ஆயக்காரன்

"பரிசேயன் நின்று -தேவனே, நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன், என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று தனக்குள்ளே ஜெபம்பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு - தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்." (லூக்க 18:11-13)

இங்கு இருவருக்குமே நன்றியுணர்வு இருந்தது. பரிசேயன் தனக்குள்ள திட நம்பிக்கையை வெளிப்படுத்தினான், ஆனால் அந்த ஆயக்காரன் தன்னுடைய தோல்வியை ஒப்புக்கொண்டான். "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்", "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்", "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்", என்று மலை பிரசங்கத்தில், இயேசு சொன்ன வார்த்தைக்ள் சீஷர்களின் காதுகளில் ரீங்காரித்து கொண்டிருந்திருக்கும். நன்றியுள்ள உணர்வோடு, பெருமை சேர்ந்தால் படுக்குழியில் நிச்சயம் விழுவோம் என்ற பாடத்தை இயேசு இந்த உவமையில் மூலம் கற்றுக்கொடுத்தார். அதே நேரத்தில், இந்த நல்லுணர்வு நமக்குள் சரியாக இயங்கினால் ஜெபம், வேத படிப்பு மற்றும் சுவிசேஷத்தின் சத்தியங்கள் என்னும் புள்ளிகளை சரியான திசையில் இணைக்க சீரான வளர்ச்சியடையச்செய்யும்.

## நமக்குள்ள பாடங்கள்

இயேசு தம்முடைய வார்த்தைகளினாலும், கிரியைகளினாலும், நன்றியுள்ள நல்லுணர்வுகளை சீஷர்களுக்கு கற்றுக் கொடுத்தார். இந்த உணர்வுகள், ஆசீர்வாதங்களின் சகல ஊற்றுகளையும் நினைவுப்படுத்திக்கொள்ள உதவி செய்யும். மேலும் இந்த உணர்வுகள் நம்முடைய சுயத்தை வெறுத்து, தேவனிடத்தில் நம்மை திசை திருப்பும். சுவிசேஷ யுக துவக்கத்தில் சபையை ஸ்தாபிக்க தம்முடைய சீஷர்கள் அநேக அற்புத அடையாளங்களை செய்ய இயேசு அனுமதித்தார் ஆனால் முதலில் அவர்களுக்குள் நல்ல மனப்பக்குவத்திற்கான அடிதளமிட்டார். லோகாஸாக இருந்த போது, பெருமையினால் வீழ்ச்சியடைந்த லூசிபரை அவர் கண்டார். ஆகவே இயேசு தன்னுடைய சீஷர்கள், தங்களுக்குள்ளிருந்த பெருமையை தகர்க்கவும், எதிர்த்து நிற்கவும் தேவையான வழிமுறைகளை கற்றுக்கொடுத்தார்.

இயேசு தன்னுடைய உயிர்த்தெழுதலுக்கு பின், சீஷர்கள் தேவ நீதியில் வளரச் செய்வதற்கு அவர்களுக்கு தேவையான அனுபவங்களை தொடர்ந்து கொடுத்தார். தங்களுடைய ஜீவனுக்காகவும் அவருடைய அற்புதமான வழிநடத்துதலுக்காகவும் அனைவரும் தேவனை மகிமைப்படுத்தும் ஒரு கட்டத்தை சிலர் வந்தடைவார்கள். எடுத்துக் காட்டாக - பவுல் ரோமாபுரியில் சிறைச்சேதம் பண்ணப்படுவதற்கு நடந்து செல்லும் போது, பவுல் நன்றியுள்ள உணர்வுகளோடு சென்றாலும், மற்ற அனைவரின் பார்வையில் அவர் கைவிடப்பட்டவர் போல தோன்றினார். அதேபோல், அப்போஸ்தலனாகிய பேதுருவும், தன்னை தலைகீழாக அறையச் சொன்ன போதும் அவர் தேவனுக்கு நன்றியுள்ளவராக இருந்தார். ஸ்தேவான் கல்லெறியப்படும் போதும் இதே உணர்வுகளோடு, தன்னுடைய கண்களை வானத்திற்கு ஏறெடுத்து தன்னை கல்லெறிபவர்களுக்காக மன்னிப்பை கேட்டார்.

ஆதிகால சபையில் இந்த நன்றியுள்ள உணர்வுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதை அப்போஸ்தலர்களின் புஸ்தகம் மிக அழகாக சித்தரிக்கிறது. மிக கொடூரமான உபத்திரவத்திலும், சபையை உறுதிப்படுத்தவும், தேவனை போற்றவும் இந்த உணர்வு வழிநடத்தியது - "அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும், கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள்.இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்." (அப் 2:46,47)

"கலியாண வஸ்திரம்" என்ற உவமையில், கலியாண வஸ்திரம் தரித்திராத அந்த மனுஷன் விருந்துசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டான். அதாவது அவன் விருந்து சாலைக்குள் பிரவேசித்த பின் அந்த வஸ்திரத்தை கழற்றியிருக்க வேண்டும். அவன் விசுவாசத்தை பற்றி "அறிந்திருந்தான்" ஆனால் அதை அவன் உணராதிருந்தான். இது நமக்கும் ஓர் பாடமாக இருக்கவேண்டும். நாம் ஒரு காரியத்தை மிக உச்சிதமாக எண்ணுகையில், அதை நமக்கு கொடுத்தவரையும் அதே போல் பாவிக்கவேண்டும். நீதிமானாக்கப்படும் நிலைமைக்கு நாம் இயேசுவின் இரத்தத்தின் மேல் உள்ள நம்பிக்கையும், நன்றியுணர்வும், நம்முடைய விசுவாசத்தின் துவக்கத்திலிருந்து முடிவு வரைக்கும் காணப்படவேண்டும். நம்முடைய ஆண்டவரின் அடிச்சுவடுகளை பின் பற்றின சீஷர்களை போல நாமும் ஞானமுள்ளவர்களாக நடந்தோமென்றால், நம்முடைய உடன்படிக்கையின் வாழ்க்கை முழுவதும், தேவனிடத்தில் நாம் கொண்டுள்ள நன்றியுணர்வு வளர்ச்சியடைந்து உறுதிப்படும்.

உங்கள் ஆசீர்வாதங்களை எண்ணிப்பாருங்கள்

# நன்றிகளை ஏறெடுக்கும் சங்கீதங்களும், கீர்த்தனைகளும்



Oscar Elbert

"அல்லேலூயா, கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள், பரிசுத்தவான்களின் சபையிலே அவருடைய துதி விளங்குவதாக." -- சங்கீதம் 149:1

ஆனந்தக் களிப்புடன் பாடி தேவனுக்கு நன்றிகளை ஏறெடுத்தல் - நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. இசை வல்லமையுள்ளது, அதோடுகூட நன்றியுள்ள வார்த்தைகள் இணைக்கப்படும்போது, நாம் தேவனிடத்தில் நெருங்கி, அவரோடு அற்புதமான தொடர்பை ஏற்படுத்திக்கொள்கிறோம்.

ஒவ்வொரு நாளும் நாம் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்களுக்காக பரலோக பிதாவுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நம்முடைய நன்றிகள் தேவனுக்கு தேவையா ? நிச்சயமாக இல்லை. நாம் நன்றிகளை ஏறெடுக்க தேவன் நம்மை ஊக்குவிக்கும் போது அவர் அடுத்த ஆசீர்வாதத்தை நமக்கு கொடுக்கிறார். நம்முடைய நன்றிகள் அவருக்கு எப்போதும் தேவைப்படுகிறதில்லை. ஆனால் நாம் நன்றியுள்ளவர்களாக இருப்பது நமக்கு நன்மையானதென்று தேவன் அறிந்திருக்கிறார். "கர்த்தரைத் துதிப்பதும், உன்னதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவதும், பத்துநரம்பு வீணையினாலும், தம்புருவினாலும், தியானத்தோடு வாசிக்கும் சுரமண்டலத்தினாலும்..." (சங்கீதம் 92:1,2)

ஒரு அருமையான கீர்த்தனை ஞானமாக பாடப்படுகிறது - "நீங்கள் பெற்ற ஆசீர்வாதங்களை எண்ணிப்பாருங்கள், ஒவ்வொன்றாக கணக்கிடுங்கள், தேவன் உங்களுக்காக என்ன செய்தார் என்று பாருங்கள்".

கர்த்தர் நமக்களித்த ஆசீர்வாதங்களுக்கு நன்றி செலுத்தும்படி நாம் இன்று அமர்ந்து நன்றிகளை ஏறெடுக்க துவங்கினால் - என்ன ஆச்சரியம், நம்மால் எழுந்திருக்க இயலாது. அந்த அளவுக்கு நாம் பெற்ற ஆசீர்வாதங்களின் பட்டியல் தொடர்ந்துக்கொண்டே போகும்.

"தேவனுடைய கொடைகளும் ஆசீர்வாதங்களும் அதிகமானதாக இருந்தாலும், அதற்காக ஏறெடுக்கப்படும் நன்றிகள் மிக குறைவாகவே உள்ளது." என்று மார்டீன் லூத்தர் " Table Talk " என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார். ஐசுவரியமுள்ள மனுஷன் கொழுமையான உணவை உட்கொள்ளுவதில் காட்டும் மகிழ்ச்சியைவிட, பசியுள்ளவர் சாதாரண உணவை மிக சந்தோஷமாக புசிப்பார். நாமும் ஆவிக்குரிய காரியங்களில் மிகுந்த ஐசுவரியமுள்ளவர்களாக இருக்கிறோம். அதுமட்டும் அல்ல, உலகப்பிரகாரமான காரியங்களிலும் நம்மில் பெரும்பாலானவர்கள் ஐசுவரியவான்களாகவே இருக்கிறோம். ஆகவே நாம் பெற்ற சகல ஆசீர்வாதங்களையும் ஒவ்வொன்றாக கணக்கிட்டு, தேவன் நமக்கு என்னென்ன காரியங்களை செய்திருக்கிறார் என்று எண்ணிப்பாருங்கள். நாம் பெற்ற ஆசீர்வாதங்களுக்கு மனமார்ந்த கீர்த்தனைகளை பாடி தேவனை துதிக்கும் போது நிச்சயமாகவே நம்முடைய நன்றியறிதல்களை ஏற்றவிதத்தில் வெளிப்படுத்துகிற வர்களாயிருக்கிறோம். வேதாகமத்தின் காலத்தில் நன்றியறிதலான சங்கீதங்களை இசையோடு பாடும் போது, தேவனை துதிக்கும் துதி நிறைவு பெற்றது.

## இசையின் அற்புதம்

இசையை ரசிக்கவும், கீர்த்தனைகளின் மூலமாக தேவனுக்கு நன்றிகளை ஏறெடுப்பதில் மகிழவும், தேவன் சில இயற்கையான சட்டங்களை வகுத்தார். ஒவ்வொன்றும் தனக்குள் அற்புதமானதாகவே இருந்தது. பாடல்களை ரசித்து மகிழக்கூடிய திறமையை மனிதனுடைய சிந்தை பெற்றிருக்கிறது. அதே சமயத்தில் காதுகள் அந்த சத்தத்தை பெற்று மூளைக்கு அனுப்புகிறது, இந்த ஒரு கோட்பாடு, ஒலிஅலைகளால் காற்றின் மூலம் இயக்குகிறது. நம்முடைய குரல் வளத்தை கட்டுப்படுத்தி, நம்முடைய வாயினால் வார்த்தைகளை உண்டுபண்ணி, நாம் பேசும் காரியங்களை, நாம் பாடி அவருடைய பரிசுத்த நாமத்தை துதிப்பதற்கு, தேவனுடைய அற்புதங்களில் ஒரு சிறு பகுதி நமக்கு உதவிசெய்கிறது.

மிகக் கடினமான நேரங்களிலும், சோதனைகளிலும் அநேக தேவ ஜனங்கள் பரலோக பிதாவை நோக்கி, பாடல்களின் வழியாக நன்றிகளை ஏறெடுக்கும்போது, நிச்சயமாக அவர்கள் பலப்பட்டு ஆறுதல் அடைந்திருக்கும் அனுபவங்களை பெற்றிருப்பார்கள்.

பூரண நிலையை அடைந்த பரிசுத்தவான்களின் வார்த்தைகளை, சங்கீதக்காரன் மிகத் தெளிவாக விவரித்திருக்கிறார் - "கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவரைக் கீர்த்தனம்பண்ணி, அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள். கர்த்தாவே உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், கர்த்தரை நோக்கிக் கெஞ்சினேன்.என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர், என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்துபோட்டு, மகிழ்ச்சியென்னும்

கட்டினால் என்னை இடைக்கட்டினீர். என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை என்றென்றைக்கும் துதிப்பேன்." (சங்க 30:4, 10-12)

## சங்கீதங்களினாலும், கீர்த்தனை களினாலும் நன்றியுரைத்தல்

நாம் தேவனுக்கு "நன்றிகளை" ஏறெடுக்க துவங்கும் போது நம்மை நாம் குறுக்கிக்கொள்ள வேண்டாம். விசேஷித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல், சங்கீதங்களிலும், கீர்த்தனைகளிலும் நன்றிகளை ஏறெடுப்பதற்கு அநேக வெளிப்பாடுகள் உள்ளது. எடுத்துக்காட்டாக -

**ஓ ஜீவாதிபதியே, உம்மிலிருந்து பிரிந்திருக்கிற ஜீவனை நான் அறியேன்;**
**லோகமனைத்திற்கும், எனக்குமுரிய ஜீவன் உம்மிலிருந்தே புறப்படுகிறது ;**
**ஓ இயேசுவே, மரணத்திற்கு நான் பயப்படுவதில்லை ;என் ஜீவன் உம்மில் மறைந்திருக்கிறது ;**
**உமது வல்லமை சீக்கிரத்தில் எங்களை மரணத்தின் பிடியிலிருந்து நித்தியத்திற்கும் விடுவிக்கும்.**
**என் கர்த்தருக்கும் எனக்கும் எவ்வித பிரிவையும் ஏற்படுத்தாதபடியால், எவ்விதமான உபத்திரவமாக இருந்தாலும் அதற்கு நான் பயப்படேன்.**
**நீர் என் கர்த்தரும், போதகருமாயிருந்து, உமக்காக என்னை உரிமையாக்கினபடியால்,**
**சிங்காசனத்தில் வீற்றிருக்கும் இராஜாவைக் காட்டிலும் உம்மில் நான் ஐசுவரியமுள்ளவராய் இருக்கிறேன்.**
**ஆகையால், பூமியின் மீது நான் திரிந்தாலும், என் இதயம் பூரித்து லகுவாகிறது.**
**என் பொக்கிஷம் மேலே பரலோகத்தில் இருப்பதால், என் இதயமும் அங்கு இளைப்பாருகிறது.**
**கர்த்தருடைய விலையேறப்பெற்ற வார்த்தையின் மூலம், விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் களிக்கூர்ந்து,**
**நான் கர்த்தரை பிரியப்படுத்தவே வாழ முயற்சிக்கிறேன், இது எவ்வளவு ஆசீர்வாதமாயிருக்கிறது.**

*I Know No Life Divided*

இந்த பாடல் வரிகளில் பிதாவாகிய தேவனுக்கு முழுமையான நன்றிகள் செலுத்தப்படுகிறது. அதாவது இருதயத்தின் ஆழத்திலிருந்து ஏறெடுக்கப்படுகிறது. கர்த்தரை அல்லாமல் நமக்கு தனிப்பட்ட வாழ்க்கை இல்லை என்று நமக்கு உணர்த்துகிறது. விசுவாசம் மற்றும் நம்பிக்கையில் நாம் முழுமையாக அவரையேச்சார்ந்து வாழ்கிறோம் என்றும் குறிப்பிடப்படுகிறது. ஆகவே "நன்றி" என்ற வார்த்தையை பயன்படுத்தாமல் தேவனுடைய மிகுதியான பராமரிப்புக்கும், அரவணைப்புக்கும் நம்முடைய நன்றியுணர்வுகளை வெளிப்படுத்தலாம் என்று இதிலிருந்த நாம் புரிந்துகொள்ளுகிறோம்.

## ஒருவரை ஒருவர் தேவநீதியில் நடத்துவதற்கும், ஊக்குவிப்பதற்கும் நாம் சங்கீதங்களையும், கீர்த்தனைகளையும் பயன்படுத்தலாம்

சபைக் கூடுதல்களில் துதி பாடல்களை பாடுவது விசுவாசிகளை நிச்சயமாக ஊக்குவிக்கும். ஏனெனில் ஜெபிக்க பயன்படுத்தப்படும் வார்த்தைகள் பாடலாக பாடப்படுகிறது. நாம் துதி பாடல்களை பாடும் போது ஜெபத்தின் மூலம் நாம் தேவனோடு ஐக்கியப்படுகிறோம். இந்த ஒரு கருத்தை அப்போஸ்தலனாகிய பவுலும் உறுதிப்படுத்துகிறார். மேலும் ஒன்று கூடி நம்முடைய சத்தத்தை உயர்த்தும் போது நாம் பெறும் பயனையும் கூறுகிறார்கள்-"தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள். நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக, சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி, வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்." (கொலோ 3:15-17)

ஆராதனையின் துவக்கத்திலும் முடிவிலும் அரைகுறை மனதோடு பாடல்களை பாடுகிறோம். ஆனால் துதியின் கீதங்களும், நன்றிகளை தெரிவிக்கும் கீர்த்தனைகளும் நம்முடைய ஆராதனைக்கு எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது. எப்படியிருந்தாலும், நாம் பாடும் பாடல்களில் இருக்கும் வார்த்தைகளின் பொருளை உணர்ந்து பாடாவிட்டால் நாம் முழுமையான ஆசீர்வாதங்களை பெறமுடியாது. சுவிசேஷ யுகத்தில் ஆதிகால சபைகளில் மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாமல் வேறு மொழிகளில் பாடல்களை பாடி துதித்தபோது பிரச்சனைகள் எழும்பியது. அங்கு இசை இருந்தது, பாடல்களும் இருந்தது, ஆசீர்வாதங்கள் மட்டும் இருக்கவில்லை. ஒருவர் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால் பாடப்படும் வார்த்தைகளின் பொருளை உணர வேண்டும். அப்போஸ்தலர்களின் வார்த்தையை எப்படியாக சங்கீதகாரன் நிரூபித்திருக்கிறார் என்று பாருங்கள் - "இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன ? நான்

ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம்பண்ணுவேன், நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்." (1கொரி 14:15)"தேவன் பூமியனைத்திற்கும் ராஜா, கருத்துடனே அவரைப் போற்றிப் பாடுங்கள்." (சங் 47: 7) நாம் உபத்திரவத்தில் முழுகியிருக்கும் போது இவ்விதமான சங்கீதங்கள் நமக்கு அதிகமான ஆறுதலளிக்கும்.

## சோதனைகளை தணிக்க சங்கீதங்கள் பயன்படுத்தப்படுகிறது.

போராட்டம் இல்லாத கிறிஸ்துவ வாழ்க்கை எதுவும் இல்லை. கிறிஸ்துவ குணலட்சணங்கள் வளர்ச்சியடைய - விசுவாசத்தின் சோதனைகள் மிக அவசியமானதொன்று. இப்படிப்பட்ட அனுபவங்கள் துவக்கத்தில் மிக கசப்பாக இருக்கும்." ஆனபடியால், சரீரஞ்செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே, வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப்போலவும், மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள்." (எபி 12 :11)

எப்படிப்பட்ட போராட்டங்களின் மத்தியிலும் நாம் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுக்கும் மனப்பக்குவமே, அந்த போராட்டத்தை மேற்கொள்ள, நாம் பெற்றிருக்கும் வெற்றியின் திறவுகோலாகும். அந்த சூழ்நிலையில் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுக்க சங்கீதங்களும் கீர்த்தனைகளும் பயன்படுத்தப்படுகிறது. இதை நாம் பழக்கத்திற்கு கொண்டுவருவது அவசியம். ஏனெனில், நம்முடைய இக்கட்டான சோதனைகளில் நமக்கு பிடித்தமான சங்கீதம் நம்முடைய சிந்தை நினைவுப்படுத்தும்போது, அந்த பாடலின் வார்த்தைகள் நம்முடைய இரணமான இருதயத்தை காயமாற்றுகிறது. அப்போது அந்த வார்த்தைகள் நம்முடைய சிந்தையையும், இருதயத்தையும் ஊடுருவிபாயும் போது, தேவனுடைய அன்பையும், பராமரிப்பையும் உணர்ந்து ஆறுதல் அடையலாம்.

போராட்டமான சூழ்நிலையை, சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் மேற்கொள்ளப்பட்ட காரியத்திற்கு நம்முடைய அப்போஸ்தலனாகிய பவுல், மற்றும் சீலாவின் அனுபவம் சிறந்த எடுத்துக்காட்டாகும். பிலிப்பு பட்டணத்தில் அவர்கள் பெற்ற அடிகளும், காவலில் வைக்கப்பட்டிருந்த போது அவர்கள் பட்ட உபத்திரவமும் அப் 16ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கலாம். அநேக சாட்டை அடிகளால் முதுகுகள் பிளக்கப்பட்டு, கால்கள் தொழுமரத்தில் மாட்டிவைக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் தேவன் மேல் வைத்த வெற்றிகரமான நம்பிக்கையை வெளிப்படுத்தினார்கள். மற்ற கைதிகளுக்கு இது ஒரு சிறந்த வல்லமையான சாட்சியாக இருந்தது. மேலும் அங்கிருந்த காவலாளர்களுக்கும், இது ஒரு ஆச்சரியப்படத்தக்க காட்சியாக இருந்தது. இந்நாள் வரைக்கும் நமக்கும் இது ஒரு சிறப்பான, வல்லமையுள்ள சாட்சியாக திகழ்கிறது.

அந்த சிறையில் பவுல் மற்றும் சீலாவினிடத்தில் எந்த விதமான புத்தக சுருள்களும் இல்லை. இருப்பினும் அவர்கள் தங்களுடைய ஞாபகத்திலிருந்து அவைகளை பாடினார்கள். இருண்ட காலத்தின் போது அநேக ஐரோப்பிய சகோதரர்களிடமிருந்து வேதாகமங்கள் பிடுங்கப்பட்டது. அப்போது அவர்களின் இருதயத்தில் பதிந்திருந்த சங்கீதங்களும், கீர்த்தனைகளுமே அவர்களுடைய ஆராதனைக்கு பயன்படுத்தப்பட்டது. இன்றும் பலர் தங்களுடைய நினைவுகளிலிருந்து பாடல்களை பாடுவது வழக்கமாக இருக்கிறது.

அநேக கீர்த்தனைகள் இருப்பினும், சில கீர்த்தனைகள் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுக்கும் காரியத்தை மிக நேர்த்தியாக வெளிப்படுத்துகிறது. அவைகளில் சிலவற்றை காணலாம் -

என் தேவனே, உம் இரக்கங்களை
என் ஆத்துமா எண்ணிப்பார்க்கையில்,
அந்த உணர்வினால் ஈர்க்கப்பட்டு
துதி, அன்பு மற்றும் ஆச்சரியத்தில்
தொலைகிறேன்.

***Cause For Gratitude***

எல்லா ஆசீர்வாதத்திற்கும் ஊற்றே, வாரும்,
கீதம் இசைக்க என் இதயத்தை மீட்டும்,
முடிவில்லா கிருபையின் நீரோடையில்,
இதயம் உணர்ந்த துதியின் குறிப்பெழுதும்,
மென்மையான கீதங்களை எனக்கு போதியும்
உம் கிருபையை துதித்து, அதில் நான்
மகிமையடைகிறேன். ஈடில்லா அன்பு நிறைந்த
கிருபை அது. -

***Boundless Grace***

"கர்த்தரைத் துதியுங்கள், நம்முடைய தேவனைக் கீர்த்தனம்பண்ணுகிறது நல்லது, துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது. கர்த்தர் எருசலேமைக் கட்டுகிறார், துரத்துண்ட இஸ்ரயேலரைக் கூட்டிச் சேர்க்கிறார். இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார். அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணி, அவைகளுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார். நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார், அவருடைய அறிவு அளவில்லாதது. கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை உயர்த்துகிறார், துன்மார்க்கரைத் தரைமட்டும் தாழ்த்துகிறார். கர்த்தரைத் துதியுடன் பாடிக் கொண்டாடுங்கள், நம்முடைய தேவனைச் சுரமண்டலத்தால் கீர்த்தனம் பணணுங்கள்." - (சங்கீதம் 147:1-7)

தெய்வீக இராஜரீகம்

# துதியின் கீதம்



Leonard Griehs

"சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி.." - எபேசியர் 5:19145ம் சங்கீதத்தின் வசன வாரியான விளக்கம் ?

சங்கீத புஸ்தகத்தில், துதியின் சங்கீதங்களின் வரிசையில் 145ம் சங்கீதம் முதலில் இடம்பெற்றுள்ளது. ஒவ்வொரு வசனத்தின் துவக்கத்திலும், ஒவ்வொரு எபிரெய எழுத்து வரிசையாக கொடுக்கப்பட்டுள்ளது. KJV ல் 145ம் சங்கீதத்தில் 22 எபிரெயு எழுத்துக்கு பதிலாக 21 எழுத்துக்கள் மட்டுமே காணப்படுகிறது. முதல் வசனம் " aleph" என்ற முதல் எபிரெய எழுத்தோடு துவங்குகிறது. கடைசி வசனம் "tav" என்ற எபிரெய வார்த்தையில் துவங்குகிறது. ஆனால் " nun" என்ற எழுத்துக்கு பொருந்தக்கூடிய வசனங்கள் ஏதும் காணப்படுகிறதில்லை.

விட்டுப் போன எழுத்துக்கு பொருந்தக்கூடிய வசனங்கள் ஏன் காணப்படவில்லை என்று பொதுவாக, மொழிபெயர்ப்பாளர்களும், வேத வல்லுனர்களும் கேள்வி எழுப்புகிறார்கள். சில மொழிபெயர்ப்பாளர்கள் ஒரு வசனத்தை இதோடு ஒப்பிடுகிறார்கள். சிலர் இந்த பகுதி தவிர்க்கப்பட்டிருக்கிறது என்று எண்ணுகிறார்கள். மனிதர்கள் தேவனை துதிப்பது அபூரணமாகவும், குறைவானதாகவும் இருக்கிறது என்று காட்டுவதற்காக இந்த பகுதி தவிர்க்கப்பட்டது என்றும் சிலர் கருதுகிறார்கள்.

## தேவனுடைய தெய்வீக ராஜரீகம் - சங்கீதம் 145:1-4

*ராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிப்பேன். நாடோறும் உம்மை ஸ்தோத்திரித்து, எப்பொழுதும் என்றென்றைக்கும் உம்முடையநாமத்தைத் துதிப்பேன். கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார். அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது. தலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சியைச் சொல்லி, உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள்.*

தேவனுடைய தெய்வீக ராஜரீகமே, இந்த துதியின் சங்கீதத்திற்கு முக்கிய பாடமாக இருக்கிறது. தேவனே அவருடைய சிருஷ்டிகளில் சகலத்திலும் சகலமாக இருப்பவர் என்று முதலில் நாம் உணர்ந்துகொள்ள முயற்சிக்கிறோம். இது நம்முடைய அடிப்படை விசுவாசம் மட்டும் அல்ல, நம்முடைய துதிகளுக்கும் இதுவே ஆதாரமாக இருக்கவேண்டும்.

"ஒவ்வொரு நாளும் நான் உங்களை ஆசீர்வதிப்பேன்" என்ற வாக்குறுதி - தேவனுடைய பிள்ளைகளின் அன்றாட ஜெபங்களில் அவரை துதிக்கும்படி கட்டளையிடுகிறது. இயேசு கற்பித்த ஜெபத்தில் இந்த கருத்து வலியுருத்தப்படுகிறது. தேவன் நமக்கு அளிக்கும் ஆகாரத்திற்கும் நீதியின் பாதையில் வழிநடத்துவதற்கும் முன்னதாகவே நன்றிகளை ஏறெடுக்க கற்றுக்கொடுத்தார். தேவன் தம்முடைய சிருஷ்டிக்களை தம்முடைய அனந்த ஞானத்தில், மிக நேர்த்தியாக வழிநடத்துகிறார். நாம் வேத பகுதியைவாசித்து, தேவனுக்கு துதி செலுத்தி பாடி மகிழ்ந்து நம்முடைய நாளை துவங்கும்போது தேவனுடைய ஆசீர்வாதங்களையும், இரக்கங்களையும் நாம் ஒப்புக்கு எடுத்துக்கொள்ளுகிறதில்லை. நம்முடைய தினசரி வேலைகளை துவங்குமுன் ஒரு நொடி ஜெபத்தில் தரித்திருந்தால், நிச்சயமாக தேவனுடைய மேலான அதிகாரத்தை அன்றாட உணர நமக்கு உதவி செய்யும்.

நம்முடைய வாழ்க்கையில் சகலத்தையும் தேவன் சகலத்தை மேற்கொள்கிறவராக இருக்கிறார் என்பதை நாம் என்றுமே மறக்கக்கூடாது. நம்முடைய உலகப்பிரகாரமான காரியங்களும், தேவனுடைய சித்தத்தின்படி, நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்றும் அறிந்திருக்கிறோம். ஆனால் ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களின் சோதனைகள் நேர்ந்த காரணங்களை பற்றி நம்முடைய உயிர்த்தெழுதல் வரைக்கும் தெரிந்துக்கொள்வதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில், உயிர்த்தெழுந்த பின்பு நாம் பட்டபாடுகளுக்குரிய நியாயமான காரணங்களை சரியாக புரிந்துக்கொள்ளமுடியும். ஆகவே தேவனுடைய திட்டங்களுக்காகவும், பொதுவாக முழு சபையின் வளர்ச்சிக்காகவும் நாம் ஜெபிக்க கடமைப்பட்டிருக்கிறோம். "வருங்காலத்தை குறித்து நாம் அறியாதிருந்தாலும், வருங்காலத்தை நிகழ்த்துபவரை நாம் அறிந்திருக்கிறோம்" என்று ஒரு பாடலின் வரிகள் கூறுகிறது. நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளிலும், சோதனைகளிலும் தேவனுடைய நோக்கத்தை அறிந்துகொள்வதில் சில நேரங்களில் தடுமாற்றங்கள் ஏற்பட்டாலும், அவருடைய திட்டத்தின்படி நமக்கு நன்மையானவைகளை

மட்டுமே தேவன் நமக்கு அனுமதிக்கிறார் என்று உறுதியாக நம்பலாம். தேவனை நாம் பாடி துதிப்பதற்கு இதுவும் ஒரு முக்கியமான காரணமாக அமைந்திருக்கிறது.

## தேவனுடைய அற்புதமான கிரியைகள் - வசனம் 5-12

*உம்முடைய சிறந்த மகிமைப் பிரதாபத்தையும், உம்முடைய அதிசயமான கிரியைகளையுங்குறித்துப் பேசுவேன். ஜனங்கள் உம்முடைய பயங்கரமான கிரியைகளின் வல்லமையைச் சொல்லுவார்கள், உம்முடைய மகத்துவத்தை நான் விவரிப்பேன். அவர்கள் உமது மிகுந்த தயவை நினைத்து வெளிப்படுத்தி, உமது நீதியைக் கெம்பீரித்துப் பாடுவார்கள். கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர், அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின்மேலுமுள்ளது. கர்த்தாவே, உம்முடையகிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும், உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்திரிப்பார்கள். மனுபுத்திரருக்கு உமது வல்லமையுள்ள செய்கைகளையும், உமது ராஜ்யத்தின் சிறந்த மகிமைப்பிரதாபத்தையும் தெரிவிக்கும்படிக்கு உமது ராஜ்யத்தின் மகிமையை அறிவித்து, உமது வல்லமையைக் குறித்துப் பேசுவார்கள்.*

இந்த உலகத்தில் தேவனுடைய செயல்பாடுகளுக்கும் மனுக்குலத்தின் கருத்துக்களுக்கும் அதிகமான வேறுபாடுகள் காணப்படுகிறது. நன்மைகள் நடக்கும்போது அனைவரும் அவரைப் போற்றுவார்கள். தீமைகள் சம்பவித்தால் அனைவரும் அவரை இகழ்வார்கள். மற்றவர்களைக் காட்டிலும் சிறப்பாக கிரியைகள் செய்தவதற்கு "தேவன் கொடுத்த திறமைக்காக" சிலர் அவரை துதிப்பார்கள். தங்களுடைய வாழ்க்கையில் தேவைப்படுகிற தனிப்பட்ட விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக காத்திருப்பவராக அநேகர் தேவனை ஒரு குறுகிய வட்டத்திற்குள் அவர் இருக்கவேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறார்கள். தேவன் தீமையை ஏன் அனுமதித்தார் ? அவருடைய திட்டம் என்ன ? அவருடைய சிருஷ்டிப்பின் நோக்கம் என்ன? என்பதை வெகு சிலர் மட்டுமே அறிந்திருக்கிறார்கள். தேவன் தன்னுடைய சிருஷ்டிகளிடம் எவ்வளவு அன்போடும், இரக்கத்தோடும் செயல்படுகிறார் என்று அறிந்து, அவருடைய குணநலன்களை வெகு சிலரே உணருகிறார்கள். தேவனுடைய இன்றையை சூழ்நிலைகளின் மத்தியிலும், வரவிருக்கும் காலத்திலும், மனுக்குலத்தை ஆசீர்வதிப்பதைக் குறித்து, ஆவியால் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் மட்டுமே அவருடைய அன்பு, நீதி, வல்லமை மற்றும் ஞானத்தை உணர்ந்துக்கொள்ளமுடியும். (1கொரி 2:14,10, மாற் 4:11, மத்தேயு 13:16) ஆதாமின் பாவத்தினால் சாத்தான் அநேகரின் பார்வையை குருடாக்கிவிட்டான் என்று பவுல் கூறியுள்ளார். (11கொரி 4:4) ஆனால் தேவனால் ஒளிபெற்ற பிள்ளைகள், அவருடைய கிரியைகளை அறிந்து, உணர்ந்து இந்த பூமியில் அவருடைய செயல்களுக்காக அவரை துதித்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே ஒருவருடைய நெருங்கிய உறவினர், அகால மரணம் அடைந்ததன் காரணம் என்ன என்று நம்மிடம் கேட்கப்படும் போது நாம் திகைக்கவேண்டிய அவசியமில்லை. தேவனுடைய வழிகளை மனிதன் ஒருபோதும் தடைசெய்ய இயலாது - "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமிe ப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உய nக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது." (ஏசா55:8,9)

வியாபார நோக்குடன் தேவனை தேட விரும்புவோர், தேவனுடைய இரக்கங்களையும் குணங்களையும் உணர்ந்து கொள்ளாதவர்களாக, பெரும்பான்மையான ஜனங்கள் நித்திய ஆக்கினைக்கு கையளிக்கப்பட்டு, நிராகரிக்கப்படுவார்கள் என்று நம்புகிறார்கள். அவரை உண்மையாக புரிந்து கொள்ளும் யாவரும், அனைவரையும் உயிர்த்தெழுப்பி அவரை அறிகிற அறிவை அவர்களுக்கு கொடுக்கப்போகிற தேவனுடைய ஆனந்த ஞானத்தை நினைத்து அவரை மகிமைப்படுத்தி, மனதார நேசித்து அவருடைய பராக்கிரமமான செயல்களையும், இரக்கங்களையும் அவர்கள் போற்றித் துதிப்பார்கள்.

ஒன்பதாம் வசனத்தின் தழுவுகிறவாக்கியத்தை கவனிப்போம் "..கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர், அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின்மேலுமுள்ளது." இது தேவனுடைய ஞானத்தின் ஆழத்தை காண்பிக்கிறது. இதை மேலோட்டமாக வாசிக்கும் பொழுது ஜனங்கள் அனைவரும் செழிப்பாக இல்லை என்றும் அநேகருடைய வாழ்க்கையில் வறுமையும் கொடுமைகளும் அகோரமாக இருக்கிறது என்றும் கேள்வி எழும்பலாம்.

புறக்கணிப்பு, கீழ்ப்படியாமை போன்ற தீமையினால் சகலமும் மூடப்பட்டிருகிறது. இதன் மத்தியில் தேவன் அவருடைய திட்டங்களை செயலாற்ற வேண்டும். இன்னும் அவர் தம்முடைய சிருஷ்டிகளையும் இந்த அண்டசராசரத்தையும் பராமரித்தும் கவனித்தும் வருகிறார். (மத்தேயு5:45) தேவனுடைய செயல்பாடுகள் அநேக சந்தர்ப்பங்களில் - தற்செயலாகவோ, விதியினிமித்தமோ, அல்லது இயற்கையாகவோ எல்லா இடத்திலும் வெளிப்படுத்தப்படுகிறது. ஆனால் தேவன் சகலத்தையும் அவர் சிருஷ்டித்தவைகளுக்கு நித்தியமான நன்மைகளை ஏற்படுத்துவதற்காகவே செயல்படுகிறார் என்று அவரை நன்கு அறிந்த பிள்ளைகள் மட்டுமே காண்கிறார்கள்.

எடுத்துக்காட்டாக, 1980 ம் வருடம் அமேசான் காடுகளின் நிலை என்னவாக இருந்தது? அந்த காடு எரிந்து கொண்டிருந்ததால், 20ம் நூற்றாண்டின் முடிவிற்குள் அந்த காடு அழிந்து விடும் என்று வட அமெரிக்காவின் விஞ்ஞானிகள் தீர்மாணித்தார்கள். கிட்டத்தட்ட முப்பது வருடங்கள் கடந்து விட்டது, ஒன்றும் நடக்கவில்லை. ஆனால் இன்றைய சூழ்நிலையில், உலகத்தின் 80 % காடுகளை இப்பகுதி கொண்டிருக்கிறது. அந்த அமேசான் நதியின் பன்னிரெண்டு உபநதிகள் மிக பசுமையான நிலங்களை கொண்டுள்ளது. தேவனுடைய திட்டத்தில் இந்த பூமியை பராமரிக்க இவையனைத்தும் தேவைப்படுகிறது. 1980ம் வருடம் பிரேசில் நாடு ஒரு சர்வாதிகாரமான இராணுவத்தின் கீழ் இருந்தது. அந்த நாட்டின் காடுகள் 1.6 மில்லியன் சதுர மைல்களுக்கு வளரச் செய்யவேண்டும் என்று அந்த தலைமை திட்டமிட்டது. 1980ல் மிகப் பெரிதான கடன் நெருக்கடியில் அவர்கள் சிக்காவிட்டால், "எல்லாம் இந்நேரத்திற்குள் முடிவடைந்திருக்கும்" என்று பிரேசில் அரசாங்கத்தில் உள்ள அமெரிக்க விஞ்ஞானி பிலிப் பிரன்சைடு கூறுகிறார். மனிதனுடைய இயல்பான சுயநலத்தை பயன்படுத்தி தேவன் தம்முடைய முக்கியமான சிருஷ்டிப்பின் பகுதிக்கு உண்டான ஒரு பயமுறுத்தலை முடிவுக்கு கொண்டுவந்தார்.

இந்த முழு அண்டசராசரமும் தேவனுடைய பாதுகாப்பில் இருக்கிறது. அவருடைய ஞானம், வல்லமை, நன்மைகள் அனைத்தும் அவர் இருக்கும் பொறுப்புகளுக்கு சமமாக இருக்கிறது. ஆகவே அவர் துதிப்பதற்கு ஏற்றவர், துதிக்கு பாத்திரவானாக இருக்கிறவர். அவர் பெற்றிருக்கும் நினைவுகள் என்றுமே மறக்கப்படுவதுமில்லை, அவருடைய நியாயத்தீர்ப்புகள் என்றுமே தவறுகிறதுமில்லை. அவருடைய அனந்த ஞானத்தில் நித்தியத்திற்காக திட்டமிடப்பட்ட காரியங்கள் தோல்வியடைவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. மேலும் அந்த திட்டத்தின் காலத்தை எந்த சூழ்நிலையிலும் பிழையின்றி துல்லியமாக நிறைவேற்றுவார். அவரை எதிர்க்கும் எந்த சக்திகளையும், தம்முடைய திட்டங்கள் மிக நேர்த்தியாக நிறைவேற்றுவதற்கு சரியாக கோணத்தில் திசை திருப்புவார். அவரை எதிர்க்கும் அனைத்து காரியங்களையும், திசைத்திருப்பி, தம்முடைய பிரமாண்டமான திட்டங்கள் மிக சிறப்பாக செயல்பட அவைகளை அவரால் பயன்படுத்திகொள்ள முடியும். இந்த அண்டசராசரத்தின் மேல் தேவன் கொண்டுள்ள அதிகாரம் என்றுமே அசைக்கப்படுவதுமில்லை. சற்று நேரங்களுக்கு கைவிடப்படுவதுமில்லை. அவருடைய கண்கள் என்றுமே உறங்குவதுமில்லை, அவருடைய செவிகள் அடைப்படுவதுமில்லை. அனைத்து தேவைகளையும் அவர் அறிந்தவராகவே இருக்கிறார். இந்த யுகத்தில், தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு ஒப்புக்கொடுத்து, உடன்படிக்கை செய்தவர்களின் முழு தேவைகளும் பூர்த்தி செய்யப்படுகிறது. ஆனால் வரக்கூடிய காலத்தில் தேவனுடைய இரக்கத்தையும் கிருபையையும் பெற்றுக்கொள்ளாத மனிதர்கள் ஒருவரும் இருக்கமுடியாது.

## தேவன் அனைவரையும் பராமரிக்கிறார் - வசனம் 13:16

*உம்முடைய ராஜ்யம் சதாகாலங்களிலுமுள்ள ராஜ்யம் உம்முடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது. கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கி, மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கிவிடுகிறார். எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது. ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர். நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்.*

பழங்கால மொழிபெயர்ப்புகள், எபிரெய கைப்பிரதி மற்றும் குமாரனில் இந்த சங்கீதத்தின் பகுதியின் 13ம் வசனத்தை தொடர்ந்து "nun " என்ற எபிரெய எழுத்துக்கு ஒரு வசனம் காணப்படுகிறது - "கர்த்தர் தம்முடைய வார்த்தைகளில் உண்மையும், தம்முடைய சகல கிரியைகளிலும் பரிசுத்தமானவர்" - என்று செப்டாஜனிலும் நாம் வாசிக்கலாம். எழுதப்பட்ட சங்கீதத்தில் இந்த வசனமும் இடம் பெற்றிருந்தது என்று நிரூபிக்க அநேக ஆதாரங்கள் உள்ளது. மறு பதிவு செய்யும் போது இந்த வசனம் விடப்பட்டிருக்கலாம். இந்த வசனப்பகுதி இந்த சங்கீதத்தின் கடைசிப் பகுதி என்று நாம் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், அதை தொடர்நது வாசிக்கும் போது, அதன் விளக்கம் தெளிவாக

புரிந்துக்கொள்ளப்படுகிறது - " தேவனுடைய பிரமாணங்கள் அவருடைய வார்த்தையே - முடிவில் அவருடைய சிருஷ்டிப்புகள், அவருடைய பரிசுத்தத்தை பிரதிபலிக்கும். இன்றைய காலக்கட்டத்தில் மனுக்குலம் தேவனுடைய பரிசுத்தத்தை பிரதிபலிப்பதுமில்லை, அவனுக்கு கையளிக்கப்பட்டிருந்த ஆட்சி பொறுப்பை அவன் செயல்படுத்துவதுமில்லை. மனிதன் பாவத்தோடு வைத்திருக்கும் தொடர்பினால், பூமியின் மேல் அவன் கொண்டுள்ள ஆளுகை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஒரு எல்லைக்கு மேல் மனிதனை தேவன் அனுமதிப்பதில்லை. ஐக்கிய நாடுகளில் ஒவ்வொரு மாநிலமும் தனக்கான சட்டங்களை அமுலுக்கு கொண்டு வந்தாலும், ஐக்கிய நாட்டின் சட்டங்களை எதிர்த்து எந்தச் சட்டத்தையும் அமுலுக்கு கொண்டு வர இயலாதது போலவே அண்டசராசத்தின் இயற்கையான கோட்பாடுகளை ஒருவரும் நிராகரிக்க முடியாது. எடுத்துக்காட்டாக "ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது, பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது." (பிரச1:4) என்று தேவன் அறிவிக்கிறார். ஆகவே மனிதனுடைய இன்றைய நவீன கண்டுபிடிப்புகளாகிய அணுசக்திகளின் ஆயுதங்கள் இந்த உலகத்தை என்றுமே அழிக்க முடியாது.

மனிதன் பூரண நிலைக்கு சீர்பொருந்தப்பட்டு, தேவனுடைய கோட்பாடுகளுக்கு உட்பட்டு ஆட்சிசெய்ய ஆயத்தப்படும் போது, மனிதனுக்காக தேவனுடைய நோக்கத்தை இந்த பூமி பிரதிபலிக்கும். நித்தியமான ஆளுகையை சமதானம் மற்றும் தேவனோடு இசைவாக வாழக்கூடிய வாழ்க்கை மெருகேற்றப்பட்டு, ஏதேன் தோட்டத்தில் ஆதாம் வாழ்ந்த சூழ்நிலைக்கு இந்த பூமி சீரமைக்கப்படும். கீழ்ப்படிதலோடு தேவன் மேல் விசுவாசமுள்ளவர்களாக நிரூபிக்கப்பட்ட ஜனங்கள், ஆயிரவருட ஆட்சியின் முடிவில் முழுமையான ஆசீர்வாதங்கள் நிறைந்த இராஜ்யத்தில் நித்தியமான பங்கை பெறுவார்கள். இந்நாள் வரைக்கும் மனிதன் அனுபவித்த காரியங்களில் இது மிகவும் அற்புதமான ஒன்றாகும்.

## கர்த்தர் நீதியுள்ளவர் - வசனம் 17:18

*கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார். தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.*

தேவன் என்றும் நீதியுள்ளவர் - "ஒளியைப் படைத்து, இருளையும் உண்டாக்கினேன், சமாதானத்தைப்படைத்துத் தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே, கர்த்தராகிய நானே இவைகளையெல்லாம் செய்கிறவர்." (ஏசா 45:7) கலவரங்கள் மற்றும் பிரச்சனைகளை குறிப்பிடும் போது "தீமையை" பற்றிச் சரியாக புரிந்துகொள்ள முடிகிறது. இவைகளை பாவத்திற்கு தண்டனையாக தேவன் கட்டளையிடுவதில்லை. ஏதேன் தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாளும் தேவனால் பாதுகாக்கப்பட்டார்கள். ஆனால் அவர்கள் கீழ்ப்படியாமல் போனபோது, தேவன் தன்னுடைய அரவணைப்பை நீக்கிவிட்டார். அந்த ஒரு சூழ்நிலையை மனுக்குலம் இந்நாள் வரைக்கும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இப்போது தேவனுடைய பாதுகாப்பை தேடுபவர்களுக்கு அவர்களுடைய ஜீவனை வேதனைகளிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் விடுவிக்காமல் போனாலும் தேவன் மீண்டும் அதை கொடுப்பவராக இருக்கிறார்.

அவர்களுடைய ஒவ்வொரு அனுபவங்களிலும், தேவனுடைய விசேஷித்த பராமரிப்பை பெற்றாலும் இந்த உலகத்தில் அனுபவங்களின் விளைவாக பல வீழ்ச்சிகளையே கண்டடைகிறார்கள்.

தேவனுடைய நோக்கங்கள் இந்த உலகத்தில் செயல்படுவதற்கு ஏற்ற வாய்ப்புகள் இல்லை என்று அறிந்தும், அவருடைய திட்டங்கள் அனைத்தையும் மாற்றும் என்று நாம் எதிர்பார்த்திருப்பதினால், நமக்கு மிகுந்த நம்பிக்கை உண்டாயிருக்கிறது. மேலும், தேவனை நேசித்து மகிமைப்படுத்துபவர்களுக்கு நித்திய சமாதானம் உண்டு. இறுதியாக, அவரை அவமதிக்கும் மதீயினர்களை தேவன் நியாயம் விசாரிப்பார். தேவன் நீதியும், பரிசுத்தமுள்ளவர் என்று தொடர்ந்து நிரூபிக்கப்படுவது மட்டும் அல்ல, - "அவர் சத்தியமுள்ளவரும், அநீதியில்லாதவரும் " என்று கூறப்படுகிறது. " அவர் கன்மலை, அவர் கிரியை உத்தமமானது, அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன், அவர் நீதியும் செம்மையுமானவர்."(உபா 32:4) "அதற்குள் இருக்கிற கர்த்தர் நீதியுள்ளவர், அவர் அநியாயஞ்செய்வதில்லை, அவர் குறைவில்லாமல் காலைதோறும் தம்முடைய நியாயத்தை விளங்கப்பண்ணுகிறார், அநியாயக்காரனோ வெட்கம் அறியான். " (செப்ப 3:5)

"தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனே, அநியாயத்தை நோக்கிக்கொண்டிருக்கமாட்டீரே. .." (ஆப 1:13) என்று ஆபகூக் தேவனை குறித்து எழுதியிருக்கிறார். "சோதிக்கப்படுகிற எவனும் நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பனாக, தேவன் பொல்லாங்கினால்

சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல." (யாக்கோபு 1:13) என்று யாக்கோபு எழுதியிருக்கிறார். மேலும் ஐந்தாம் சங்கீதத்தில் - "நீர் துன்மார்க்கத்தில் பிரியப்படுகிற தேவன் அல்ல, தீமை உம்மிடத்தில் சேர்வதில்லை. வீம்புக்கரார் உம்முடைய கண்களுக்கு முன்பாக நிலைநிற்கமாட்டார்கள். அக்கிரமக்காரர் யாவரையும் வெறுக்கிறீர்." (சங் 5:4,5) என்று வாசிக்கிறோம். ஆகவே இன்று நாம் காணும் "தீமை" தற்காலிகமானது.

## தேவன் உண்மையில் அக்கறையுள்ளவர் - வசனம் 19:20

*அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார். கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்.*

இயேசுவின் ஊழியக்காலம் முழுவதற்கும் அதிகமான தேவபெலன் தேவைப்பட்டது. ஆகவே அவர் தன்னுடைய பரலோக பிதாவை நோக்கி ஜெபித்தார். நம்முடைய எஜமானனுக்கே பெலன் தேவைப்பட்டதானால், நமக்கும் தேவனுடைய பெலன் எவ்வளவு அவசியம் என்று எண்ணிப்பாருங்கள். நாம் அவரிடம் கெஞ்சி மன்றாடும் போது அவர் நமக்கு பதில் அளிப்பார் என்ற நம்பிக்கையை பெறுகிறோம். எல்லாவற்றிலும் தேவனே நம்மை பெலப்படுத்துவார் என்று நாம் முழுமையாக அவருடைய நாமத்தின்மேல் விசுவாசம் வைப்பது, அவருக்கு மிகவும் பிரியமானதாக இருக்கிறது. இன்றைய தீமையான நாட்களில் இப்படிப்பட்ட பாதுகாப்பும், அரவணைப்பும், தனிப்பட்ட அன்பும் பெறுவோம் என்று நாம் இன்று உறுதி பெற்றிருப்பது எவ்வளவு அற்புதமான காரியமாக இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளை தேவன் அனுமதித்தாலும், அவருடைய திட்டங்களுக்கு இசைவாக இராத அனைத்தையும் இறுதியில் நித்தியமாக அழித்துவிடுவார் என்று தேவன் அறிவிக்கிறார்.

இன்று இந்த உலகத்தில் அநேக தீமையான கோட்பாடுகள் செயலாற்றி கொண்டிருக்கிறது. இவையனைத்தையும் சாத்தான் அசுத்த ஆவிகளை கொண்டு வழிநடத்துகிறான். என்று சில வசனங்கள் சாத்தானை குறித்து பேசுகிறது. "அவன் ஆதியிலிருந்து மனித கொலைபாதகனாக இருக்கிறான்" என்றும் "அவன் பொய்யனும் பொய்க்கு பிதாவுமாக இருக்கிறான்" என்றும் இயேசு பகிரங்கமாக அறிக்கையிட்டார். (யோவா 8:44) மேலும் - "அவர்களை அவர் நோக்கி - சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதை...." அவர் கண்டதாக கூறினார். (லூக்கா 10:18) "... மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்..." என்று எபிரெ 2:14ம் வசனம் சாத்தானைக் குறித்து குறிப்பிடுகிறது.

ஆயிரவருடத்தின் முடிவில், கிறிஸ்து பாவத்தை முழுமையாக ஜெயித்திருப்பார், அப்போது சாத்தான் நித்தியமாக அழிக்கப்படுவான். அப்போது அண்டசராசரமும் முழுவதும் தேவனுக்கு முழுமையாக இசைந்திருக்கும். அப்போது தேவனே சகலத்திலும் சகலமுமாக இருப்பார். (1கொரி 15 :28) அதற்கு பின் நித்தியத்திற்கும் அவருடைய சித்தத்திற்கு எந்த விதமான எதிர்ப்புகளும் இராது. அக்காலத்தில் நித்தியமாக ஜீவனை பெற்றவர்கள் தங்களையோ, மற்றவர்களையோ வஞ்சிப்பதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்.

"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்." (1தீமோ 2:4) என்று பவுல் எழுதுகிறார். ஆதாமின் மரணத்தின் மூலம் அகப்பட்ட முழு மனுக்குலம் இயேசுவின் ஈடுபலியின் மூலம் மீட்கப்படுவார்கள். அதற்கு பின் கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியில் அனைவரும் சாதகமான சூழ்நிலையில் சத்தியத்தின் அறிவு துல்லியமாக கொடுக்கப்படும். இந்த அறிவை பெற்றபின், அவர்கள் தேவனை நேசிக்கத் துவங்குவார்கள். மேலும் அவருடைய கற்பனைகளையும், கோட்பாடுகளையும் பூரணமாக கீழ்படிந்து அவர்மேல் வைத்திருக்கும் அன்பை மனுக்குலம் வெளிப்படுத்தும் போது, நித்தியமாக ஜீவனை பெற அவர்கள் வரவேற்கப்படுவார்கள்.

## தேவன் புகழப்படுவாராக - வசனம் 21

*"என் வாய் கர்த்தரின் துதியைச் சொல்வதாக, மாம்சதேகமுள்ள யாவும் அவருடைய பரிசுத்த நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கக்கடவது."*

நம்முடைய எல்லா காரியங்களிலும் தேவனை துதிக்கலாம் என்று நாம் சொல்லும்போது, அவரை துதிப்பதற்கான காரியங்கள் இன்னும் பல உண்டு. ஒரு கிருபையின் முடிவு மற்றொரு கிருபையின் துவக்கமாக இருக்கிறது. அதேபோல் ஒரு காரியத்திற்கு நாம் நன்றிகளை ஏறெடுத்து முடிக்கும் போது நாம் அதற்கு பின் பெற்ற நன்மைக்கு நன்றி சொல்ல வழிவகுக்கிறது.

ஆகவே, நம்முடைய உயிர் மூச்சுள்ளவரை, அவருடைய நாமத்தை தொடர்ந்து துதித்து மகிழ்வோம்.



# புதிய வருடத்திற்கான சிந்தனைகள்

Reprinted from *The Herald of Christ's Kindom,* January1, 1923, pp.3,4

கடந்த சம்பவங்களையும், இனி நடக்க போகிற சம்பவங்களையும் பிரதிபலிக்க - பிறக்க போகிற புது ஆண்டின் விடியல் நேர்த்தியான நேரமாக இருக்கிறது. தெய்வீக கிருபைகளையும் ஐசுவரியமான ஆசீர்வாதங்களையும் மேலும், நடந்த சம்பவங்களுக்காக நாம் அதிகதிகமாக நன்றிகளை ஏறெடுக்கக்கூடியவர்களாக இருக்கிறோம். தேவனுடைய புத்திரராகக்கூடிய மிக பெரிய சிலாக்கியத்தையும், கிறிஸ்துவுடன் பங்காளிகளாக, அழியாமையை நித்திய சுதந்திரமாக அடைவதற்கு உண்டான அழைப்பே இந்த தெய்வீக கிருபைக்குள் அடக்கப்பட்டிருக்கும் தெய்வீக சத்தியத்தின் ஞானமாக இருக்கிறது. இப்படியாக, அழைக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்டு, இறுதிவரையில் விசுவாசத்தில் நிலைநின்று அவருடைய நோக்கத்தின்படி கிரியை செய்வோருக்கு மாறாத, நிலைமை பரலோகத்தில் முன்கூட்டியே பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. முழு மனுக்குலத்தையும் நீதிமான்களாகி, சீர்பொருந்த செய்து, நம்முடைய தந்தை ஆதாம் முதல் முதலில் பெற்றிருந்த தெய்வீக ரூபத்தையும், சாயலையும் திரும்ப கொடுக்கப்போகிறார் என்ற காரியம் உண்மையில் மிக பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தியது. மேலும், விசுவாசத்தினால் இந்த விசேஷித்த வாக்குத்தத்தை அதிகாரப்பூர்வமாக உணர்ந்து, கிறிஸ்துவின் விலையேற பெற்ற இரத்தத்தினால் நாம் மீட்கப்பட்டு மரண நிலையிலிருந்து ஜீவனுக்குள் பிரவேசித்திருக்கிறோம் என்றும் தேவன் குறித்த காலத்தில் சகல மகிமைகளையும், ஆசீர்வாதங்களையும் நித்தியமான பொக்கிஷங்களையும் நமக்கு கையளிப்பார் என்ற காரியங்களை அறிந்தபோது மிகுந்த சந்தோஷம் அடைந்தோம். மேலும், தேவனுடைய நோக்கத்தை அறிந்து நடக்கும் இவர்கள், இந்த விலையேறபெற்ற வாக்குத்தத்தங்களுக்கும் மேலாக, தன்னுடைய ஒரே பேரான குமாரனுக்கு உடன் பங்காளிகளாகவும், மணவாட்டியாகும் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

அதற்கு பின், இந்த அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் கூடுதலாக, இந்த வருடம் முழுவதும் நாம் ஆசீர்வதிக்கப்பட்டோம். மேலும் நாம் அநேக வருடங்களாக மரண இருளில் பள்ளத்தாக்கில் நடந்தாலும், கர்த்தரின் கோலும், தடியும் நம்மை தேற்றி விசாலமான பாதையில் நாம் அலைந்து திரியாதபடி குறுகலான பாதையில் நம்மை நடத்தினார். நம்மை வழிநடத்தி சிட்சித்து சீர்பொருந்த செய்யும் கோலானது , நம்முடைய நிர்விசாரத்திலிருந்தும் நம்மை தட்டி எழுப்பி, அந்த பாதையில் வேகமாக நடக்க எப்படியாக தூண்டுகிறது என்ற சிந்தித்து பாருங்கள் -" அன்றியும் - என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார், தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே. ..." (எபி 12:5-8) என்றும் நாம் வாசிக்கிறோம்.

### "என் சத்துருக்கள் நடுவில் ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி "

ஆவிக்குரிய வகையில் நாம் அனைவரும் அதிகதிகமாக விருந்துண்டிருக்கிறோம். இந்த தற்காலிகமான உலகத்தில், எந்த சூழ்நிலைகளில் நாம் இருந்தாலும், சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்ற நம்பிக்கையுடன், போதும் என்கிற மனதுடன் கூடிய தெய்வ பக்தியே மிகுந்த ஆதாயம் என்று எண்ணி, நம்முடைய முழு இருதயத்தோடு "தேவனுக்கு நன்றிகளை ஏறெடுப்போம்". இனி வரக்கூடிய ஆண்டிலும், நம்முடைய உதடுகளின் பலியை மட்டும் அல்ல, நம்முடைய ஜீவனையே அவருக்கு சுகந்த வாசனையாக பலிசெலுத்த வேண்டாமா ?

அன்பானவர்களே, இன்றே கர்த்தரோடு ஒரு புதிய உடன்படிக்கை செய்துகொள்ளுங்கள். நாம் முன்னதாக உடன்படிக்கை செய்திருந்தாலும், இன்று நாம் அதை புதுப்பித்து கொள்வோம். நாம் நம்மை முழுமையாக அவருடையவர்கள் என்று அறிக்கையிடுவோம். இனி நம்மையே முழுமையாக பலி பீடத்தின் மேல் அர்ப்பணித்து, முழுமையாக தேவனுடைய விருப்பத்தை செய்வதற்கு பலிசெலுத்தப்படும் வரைக்கும் காத்திருப்போம். மேலும் இன்றைய தினத்திலிருந்து, நாம் செய்து கொண்ட உடன்படிக்கையில் அனைத்து பொருத்தனைகளையும் படிப்படியாக நம்முடைய உன்னதமானவரின் முன்னிலையில் நிறைவேற்ற துவங்குவோம்.

நாம் கடந்த நாட்களை திரும்பி பார்க்கும் போது, நம்மால் முடிந்த வரையில் செய்த மிகச்சிறந்த கிரியைகளும், அபூரணமாக காட்சியளிப்பதை நமக்கு துக்கத்தை தருகிறது. அதே நேரத்தில் நமக்கு முன் சிங்கம் போல பிரச்சனைகள் நம்முடைய பாதையை

தடுத்திருக்கிறது. ஆகவே நம்முடைய ஒவ்வொரு தேவையான நேரங்களிலும் நம்முடைய அசையா தைரியத்தை தெய்வீக கிருபைகளை விசேஷித்த வாக்குத்தத்தங்களை கொண்டு ஊக்குவிக்கவேண்டும். "அவன் என்னை நோக்கி கூப்பிடுவான், நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச்செய்வேன்" என்றும் "அவனை தப்புவித்து, அவனை கனப்படுத்துவேன்" என்று தேவன் நமக்கு ஆசீர்வாதமான வாக்குறுதியை அளித்திருக்கிறார்.

நாம் தேவனுடைய சர்வாயுதங்களை முழுமையாக பெற்றிருக்கிறோம். இன்று நாம் அதை முழுமையாக அணிந்தால் எதிராளியின் பொறிபறக்கும் அம்புகள் நம்மை சேதப்படுத்த வாய்ப்பில்லை. ஏனெனில், நம்முடைய பாதையில் அநேக கண்ணிகளும், அபாயங்களும் இருப்பதாக எச்சரிக்கப்படுகிறோம். இவையணைத்தையும் தவிர்த்து, மேற்கொள்ள, நம்முடைய ஆண்டவர் நாம் செய்யவேண்டிய காரியங்களை பட்டியலிட்டு கொடுத்திருக்கிறார். இவைகளை நாம் அவருடைய தலைமையில் செயல்படுத்த வேண்டும். அவருடைய தொடர்ச்சியான பிரசன்னம் நம்முடன், நம்முடைய மரண பரியந்தம் நிலைத்திருக்கிறது. சகல போராட்டங்களின் மத்தியிலும் நம்மை ஊக்குவிக்கக்கூடிய அவர் குரல் நமக்கு கேட்டு கொண்டே இருக்கிறது.

"பயப்படாதே, உங்கள் பிதா உங்களுக்கு இராஜ்யத்தை கொடுக்க மகிழ்ச்சியாக இருக்கிறார்." "சந்தோஷப்படுங்கள், நான் அனைத்தையும் ஜெயித்தேன், உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, உங்களுக்கு எதிராக இருப்பவர்களைக் காட்டிலும் உங்களில் இருப்பவர் பெரியவர்."

நாம் பலவீனமாக, சோர்ந்து போன இருதயங்கள் உள்ளவர்களாக இருந்தால் - "தேவன் அவருடைய ஜனத்திற்கு பலத்தை கொடுப்பார்" - என்ற ஆசீர்வதிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை நினைவில் கொள்ளவேண்டும். நாம் விசுவாசத்தோடு செய்யும் கிரியைகளில் தேவனை மகிமைப்படுத்தினால், நமக்கு காணக்கூடிய மற்றும் காண்கிற எதிரிகளிடமிருந்த நம்மை மகிமையாக விடுவிப்பார்.

## நம்முடைய பொருத்தனைகளை நாம் எப்படிச் செலுத்துவோம்

உண்மையாக, உடன்படிக்கை செய்த அனைவரிடமும் கேட்கவேண்டிய மிக முக்கியமான ஒரு கேள்வியாகும். நாம் உடன்படிக்கை செய்தபோது, எல்லாவற்றையும் நாம் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்தோம். அதாவது நம்முடைய நேரம், சொத்து, உடல் ஆரோக்கியம், சிந்தை, அறிவு, தாலந்து போன்ற அனைத்தும் இதில் அடங்கும். மேலும் "உலகத்தைச் சார்ந்த நம்முடைய ஆசா-பாசங்கள், குறிக்கோள், இலட்சியம், அனைத்தையும் தியாகம் செய்து விடுகிறோம்" என்று நாம் உடன்படிக்கையின் போது நாம் பொருத்தனைகள் செய்தோம். மேலும் நாம் பெற்ற தாலந்துகள், சொத்துக்கள், நேரங்கள் திறமைகள், உடல் நலன்கள் அனைத்தையும் உலகத்திற்கு அல்ல, தேவ பணிக்காக செலவு செய்வோம் என்றும் நாம் வாக்களித்தோம்.

நாம் பெற்ற அனைத்து தாலந்துகளையும் மிக ஞானமாகவும் கவனமாகவும் தேவனுடைய காரியங்களுக்கு அதாவது தேவனுடைய ஊழியங்கள் மற்றும் அவருடைய திட்டத்திற்காகவும் அவருடைய பிள்ளைகளுக்காகவும், பயன்படுத்த வேண்டுமே தவிர அதை வெறெந்தவிதமான குறிகோளுக்காக நமக்குள் தேக்கி வைக்கக்கூடாது.

நாம் நம்முடைய பொருத்தனைகளை உன்னதமானவருக்கு எவ்வாறு செலுத்த வேண்டும் என்று நம்முடைய ஆண்டவர் "தாலந்து" உவமையில் (மத்தேயு 25:14-30) மிக தெளிவாக எடுத்துக்காட்டுகிறார். அவர் -"ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல் இருக்கிறது. அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும் ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாகக் கொடுத்து, உடனே பிரயாணப்பட்டுப் போனான்" என்றார்.

மிக முக்கியமானதும், விலையேறப்பெற்ற வேலைகளை தன்னுடைய ஊழியக்காரர்களுக்கு அவர்களுடைய எஜமான் கையளிக்க வேண்டியதாக இருந்தது. அவர்கள் அனைவரும் விசுவாசத்தோடு கொடுக்கப்பட்ட வேலைகளை செய்ய கடமைப்பட்டிருந்தார்கள். அவர்களால் செய்ய திராணியில்லாத வேலைகளை அந்த எஜமான் அவர்களிடம் எதிர்பார்க்கவில்லை. ஆனால் இரண்டு தாலந்து கொடுத்தவரிடம் எதிர்பார்ப்பதை விட ஐந்து தாலந்து கொடுத்தவரிடம் அதிகமாக எதிர்பார்த்தார். ஐந்து தாலந்து பெற்றவர் பத்தாகவும், இரண்டு தாலந்து பெற்றவர் நாண்கு தாலந்துகளை திரும்ப கொடுத்தபோது எஜமான் ஒரே விதமாக பாராட்டினார் - "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய் அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி... "

அதே போல் ஒரு தாலந்து பெற்ற ஊழியக்காரன் தன்னுடைய தாலந்தை இரட்டிப்பாக்கியிருந்தால், அதே பாராட்டை பெற்றிருந்திருப்பார். ஆனால் அவரோ அதை புதைத்து வைத்தார். இவ்வுலகத்து மனுக்குலத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, தாலந்துகள் கொடுக்கப்படவில்லை என்று இந்த உவமையில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. மாறாக அந்த எஜமான் "தன் ஊழியக்காரர்களுக்கு" - அதாவது உடன்படிக்கை செய்த விசுவாசிகளுக்கு மட்டுமே தாலந்துகளை கொடுத்தார் என்பதை நாம் கவனிக்கவேண்டும். மேலும் எந்த ஊழியக்காரரும்

தாலந்துகள் கொடுக்கப்படாமல் விட்டு விடப்படவில்லை என்பதையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். ஏதோ பயனுள்ள முக்கியமான பொறுப்புக்கள் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு தாலந்தையாவது பெற்றார்கள். அந் [illegible] ாத பெற்றவர்கள் எஜமான் வரும்போது அதற்கு ஏற்ற கணக்கை ஒப்புவிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால், ஒரு தாலந்து பெற்ற ஊழியக்காரன் தன்னுடைய எஜமானனுக்கு விசுவாசமாயிருக்கவில்லை. ஆனாலும் அவன் தன்னை ஒரு ஊழியக்காரனாக எண்ணிக்கொண்டிருந்தான். மேலும், அந்த தாலந்தை செலவழிக்காமல் பத்திரமாக வைத்திருப்பதற்காக எஜமான் தனக்கு பரிசளிக்கவேண்டும் என்றும் எதிர்பார்த்தான். ஏனெனில் அவன் தாலந்தை செலவழிக்காமல் இருப்பதில் மிகவும் கவனமாக இருந்தான். அவன் கர்த்தருக்கு எந்த விதமான எதிரான காரியங்களையும் செய்யவில்லை. அவன் பெற்ற தாலந்தை செலவழிக்காமல் புதைத்து வைத்து மட்டுமே அவன் செய்த தவறாக இருந்தது.

எஜமான் திரும்பி வந்தபோது - "ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து - ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன். ஆகையால், நான் பயந்து போய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன், இதோ, உம்முடையதை வாங்கிக்கொள்ளும் என்றான். அவனுடைய எஜமான் பிரதியுத்தரமாக - பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனே, நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவனென்றும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவனென்றும் அறிந்திருந்தாயே. அப்படியானால், நீ என் பணத்தைக் காசுக்காரர் வசத்தில் போட்டுவைக்க வேண்டியதாயிருந்தது. அப்பொழுது, நான் வந்து என்னுடையதை வட்டியோடே வாங்கிக்கொள்ளுவேனே."

இந்த ஊழியக்காரன் துன்மார்க்கன் என்று அழைக்கப்படவில்லை. அவன் எந்த காரியமும் செய்யாமல் அமைதலோடிருந்தான். தன்னை ஒரு ஊழியக்காரன் என்றும் அழைக்கப்பட விரும்பினான். ஆனால் எஜமானனின் வணிகத்தில் அவன் எந்த விதமான ஆர்வமும் காட்டவில்லை. அவருக்கு எதிராகவும் அவன் செயல்படவில்லை, மற்ற ஊழியக்காரர்கள் கடுமையாக வேலை செய்வதை கண்ட அவன் சந்தோஷப்பட்டான். மற்றவர்களின் வேலைகளில் அவன் குறுக்கிடவுமில்லை. ஆனால் ஊழியக்காரனாக எஜமானிடத்தில் அவன் பெற்றிருந்த பொறுப்புகளை அவன் உணரவில்லை. மேலும் அவன் தன்னுடைய எஜமானனுடைய காரியங்களில் எந்த விதமான அக்கறையும் காட்டவில்லை. ஆகவே அவன் பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனாக இருந்ததால், அவன் உடன்படிக்கையை முறித்தவனான். இப்படியாக அவன் ஒரு துன்மார்க்கனும், எஜமானின் வருகையின் போது மேலும் அதிகமான பொறுப்புகளை ஒப்புக்கொடுப்பதற்கு அவன் நம்பிக்கையற்ற அபாத்திரனானான்.

ஆனால் இது உண்மை சம்பவம் அல்ல என்று நாம் உணரவேண்டும். உண்மைகளை எடுத்துக்காட்ட ஒரு கதை சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கை இந்த எடுத்தகாட்டுக்கு பொருந்தினால் நாம் இப்போதே எச்சரிப்பை பெறுகிறோம் என்பதை மனதில் வைத்து கொள்ளவேண்டும். நம்முடைய நிர்விசாரத்திலிருந்தும், சோர்வுகளிலிருந்தும் எழுந்து, நமக்குள் இருக்கும் குறைகளை நிவர்த்தி செய்து, நமக்களிக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கே நாம் இந்த உவமையின் மூலமாக தூண்டப்படுகிறோம். தன்னுடைய ஊழியக்காரர்கள் தங்களால் முடிந்த வரைக்கும் அவருடைய சித்தத்தை செய்ய வேண்டும் என்று எஜமான் எதிர்பார்க்கிறார். ஆகவே நாம் ஒரு தாலந்து பெற்றவர்களாக இருந்தால், நாம் புதைத்து வைக்கக்கூடாது. அதை பயன்படுத்தி மற்றும் ஒரு தாலந்தை சம்பாதிக்க முயற்சிக்கவேண்டும். உங்களால் முடிந்த அனைத்து காரியங்களையும் அதாவது நம்முடைய வாழ்க்கையில் நாம் செய்த உடன்படிக்கையின் பொருத்தனைகளை நிறைவேற்ற முயற்சி செய்யவேண்டும். மேலும், அதிகமான தாலந்துகளை பெற்றவர்கள், தாங்கள் பெற்ற தாலந்தின் அளவிற்கு விசுவாசமுள்ளவர்களாக இருக்கிறோமா என்று நம்மை நாம் சோதித்தறிய வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு தாலந்து வாங்கினவர்களோடு இவர்கள் தங்களை என்றுமே ஒப்பிட்டுபார்க்கக்கூடாது. அப்படி செய்பவர்களை பார்த்து - "நல்லது உத்தமமும், உண்மையுள்ள ஊழியக்காரனே" என்று எஜமான மெச்சிகொள்ள கொடுக்கமாட்டார். தாங்கள் பெற்ற வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்துபவர்களே இப்படிப்பட்ட சாட்சியை பெறுவார்கள். நம்முடைய குடும்பங்களின் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்த பின் இருக்கும் சகல வாய்ப்புகளையும், தாலந்துகளையும் நாம் தேவ பணிக்கு அர்ப்பணிக்கவேண்டும்.

நாம் ஐந்து தாலந்துகள் பெற்றிருந்து, இரண்டு தாலந்துகளை மட்டுமே பயன்படுத்தினால் - எஜமான் நம்மை எப்படி மெச்சிக் கொள்வார் ? பெற்ற அனைத்தையும் - பணம், நேரம், செல்வாக்கு, சிந்தை, திறமைகள் - அவருக்கென்று பயன்படுத்த உடன்படிக்கை செய்திருக்கிறோம் அல்லவா ? கடந்த வருடங்களில் எந்த அளவிற்கு விசுவாசத்தோடு நடந்தோம் என்பதை சற்றுத் திரும்பி பாருங்கள். நம்முடைய நியாயத்தீர்ப்பை எப்படி சந்திக்கப்போகிறோம்? இனி வரக்கூடிய வருடத்தில் நாம் எப்படிப்பட்ட விசுவாசத்தில் நிலைத்திருக்கபோகிறோம்? நமக்கு தேவையான சகலத்தையும் நாம் பெற்றிருக்கும் போது, நாம் பெற்ற தாலந்துகளை பயனுள்ள (தேவ காரியங்கள்) காரியங்களுக்கு செலவழிப்போம். உண்மைக்கும், பக்திக்கும் உண்டான பரிட்சைகள் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே நாம் பார்த்த காரியங்களை அலட்சியப்படுத்தாமல், சிந்தித்து செயல்படுவோம்.

# வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர் - சங்கீதம் 65:1

கடந்துபோன வருடத்தில் தெய்வீக கிருபையின் வழிநடத்துதலை நாம் திரும்பிப் பார்க்கையில், தேவனுடைய நன்மையும், இரக்கமும் அவர் மேல் நாம் கொண்டிருக்கும் நம்முடைய விசுவாசம் மற்றும் நம்பிக்கையை வரப்போகிற வருடத்திற்குள் அதிகரிக்கசெய்வேண்டும். தேவனுடைய உண்மையான பிள்ளையாக இருந்து உண்மையில் கடந்த வருடத்தை திரும்பிப் பார்க்கையில் அது நம்மை கடந்த நாட்களுக்கான நன்றிகளை ஏறெடுக்கச்செய்வதோடு மாத்திரமல்லாமல், நம்முடைய தலையை உயர்த்தி நம்முடைய இரட்சிப்பு முன்பைக் காட்டிலும் சமீபித்திருப்பதை உணரவேண்டும். அதோடு நாம் நம்முடைய சித்தத்தையும், வாழ்க்கையும், நமதனைத்தையும் அவருடைய ஞானம் மற்றும் அன்பான பராமரிப்பிற்கு உட்படுத்தி இருக்கும் வரையில், நம்மில் நற்காரியங்களை துவங்கினவர் அதை நிறைவேற்றவும் வல்லமையுள்ளவர் என்பதையும் உணரவேண்டும்.

*- Reprints, p. 2738*

## உன் ஆசீர்வாதங்களை எண்ணிப்பார்

நாளின் முடிவில் எண்ணாதே
வாழ்க்கை களஞ்சியத்தில் அன்றாட இழப்பை;
லாபங்களை அது எவ்வளவு சிறிதாயினும்
அன்றாடம் எண்ணு அனைத்தையும்;
இனிய வார்த்தை ஒவ்வொன்றையும்,
நீ கேள்விகொடுத்த மகத்துவ சத்தியம் ஒவ்வொன்றையும்,
மென்மையான பார்வை [illegible] ஒவ்வொன்றையும்,
நீ அறிந்த நற்கிரியை ஒவ்வொன்றையும்,
களிப்புடன் நிறைவேற்றிய கடமை ஒவ்வொன்றையும்,
ஜெயங்கொண்ட நேர்மையான வெற்றி ஒவ்வொன்றையும்
மேன்மைப்படுத்தி அவைகளை எண்ணு
தன் களஞ்சியத்தை கருமி எண்ணுவது போல

ஒருவேளை கசப்பான வார்த்தை அல்லது சிந்தனை
கசப்பான அறுவடை கொண்டுவந்திருந்தாலும்,
ஒரு மனிதன் உன்னை தாக்கியிருந்தாலும்,
அல்லது நம்பிய சிநேகிதன் உன்னை கைவிட்டிருந்தாலும்,
ஒருவேளை கொடூரமும் அசுத்தமும்
விரும்பா இழப்பை உனக்கு கொண்டுவந்திருந்தாலும்
தாமதியாமல் அகற்று தழும்புகளை
அருவருப்பை பதிவு செய்யாதே
கவலைகளை பதிவு செய்யாதே,
இடரும் சிலுவையும் நாம் சுமக்கவேண்டியதே,
நியாயமாக பக்கங்களில் எழுது
நேர்மையும் பிரகாசமுமானதை

திரையனைத்தும் விலகட்டும்,
அப்பொழுதும் விடாமுயற்சி முயலட்டும்
மனமார்ந்த மகிழ்ச்சி பெருகட்டும்
இவ்விதம் நீ அறிவாய் நல்விசுவாசத்தில் வரும்,
மாபெரும் பலன்,
மேகமும் மழையும் வந்த பின்.

*Poems of Dawn, pp.131,132*

தீர்க்கதரிசனத்தில் இன்று

# அணுஆயுத போரின் அச்சுறுத்தல்

"உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும், பலவீனனும் தன்மைப் பலவான் என்று சொல்வானாக." - யோயேல் 3:10

**வட**கொரியா ஏற்கனவே நிலையில்லாது இருக்கும் இவ்வுலகை மே மாதம் மீண்டும் உலுக்கியது. ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சங்கத்தின் எச்சரிப்பையும் மீறி வட கொரியா இரண்டு குறுகிய ஏவுகனை சோதனையையும், ஒரு அணுஆயுத வெடிகுண்டை பூமியின் அடியில் வெடிக்க செய்தும் இரண்டு சோதனைகளை மேற்கொண்டது. தென் கொரிய சட்ட ஆலோசகர்கள் தற்கொலை செய்து கொண்ட தங்கள் தலைவரை பற்றிய துக்கத்தில் தவித்துக் கொண்டிருக்கும் பொழுது, இவ்வித அணுஆயுத சோதனைகளை வடகொரியா மேற்கொள்ளப்போகிறது என்ற விவரம் கடைசி நேரத்தில் தான் தெரியவந்தது.

தேசங்கள் கொந்தளித்தது, பிரன்ச்சு தேசம் வட கொரியாவிற்கு எதிராக புதிய தீர்மாணங்களை கொண்டு வந்தது. அமெரிக்காவும், ஜப்பானும் வடகொரியாவை எதிர்த்து உறுதியான முடிவுகளை தினித்தது. ரஷ்ய நாட்டு தலைவர்கள் வட கொரியா நடத்திய இந்த அணுஆயுத சோதனையை இரண்டாம் உலக போரின் போது அழிக்கப்பட்ட ஹிரோ ஷிமா நாகாசாகியின் அழிவிற்கு நிகராக ஒப்பிட்டனர்.

இந்த அணுஆயுத சோதனைகளின் தாக்கம் உலக நாடுகளின் மத்தியில் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தி இரண்டாம் உலக போருக்கு நிகரான ஒரு சூழ்நிலையை உருவாக்கியது. இவ்வித அணுஆயுதங்களின் பெருக்கம் தேசங்களின் மத்தியில் ஒரு வாக்குவாதத்திற்குரிய தொடர் செய்தியாகிவிட்டது. இப்பொழுது, வட கொரியாவின் அணுஆயுத சோதனையின் விளக்கத்தின் மூலம் ஒரு புதிய அணுஆயுத அச்சுறுத்தல்தோன்றி இருக்கிறது.

### அணுஆயுத சோதனைகள் மற்றும் அச்சுறுத்தல்களின் வரலாறு

20 கி. டன் எடையுள்ள முதல் அணுஆயுத சோதனை அமெரிக்கர்களால் ஜூலை, 1945ல் நிறைவேற்றப்பட்டது. இது 2000 டன்களுக்கு இணையாகும். 1945ல் ஜப்பானில் போடப்பட்ட, மிக பெரிய அழிவை ஏற்படுத்திய அணுகுண்டுகளின் தாக்கத்தின் விளைவாக எதிர் கால இராணுவத்தில் அணுகுண்டுகளின் பங்களிப்பு கேள்வி குறியாக இருந்தது.

1949 ஆகஸ்டில் ரஷ்யா செமி பாலாடின்ஸ்கு (Semipalatinsk) மற்றும் காசாக்ஸ்டான் (Kazakhstan)என்ற பகுதிகளில் அணுகுண்டு சோதனைகளை நடத்திய போது மறுபடியும் அணுஆயுத போரின் அறிகுறிகள் எழும்பியது. இதை தொடர்ந்து ஐக்கிய நாடுகள் 1952லும் பிரான்சு நாடு 1960 லும், சீனா 1964லும், தொடர்ந்து அணுஆயுத சோதனைகளை மேற்கொண்டனர்.

1962ல் க்யூபா நாடு அணுஆயுத போரின் போது அமெரிக்கா மற்றும் ரஷ்யா நாடுகள் சந்தித்த சூழ்நிலை தான் அணுஆயுத போரின் முக்கிய திருப்பு முனையாக அமைந்தது. ரஷ்யா பகுதி தூரம் தாக்கும் ஏவுகணைகளை க்யூபா நாட்டில் வைத்தது. இது அமெரிக்காவிற்கு 90 மைல் தெற்கில் அமைந்துள்ள இடம். இதற்கான காரணத்தை ரஷ்யா கூறியபோது அமெரிக்கர்கள் துர்க்கியில் வைத்த ஏவுகணைகளின் ஒரு பதிலடியாக இது அமைந்தது என்று விமர்சித்தது. இச்சமயத்தில் கெனடி மற்றும் குர்ஷே ஆகிய அதிபர்கள் மத்தியில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளை இவ்வுலகம் கூர்ந்து கவனித்தது. வல்லுனர்கள் அந்த பேச்சு வார்த்தைகளின் முடிவு போரில் கொண்டுபோய் விடும் என்று அஞ்சினார். ரஷ்ய க்யூபாவில் அணுஆயுதங்களை திரும்ப பெற்றுக்கொண்டபோது, இந்த சூழ்நிலை விலகியது. பின்னர் அமெரிக்காவும் இரகசியமாக தாம் துர்க்கியில் வைத்திருந்த தனது ஏவுகனைகளை செயல் இழக்கச்செய்தது.

அடுத்த அணுஆயுத அச்சுறுத்தல்1999ல் இந்தியாவின் கார்கில் போரின் போது மீண்டும் தொடர்ந்தது. பி. பி சி தொலைக் காட்சி பாக்கிஸ்தான் இந்தியாவிற்கு எதிராக அணுஆயுதங்களை பயன்படுத்தியதாக செய்தி வெளியிட்டது. மறுபடியும் இரண்டு வருடங்களுக்கு பின்பு இந்தியா பாகிஸ்தான் போர் அணுஆயுத போரின் அச்சுறுத்தலை கொண்டு வந்தது. சமீபத்தில் ஈரான் நாடு ஒரு அணுஆயுதத்தை உருவாக்கியுள்ளது. இது இஸ்ரயேல் தேசம் மற்றும் ஈரானின் சன்னி பிரிவினருக்கு எதிராக உபயோகப்படுத்தப்படலாம் என்ற அச்சம் நலவுகின்றது.

### பாதுகாப்பு வழி முறைகள்

பத்து ஆண்டுகளுக்கு மேலாக பல அரசாங்கங்கள் சர்வதேச கண்காணிப்பு அமைப்பை ஏற்படுத்தி வருகின்றனர். இதன் நோக்கம் 1999 ல் நிறுவப்பட்ட அணுஆயுத தடை ஒப்பந்தத்தை அமல்படுத்தவேண்டும் என்பதேயாகும். டனுபி நதியின் மீது நிறுவப்பட்டிருக்கும் ஒரு அலுவலகத்தில் உள்ள கணிபொறிகள் இவ்வுலகில் நடைபெறும் அணுஆயுத சோதனைகளின் அடையாளங்களையும் பூமியில் அணுஆயுத சம்மந்தமாக வாக்குறுதிகளையும் கண்காணிக்கின்றது. இந்த அணுஆயுத தடுப்பு ஒப்பந்தத்தை அமெரிக்கா நிராகரித்திருந்தாலும், பின்னர் நடைபெற்ற வட கொரியா அணுஆயுத சோதனையில் விளைவாக அமெரிக்கா அதிபர் பாராக்கு ஒபாமா கூறுகையில் இவ்வுலகம் ஒன்று திரண்டு "எழுந்து நின்று" வட கொரியா தனது அணுஆயுத சோதனைகளை கைவிட வேண்டும் என்று வலியுறுத்துமாறு அறிக்கை வெளியிட்டார்.

அணுஆயுத கட்டுப்பாட்டின் மையத்தின் கூற்றின் படி 1945 முதல் பல நாடுகள் தோராயமாக 128000 அணுஆயுதங்களை உருவாக்கியுள்ளது என்பதை எடுத்துரைக்கிறது. இதில் பல ஆயுதங்கள் செயல் இழக்கப்பட்டாலும் அமெரிக்கா மற்றும் ரஷ்யா தன் வசத்தில் 10,000 அணுஆயுதங்களை தேக்கி வைத்துள்ளது.

பெரும்பாலான அணுஆயுத சோதனைகள் தடைசெய்யப்பட்டிருந்தாலும், இங்கிலாந்து, பிரான்ஸ், இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகள் அணுஆயுதங்களை பதுக்கி வைத்துள்ளது. நமது கனிப்பின் படி தென் ஆப்பிரிக்காவுடன் இணைந்து இஸ்ரயேல் நாடும் சில அணுஆயுதங்களை தேக்கி வைத்திருக்கலாம். ரஷ்ய நாட்டுடன் சேர்ந்திருந்த சில நாடுகள் தற்போது தனி நாடுகளாக உருவாகியுள்ளது. இந்நாடுகள் வசமாகவும் அணுஆயுதங்கள் இருக்கலாம். தற்போது வட கொரிய நிகழ்த்திய அணுஆயுத சோதனை வரைக்கும் இந்த உலகம் அணுஆயுதங்களை பற்றி பெரிய அளவில் அறிந்திருக்கவில்லை. ஆயினும், கோர்டன் சாங்கு என்பவர் எழுதிய நியூக்கிலியர் ஷோடௌவுன் புத்தகத்தின் எழுத்தாளர் கூறுகையில் வட கொரியா இவ்வுலகத்தை வசப்படுத்தியிருக்கிறது என்றும் இதை விட மிக பெரிய அச்சுறுத்தல்அமெரிக்காவிற்கு வேறு இல்லை என்றும் அவர் கூறினார். மேலும் அவர் கூறுகையில், ஈரானியர்கள் மற்றும் சிரியர்கள் வட கொரியா தயாரிக்கும் எந்த அணுஆயுதத்தையும் பெற்றுக்கொண்டு இஸ்ரயேலுக்கு எதிராக தாக்குதல்களையும் நடத்தலாம் என்று கூறியிருக்கிறார்.

ஈரானியா அதிபர் மஹமூத் அஹமாடினிஜாடு, வட கொரியா நிகழ்த்திய அணுஆயுத சோதனையின் அதே நாளில் ஈரானின் அணுஆயுத சோதனையின் "நிறுத்திவைப்பு" இனிமேல் இல்லை என்று கூறினார். ஈரான் நாடு அணுஆயுதங்களை தயாரித்து கொண்டிருக்கிறது. இதை பயன்படுத்தி ஐரோப்பியா நாடுகளின் அமைப்பு மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஒரு அணுஆயுத பயமுறுத்தலை கூடிய விரைவில் ஏற்படுத்தக்கூடும்.

### பூமி ஒரு போதும் அழியாது

1945ல் இரண்டாம அணுஆயுத போருக்கு பின்னர் ஹிரோ ஷிமா நாகாசாகி மற்றும் டோக்கியோ பகுதிகள் திரும்பக் கட்டப்பட்டன. இம்மூன்று பட்டணங்களும் இன்று சிறப்பான பட்டணங்களோடு இருப்பது அல்லாமல், டோக்கியோ 28 மில்லியன் மக்கள் தொகை கொண்ட உலகில் மிக பெரிய ஜனத் தொகை கொண்ட பட்டணமாக விளங்குகிறது. க்யூபாவின் அணுஆயுத சோதனையை தொடர்ந்த அணுஆயுத போர்கள் ஏற்பட்டிருந்தால் அதன் விளைவு மிக கொடுமையாக இருந்திருக்கும். ரஷ்யாவின் பெறும் பகுதியும் ஐரோப்பாவின் சில பகுதிகளும் காணாமல் போயிருக்கும், இதில் அமெரிக்கா மட்டும் தப்பியிருக்கலாம்.

இந்த அணுஆயுத போர்களினால் ஏற்பட்ட அழிவுகளிலிருந்து மெதுவாக மீண்டு வரும் நிலையில் அழிவை ஏற்படுத்தும் நாடு (வட கொரியா) செய்த இந்த அணுஆயுத சோதனை இந்நாகரீக உலகம் முழுவதிலும் ஒரு ஒட்டு மொத்த பயத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தேசங்களை கட்டுபாட்டிற்குள் வைப்பது எப்படி என்பது கேள்விக்குரியாகயுள்ளது. இந்நாடுகள் மற்ற நாடுகளை வெளிப்படையாக அழிக்கவேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக இஸ்ரயேல் தேசம் இந்த குழப்பமான சூழ்நிலையை கையாளுவதற்கு போதுமான வழிமுறைகள் இல்லாத இத்தருணத்தில் இவ்வுலகம் ஒப்பந்தங்களின் மூலம் தீர்வு கொண்டு வரலாம் என்று நம்பாமல் கடந்த கால சரித்திரங்களை திருப்பிப் பார்க்கையில் ஒப்பந்தங்களெல்லாம் வீண் என்பது தெளிவுபடுத்துகின்றது. ஏனென்றால், வட கொரியாவும், ஈரானும், உலகின் மிக வலிமையான நாடுகள் என்று எண்ணப்படுவதற்கு தங்கள் அணுஆயுத யுக்திகளை நம்புகின்றனர். எனினும் வேதாகமம் இந்த பூமி அழிக்கப்படுவதில்லை என்று கூறுகிறது. வலிமையுள்ள நாடுகள் தாங்கள் நினைத்துக் கொண்டிருப்பதைபோல உண்மையில் வலிமையான தேசங்கள் இல்லை. "இதோ, ஜாதிகள் ஏற்றச்சாலில் தொங்கும் துளிபோலவும், தராசிலேபடியும் தூசிபோலவும் எண்ணப்படுகிறார்கள், இதோ, தீவுகளை ஒரு அணுவைப்போல் தூக்குகிறார். " (ஏசா 40 :15) மிக பெரிய நாடான எகிப்து இஸ்ரயேல் ஜனங்களை கைப்பற்றி தேவனுடைய திட்டத்தை முறியடிக்க முயன்றனர். ஆனால், அதை செய்வதற்குரிய வல்லமை அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. தேவன் தம் வல்லமையை நிச்சயமாக பயன்படுத்தி ஒன்று கூட்டப்பட்டுள்ள இஸ்ரயேல் தேசத்திற்கு எதிராக எந்த தேசம் வந்தாலும் முறியடிப்பார்.

இந்த பூமியின் எதிர்கால நிலையைக் குறித்த எந்த கேள்வி குறியும் நம்மிடத்தில் இருக்கவேண்டியதில்லை -" ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது, பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது." - பிரசங்கி 1:4

### திரும்ப கொடுத்தல் ஒரு உறுதியான வாக்குத்தத்தம்

தேவன் தமது சாயலில் ஆதாமை பூரண மனிதனாக சிருஷ்டித்தார் என்று வேதம் சொல்லுகிறது. ஆதாம் பாவத்திற்குள் விழுந்த பின்னர். (ஆதி 1:27, ரோம 5:12, பிர 7:29) தேவனுடைய அன்பும், இரக்கமும் ஆதாமுக்கு ஈடுபலியை தந்தது. இன்னும் வெகு சமீபத்தில் உள்ள எதிர்காலத்தில் ஆதாமும், ஏவாளும் ஆதியில் பெற்றிருந்த ஆசீர்வாதத்தை இம்முழு மனுக்குலமும் சுதந்தரித்துக்கொள்ளும்.

இம்மனுக்குலம் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் பரிபூரண நிலையை அடையும் பொழுது, தேவனுடைய இராஜ்யத்தின் ஒரு பகுதியாய் இப்பூமியை ஆளுகை செய்கின்றவர்களாக காணப்படுவார்கள். அவர்கள் மற்றவர்களை கட்டுபடுத்த வேண்டும் என்ற தேவை இருக்காது. ஆனால் தங்கள் சிருஷ்டிகர் தங்களுக்கு அளித்த ஆசீர்வாதங்களை பகிர்ந்து களிகூறுவார்கள். நமது ஆண்டவர் சீஷர்களுக்கு ஜெபம் செய்ய கற்றுக்கொடுத்த போது -"உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக."(மத் 6:10) என்று கூறினார். நாமும் இந்த ஜெபத்தை ஏறெடுத்து தேவனுடைய இராஜ்யம் இவ்வுலகத்தின் தீமைகளெல்லாம் வேறறுக்கும் என்பதை உணர்ந்து முழு மனுக்குலமும் சுகம் பெற்று தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வார்கள் என்பதை விசுவாசிப்பவர்களாக காணப்படவேண்டும்.


www.heraldmag.org

**வேத மாணவ ஐக்கிய சபை,**

**சங்கிலியாண்டபுரம் கிளை,**

**திருச்சி.Cell : 9244611241, 9688975724**